TAMIL NADU LEGISLATURE LIBRARY
23 JUN 1973
MADRAS

# தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1973 மார்ச் 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Training in First Aid for students*

*208 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to give compulsory training in first-aid to students in (1) High Schools and (2) Colleges in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS: Sir, in view of the complexities of the metropolitan society, will the Government come forward to equip our youngmen with this kind of education as the investment for imparting this education is much less?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, எல்லா மாணவர்களுக்கும் கட்டாயமாக முதல் உதவி பயிற்சி அளிக்கின்ற முயற்சி இல்லை என்று குறிப்பிட்டேன். ஆனால் என்.ஸி.ஸி.-யில் சேர்ந்திருக்கிற மாணவர்களுக்கும், கல்லூரி, பள்ளிகளில் படிக்கின்ற சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இப்பொழுது மாணவர்களுக்கு போக்கு வரத்தை ஒழுங்குபடுத்தும் பயிற்சி எல்லாம் புதியதாக அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அதே அடிப்படையில் முதல் உதவித் திட்ட பயிற்சியைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, அதிலும் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு வழி செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் குறிப் பிட்டபடி என்.ஸி.ஸி. பிரிவு, ஸ்கவுட்ஸ் பிரிவு இதில் சேர்ந்திருக்கும் மாணவர் களுக்கு இந்தப் பயிற்சி கட்டாயமாக சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. சில பள்ளிகளில் அவர்களே முயற்சி எடுத்து, முதல் உதவிப்பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. கேள்வி எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கப்படுமா என்பது தான். அதற்கான செயற்குறிப்பு எதுவுமில்லை. சில பள்ளிகளில் அவர்களே முன்வந்து இந்தப் பயிற்சியைச் சொல்லித் தருகிறார்கள்.

**திரு. கே. எ. வகாப் :** இப்பொழுது பள்ளிகளில் சாரணர் இயக்கம் அதிகப் படியாகச் செயல்படுத்தப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட முதல் உதவிப் பயிற்சி தருகிற விதத்தில் சாரணர் பயிற்சி பெறுகின்ற மாணவர்களை இன்னும் அதிகப்படியாகச் சேர்ப்பதற்கு ஏதேனும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எல்லா உயர்நிலைப் பள்ளி களிலும் சாரணர் இயக்கம் அமைக்க வேண்டும் என்ற ஒரு நோக்கம் உண்டு. அதற்கான முயற்சியை சாரணர் இயக்கம் எடுத்து வருகிறது.

### மாலைநேரக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள்

*** 209 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாலைநேரக் கல்லூரிகளில் பட்டப் பிற்காலப் படிப்பு ( Post-Graduate Course ) இவ்வாண்டு துவக்கப்பட்டு உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** மாலை நேரக் கல்லூரிகளில் பட்டப் பிற்காலப் படிப்பு (போஸ்டு கிராஜுவேட் கோர்ஸ்) இனிமேலாகிலும் துவக்கி நடத்து வதற்கு அரசு ஆலோசிக்குமா ? இதுவரையில் மாலைநேரக் கல்லூரிகளில் எந்த வகையான பட்டங்கள் தரப்படுகின்றன என்று அறிய இயலுமா ?

1973 மார்ச் 2]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாலைநேரக் கல்லூரிகளில் பெரும்பாலும் கலை இயல் பட்டங்கள் கொடுப்பதற்கு பட்டப்படிப்பு வரையிலும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. மேற்கொண்டு பட்டப் பிற்காலப் படிப்பு கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதைப் பற்றி பல்கலைக்கழகம் முடிவு செய்ய வேண்டும். சென்ற ஆண்டு கேட்டார்கள். சென்ற ஆண்டு காலத் தாழ்வு ஏற்பட்டுவிட்டது. அடுத்த ஆண்டு அதற்கான வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி பரிசிலிக்கும்படியாக பல்கலைக்கழகத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மேல்பட்டப் படிப்பு ஆர்ட்ஸ் ஸப்ஜெக்ட் என்று மட்டும் இல்லாமல் மற்ற ஸப்ஜெக்ட்களிலும் படிக்க வேண்டும் என்ற பரிந்துரையை அரசாங்கம் யூனிவர்ஸிடியிடம் சொல்லுமா? அப்படி இருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கலை இயலைத் தவிர மற்ற அறிவு இயல் பகுதிகள் முதலில் புகுமுக வகுப்பில் கொண்டுவரப்பட்ட பிறகு பட்டப் படிப்புக்குக் கொண்டு வரப்படுவது பற்றி யோசிக்கப்பட வேண்டும். கலை இயலில் மேல் பட்டப்படிப்பு புகுத்தப் படாததற்குக் காரணம், அதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகள் இல்லை. மேல்பட்டப் படிப்புக்கு வருகின்ற மாணவர்கள் இரவு 8, 9 மணி வரையில் ஆய்வுக் கூடங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். அதற்கான வாய்ப்பு பெருகியிருக்கிறதா என்று பல்கலைக்கழகம் கூறவேண்டும். முதலில் புகுமுக வகுப்பில் புகுத்துவதுபற்றி ஆலோசிக்க வேண்டும். அது பற்றி சிந்திக்கும்படியாக பல்கலைக்கழகம் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** மாலை நேரக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்கு இன்னும் தேவைக்கேற்ற அளவில் இடத்தை அளிப்பதற்கு அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது ஏறத்தாழ 9,000 பேர் மாலைநேரக் கல்லூரிகளில் மாநிலம் எங்கும் படிக்கிறார்கள். ஆகவே, இதை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புக்கூறுகள் ஆண்டுதோறும் பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**திரு. சோ. அழகர்சாமி:** இந்த மாலைநேரக் கல்லூரிகளில் பாலிடெக்னிக் கோர்ஸ், அதாவது எல்.ஸி.ஈ., எல்.ஈ.ஈ.-க்கு மேல், பட்டப் படிப்புக்குச் சேருவதற்கு 5 ஆண்டுகளுக்கு சர்வீஸ் செய்திருக்க வேண்டும் என்று இருப்பதை மாற்றி, இவர்கள் படிப்பு முடிந்தவுடனேயே மாலைநேரக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இதுபற்றி பல்கலைக்கழகம் முடிவு செய்ய வேண்டும். பல்கலைக்கழகத்திற்கு இந்தக் கருத்துரை அனுப்பப் விரும்புகிறேன்.

**திரு. ப. முத்துசாமி:** மாலைநேரப் படிப்பு சொல்லித்தருகிற முறை மதுரை பல்கலைக்கழகத்தில் நடைமுறையில் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சில கல்லூரிகளில் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விவரம் திரட்டித் தரப்படும்.

**திரு. என். கிட்டப்பா:** மாலைநேரக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலுவதற்கு வயது வரம்பு ஏதேனும் உண்டா என்பதனையும், அரசாங்க அலுவல்களில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல், வெளியே உள்ளவர்களும் அதிலே சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு ஏதுவும் ஏற்படுத்தித் தரப்படுமா என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது ஓரளவுக்கு குறிப்பிட்ட இடங்கள் இருக்கின்றன. அதன் காரணமாக அரசாங்கத்தில் பணி புரிபவர்களுக்குத்தான் முக்கியத்துவம் தரப்படுகிறது. இதனுடைய இடங்கள் பெருகி, வெளியே இருப்பவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்படும்பொழுது இதைச் செய்ய வேண்டும். இதைத் தவிர கடிதப் போக்கு வரத்து மூலம் கல்வி பயிலுகின்ற திட்டம் சென்ற இரண்டு ஆண்டுக் காலமாக மதுரை பல்கலைக்கழகத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதை மாநிலத்தில் எங்கிருப்பவர்களும் பயன்படுத்திக்கொள்ள நல்ல வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சட்டப்படிப்பு படிப்பதற்கு இப்பொழுது கஷ்டமாக இருக்கிறது என்று மாலை நேரக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை விரிவுப்படுத்தி மதுரை பல்கலைக்கழகத்திலும் ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

1973 மார்ச் 2]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சட்டக் கல்லூரி, சென்னையை பொறுத்தவரையில் மாலை நேரக் கல்லூரி நடைபெற்று வருகிறது. ஆனால் இப்பொழுது மதுரையில் சட்டக் கல்லூரி துவக்குகின்ற செயற்குறிப்பு இல்லை.

**திரு. எஸ். முருகையன் :** மாலை நேரக் கல்லூரிகளில் பெண்கள் எத்தனை பேர்கள் படிக்கிறார்கள். பெண்களுக்காக தனியாக மாலைநேரக் கல்லூரி ஏதாவது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா ? இல்லையானால் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எவ்வளவு பேர் என்ற விவரக் குறிப்பு இல்லை. பெண்கள் கல்லூரிகளில் பெண்கள் படிக்கிறார்கள். எடுத்துக்காட்டாக க்வீன் மேரிஸ் காலேஜில் மாலைநேரக் கல்லூரியில் பெண்கள் தான் படிக்கிறார்கள். சில பெண்கள் கல்லூரிகள் மாலைநேரக் கல்லூரி பயிற்சி கொடுப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. நா. வீராசாமி :** மதுரை பல்கலைக்கழகத்தில் இருப்பதுபோல, சென்னையிலும் போஸ்டல் டியூஷன் நடத்துகிற செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மதுரை பல்கலைக்கழகம் நடத்துகின்ற காரணத்தினால் சென்னைப் பல்கலைக்கழகத்தைக் கேட்டபொழுது ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் முறைப்படி நடத்துவது பொருத்தமாக இருக்கும், இரண்டு பல்கலைக்கழகத்தில் கடிதப் போக்குவரத்து மூலம் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் இல்லை, முதலில் மதுரைப் பல்கலைக்கழகம் நடத்தட்டும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**புலவர் சி. பழனிச்சாமி :** மாலைநேரக் கல்லூரிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து படிப்பதற்கு ஏதாவது தடை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது அரசாங்கத்தில் பணிபுரிகிறவர்களுக்குத்தான் அதில் இடம் தரப்படுகிறது. அதைப்பற்றி விதிமுறைகள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதைப் பற்றி ஆராய்ந்து சொல்லப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** இப்பொழுது உள்ள கல்வித்தரம் குறைந்து கொண்டே வருவதாகச் சொல்லப்படுகிறது. கடிதம் மூலம் கல்வி பயின்றால் இன்னும் தரம் குறையும் என்று நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆகவே, கடிதம் மூலம் கல்வி கற்கும் முறையை ரத்து செய்வதற்கோ அல்லது நிறுத்தி வைப்பதற்கோ அரசாங்கம் யோசனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது ஒரு விவாதப் பிரச்னை. தரம் எதிலே குறைந்திருக்கிறது, எந்த வகையில் குறைந்திருக்கிறது என்பதில் வல்லுனர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால், கடிதப் போக்குவரத்து மூலம் வேறு பல பல்கலைக்கழகங்கள் பட்டங்கள் தருகின்றன. அந்தப் பட்டங்களை ஒழுங்காக நடைபெறுகின்ற கல்லூரியில் படித்துப் பெறப் படுகின்ற பட்டங்களுக்கு ஈடுஇணையாகத்தான் நாம் கருதி வருகிறோம். வட மாநிலங்களில் பல்கலைக்கழகங்கள் கடிதப் போக்குவரத்து மூலம் நடத்து கின்ற படிப்பில் சேர்ந்து தொடர்பு கொண்டு அதிலே பரிட்சை எழுதி, பட்டம் பெற்று, அந்தப் பட்டங்கள் மற்ற பட்டங்களுக்கு இணையாகக் கருதப்படு கின்றன. பல பேர் அங்கே போய் பரிட்சை எழுதுகிறார்கள். ஆகவே, தமிழகத்திலும் இப்படிப்பட்ட முறை இருக்கலாம் என்று வகுக்கப்பட்டு, இப்பொழுது நடந்துவருகிறது. அந்த ஒரு முறை மட்டும் இருந்தால், உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் நிலைமை ஏற்படலாம். ஆனால் இங்கே ஒழுங்காக நடைபெறுகிற கல்லூரிகளில் பட்டப்படிப்பு, மாலைநேரக் கல்லூரி களில் பட்டப்படிப்பு, கடிதப் போக்குவரத்து மூலம் பட்டப்படிப்பு ஆகிய மூன்று முறைகளும் இருந்து வருகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி: துணைத் தலைவரவர்களே, மாலைநேரக் கல்லூரி களில் சேருவதற்கு வயது வரம்பு உண்டா? 40, 50 வயது ஆனவர்களும் மாலை நேரக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வயதுவரம்பு எதுவும் இல்லை என்றுதான் கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் தகவல் திரட்டிக் கொடுக்கப்படும்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தமிழ் புலவர், வித்வான் போன்ற வகுப்புக்களுக்கு மாலைநேரக் கல்லூரிகளில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது அப்படிப்பட்ட வகுப்புகள் இல்லை.

## திறந்தவெளி திரைப்பட அரங்குகள்

*206 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் திறந்த வெளி சினிமா அரங்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1973 மார்ச் 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம். தமிழ்நாட்டில் திறந்தவெளி திரைப்பட அரங்குகள் இரண்டு உள்ளன.

(இ) ஒன்று ஆவடியிலுள்ள மத்திய ஏமக்காவல் படை முகாமில் உள்ளது. மற்றொன்று செங்கற்பட்டு மாவட்டம் கல்பாக்கத்திலுள்ள சென்னை அணுசக்தித் திட்ட நிலையத்தில் உள்ளது. இந்த திறந்த வெளித் திரைப்பட அரங்குகள், வணிக நோக்கின்றி, அந்தந்த வளவில் உள்ள பணியாளர்களின் பொழுதுபோக்கிற்காக மட்டுமே செயல்பட்டு வருகின்றன.

திரு. எஸ். கணேசன்: திறந்தவெளி திரைப்பட அரங்கத்தை தனியார் நடத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா? மகாபலிபுரம் போன்ற சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் கோடைக்காலங்களிலே திறந்தவெளி திரைப்பட அரங்கை நடத்துவதற்கு தனியார்களுக்கு ஊக்கமளிக்கப்படுமா? அல்லது அரசாங்கமே நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திறந்தவெளித் திரைப்பட அரங்கை ஏற்படுத்தத் தனியார் யாருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. ஏனென்றால் அதற்கு ஏற்ற இடவசதி முக்கியம். அதைத்தவிரச் சட்டம், அமைதி, ஒழுங்கு காப்பாற்றப்படுவது முக்கியம். ஆகவே, மாமல்லபுரத்திலும் அதைப்போன்ற வேறு இடங்களிலும் அனுமதிக்க இயலாது.

திரு. கே. கந்தசாமி: திறந்தவெளி திரைப்பட அரங்கு ஒன்றையாவது மதுரை போன்ற பெரிய நகரங்களில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திறந்தவெளித் திரைப்பட அரங்கினை மாமல்லபுரத்தில் எப்படி அமைக்க முடியாதோ அதைப்போலவே மதுரை போன்ற பெரிய நகரங்களிலும் அமைக்க முடியாது.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: திறந்தவெளி திரைப்பட அரங்குகள் சிறைச்சாலைகளிலே அமைக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சிறைச்சாலைகளில் திரைப்படக் காட்சிகளைத் திறந்தவெளி அரங்களில்தான் கைதிகளுக்கு காட்டுகிறார்கள்.

[1973 மார்ச் 2

### கள்ளச் சந்தையில் சினிமா டிக்கட்டுகள் விற்பனை

*207 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 டிசம்பர் 25-ந் தேதிக்கும், 1972 ஜனவரி 2-ந் தேதிக்கும் இடையில் சென்னையில் சினிமா டிக்கட்டுகளை கள்ளச் சந்தையில் விற்றதாக எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(இ) அவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) மொத்தம் 25 பேர்.

(இ) அவர்களில் 20 பேர் ரூ. 2 முதல் ரூ. 10 வரை அபராதம் விதிக்கப் பட்டனர். மற்ற 5 பேர் நன்னடத்தை நிபந்தனையின் பேரில் விடுவிக்கப் பட்டனர்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, முன்பைவிட இப்போது மின்சார வெட்டு அதிகமாக இருப்பதால், கள்ளச்சந்தைகளில் அதிகமாக டிக்கட்டுகள் விற்கப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, போலீசார் மாறுவேடம் அணிந்து சென்று அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்படிச் சிலர் சினிமா டிக்கட்டுகளை வாங்கி, அவைகளைப் பின்னால் கள்ளச் சந்தைகளில் விற்பனை செய்வதைத் தடுக்க மாநகரக் காவல் சட்டம் 76-வது பிரிவின்படி காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து கண்டுபிடிக்கப்படுபவர்களுக்குத் தண்டனையும் வழங்கப்படுகிறது. ஆனால், அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை அவர்கள் செய்கின்ற குற்றத்திற்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, 1888-ம் ஆண்டு மாநகர காவல் சட்டத்தில் 34-ஏ என்ற ஒரு புதிய பிரிவைச் சேர்க்கக் கருதப் பட்டுள்ளது. அதனால் குற்றவாளிகளுக்கு அதிகப் படியான தண்டனை அளிக்கப் படும்; தண்டனைக் காலம் அதிகமாக்கப்பட்டுக் குற்றங்கள் தடுக்கப்படும். துப்பறிதல் முறையிலோ அல்லது மாறுவேடம் அணிந்து சென்றோ இந்த மாதிரியான குற்றங்களைக் கண்டுபிடிப்பது என்பது இயலாத ஒன்று. ஏனென்றால், மாறுவேடம் படங்களில்தான் காட்டப்படுகின்றது. (

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இந்தக் கள்ள டிக்கட் விற்பனை சில தனிப் பட்டவர்களைத் தவிர, தியேட்டர் முதலாளிகளால் கூட செய்யப்படுகிறது. நானே அதைப் பார்த்திருக்கிறேன். ஆகவே, தியேட்டர் முதலாளிகளால் கள்ள டிக்கட் விற்பனைச் செய்யப்படுவதையும் தடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா?

*1973 மார்ச் 2]*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தியேட்டர் முதலாளிகள் இப்படிப் பட்ட டிக்கட்டுகளைத் தரவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள். சிலபேர் ரசிகர் மன்றங்களை வைத்து, அந்த மன்றங்களின் பெயரால், முதலாளிகளிட மிருந்து டிக்கட்டுகளை வாங்கி அதிக விலைக்கு விற்றுவிடுகிறார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, சென்னை மாநகரில் புதிய படங்கள் வரும்போதுதான் கள்ள டிக்கட் விற்பனை அதிகமாக இருக்கிறது. அப்படி கள்ள டிக்கட்டுகளை வைத்திருப்பவர்கள் சினிமா கொட்டகைக்குப் பக்கத்தில் எங்காவது ஓரிடத்தில் நின்று கொண்டு 'விசில் சவுண்ட்' கொடுக்கிறார்கள். டிக்கட் கிடைக்காதவர்கள் அங்கேதான் டிக்கட் விற்கிறார்கள் என்று தெரிந்து அங்கே போய் வாங்கிச் செல்கிறார்கள். எனவே, இதைப்பற்றி போலீசாருக்கு தகவல் கொடுத்து விசிலடிப்பவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எந்த ஒலி வந்தாலும் வரா விட்டாலும் இந்தக் கள்ளச்சந்தை டிக்கட் விற்பனையைத் தடுப்பதற்கு காவல் துறையினர் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்தக் கள்ள டிக்கட்டுகள் ரசிகர் மன்றங் களால் விற்பனைச் செய்யப்படுவதாகச் சொன்னார்கள். இம்மாதிரியான நடைமுறை இப்போது புதிதாக ஏற்பட்டிருக்கிறதா? அல்லது இதற்கு முன்பே இருந்து வருகிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கள்ள டிக்கட் விற்பனை புதிதாகவும் ஏற்பட்டிருக்கிறது. முன்பும் இருந்திருக்கிறது. 1971-ம் ஆண்டில் கூடக் கள்ள டிக்கட் விற்றதாக 750 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, அப்பொழுதிலிருந்தே கள்ள டிக்கட் விற்பனையைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை:** சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு மாலை நேரங்களிலே பொழுதுபோக்க வழியில்லாமல், சினிமா பார்க்கச் செல்கிறோம். அங்கே போனால் டிக்கட் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே, எங்களுக்கு பொழுதுபோக்கிற்கு வசதியாக டிக்கட்டு கள் தர ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** டிக்கட்டுகள் அந்தந்த தியேட்டர் களில்தான் விற்கப்பட வேண்டும். அதை மீறி யார் விற்றாலும் அது கள்ளச் சந்தை டிக்கட்டு என்றுதான் கருதப்படும்.

**திரு. எஸ். கணேசன் :** சில பிரபல திரைப்பட நடிகர்கள் தங்கள் படங்களின் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தில், ரசிகர் மன்றங்களின் சார்பில் டிக்கட்டுகளை வாங்கி பதுக்கி வைத்து, டிக்கட்டுகள் கிடைக்கவில்லை என்ற ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிடுவதாக தகவல் வருகிறது. அதைப்பற்றி ஆராயப்படுமா ?

(பதில் இல்லை).

**திரு கே. என். குமாரசாமி :** இப்போது தியேட்டர்களில் ரிசர்வேஷன் முறை இருப்பதால், பாதி ரிசர்வேஷன் செய்யப்பட்டவுடன், மீதி இருக்கக் கூடிய பாதி டிக்கட்டுகளை 'ரிசர்வேஷன் ஆகிவிட்டது ; வேறு டிக்கட் இல்லை' என்று சொல்லி, அவைகளை கள்ளச் சந்தையில் விற்றுவிடுகிறார்கள். ஆகவே ரிசர்வேஷன் முறை தடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ரிசர்வேஷன் செய்யப்படுவதைத் தடுத்துவிட்டால் கள்ளச்சந்தை டிக்கட் விற்பனை இன்னும் அதிகமாகிவிடும்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, ஒரு நபருக்கு ஒரு டிக்கட் என்ற முறையில், தியேட்டருக்கு உள்ளே செல்கிறபோது, ஒருவழிப் பாதையில் செல்வதற்கு ஏற்பாடு செய்து, அப்போது டிக்கட்டு கொடுத்தால் கள்ள டிக்கட் விற்பனை தடுக்கப்படும். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தக் கள்ளச்சந்தை டிக்கட்டை வாங்குகிறவர்கள், கூட்ட நெரிசலில் முண்டியடித்து கஷ்டப்பட்டு டிக்கட் வாங்குவதைவிட இது மேல் என்று கருதி, அதிக விலை கொடுத்து கள்ள டிக்கட்டுகளை வாங்கிவிடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு காவல்துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** இந்த கள்ள டிக்கட்டுகளை வெளியே மட்டுமன்றி கவுண்டரிலும் விற்பனை செய்கிறார்கள். அண்மையில் நானும் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் அரங்கேற்றம் சினிமா பார்க்கச் சென்றிருந்தோம். டிக்கட் இல்லை என்று சொல்லி ரூ. 3-10-க்கு உள்ள டிக்கட்டை 5 ரூபாய்க்கு விற்றார்கள். நாங்கள் 5 ரூபாய் கொடுத்துதான் அந்த டிக்கட்டை வாங்கி படம் பார்த்தோம். ஆகவே, கவுண்டர்களையும் கண்காணிக்கும் பொருட்டு காவல் துறையினருக்கு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கப்படுமா ?

1973 மார்ச் 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எப்படியாவது அரங்கேற்றத்தைப் பார்த்துத்தான் தீரவேண்டுமென்ற நிலையில் 5 ரூபாய் கொடுத்து டிக்கட் வாங்கிப் பார்த்திருக்கிறார்கள். அது பெரிய தவறு. ஏனென்றால் பொதுமக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கள்ள டிக்கட் விற்ற கவுண்டரிலே இருந்தவர்களைப் போலீசாரிடம் பிடித்துக் கொடுத்து விட்டு, அவர்கள் அடுத்த ஆட்டத்திற்குப் போயிருக்கலாம். அதனால் அரங்கேற்றம் எங்கும் போய்விடாது. ஆகவே, பொறுப்புள்ள உறுப்பினர்கள் இனிக் குற்றங்களைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்க வேண்டும்.

திரு. எஸ். வடிவேல்: நாம் கவனம் செலுத்த வேண்டிய வேறு எத்தனையோ கள்ளச் சந்தைகள் இருக்க இதில்போய் நாம் விலைக் காலத்தையும், கருத்தையும் செலுத்த வேண்டுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தக் கேள்வியில் உறுப்பினர் கவனம் செலுத்தாமல் இருப்பது நல்லது.

*Liquor shops*

*210 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the temple lands and premises in which (1) Arrack, (2) Toddy and (3) Liquor shops have been opened in Madras City?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னை மாநகரில் கோவில் நிலம் எதிலும் அல்லது கோவில் வளவுகளில் எதிலும் கள்ளுக்கடையோ, சாராயக் கடையோ, மதுக்கடையோ அமைந்திருக்கவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கோயில்கள் ஆகியவற்றுக்கு அருகில் கள், சாராயக் கடைகளைத் திறக்கக் கூடாது என்பதாக விதியிருந்தும் பலயிடங்களில் கடைகளைத் திறந்துவிடுகிறார்கள். பிறகு அரசாங்கத்திற்கு ஆட்சேபணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. வேறு சில கடைக்காரர்கள் வழக்கு தொடருகிறார்கள். ஆகவே கடைகளைத் திறப்பதற்கு முன்னாலேயே இன்னின்ன இடங்களில்தான் திறக்கலாம் என்று சம்பந்தப்பட்ட நகராட்சி மன்றங்களையும், ஊராட்சி மன்றங்களையும் கலந்து முடிவு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அடுத்த ஆண்டு ஏலம் விடுவதற்கு முன்பாக நகராட்சிகளில் எந்த எந்த இடத்தில் திறக்கலாம் என்று முடிவு செய்ய இருக்கிறோம்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கள்ளுக்கடை, சாராயக்கடை ஏலம் எடுத்தவர்கள் அங்கங்கே சப்-சென்டர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று அனுமதித்திருப்பதால் இப்போது அவர்கள் பரவலாகக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள். இதுபோல சப்-சென்டர்கள் திறக்க அனுமதி வழங்காமல் இருப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்த ஆண்டு ஒரு நிபந்தனையாக சப்-சென்டர்கள் வைத்துக்கொள்ள அனுமதிப்பதாக அறிவித்திருந்தோம். ஆகவே, அதனை இந்த ஆண்டு திறக்க முடியாது.

**திருமதி ஜோதிவெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, பள்ளிக்கூடம், ட்யூடோரியல் காலேஜ் போன்றவற்றுக்கு அருகில் லிக்கர் ஷாப் திறக்க அனுமதி வழங்கக் கூடாது என்று இருந்தும் மவுண்டு ரோடில் மவுண்டு ட்யூடோரியல் காலேஜ் அருகிலேயே Liquorshop இருக்கிறதே, இதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது ரெப்ரசென்டேஷன் வந்திருக்கிறதா ? அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு உறுப்பினர் இதுபற்றி அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** அடுத்த ஆண்டு நகராட்சிகளைக் கலந்துகொண்டு இடம் நிர்ணயிப்பதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டு நடைமுறையில் பள்ளி வாசலுக்கு அருகில் ஆற்காடு, கும்பகோணம் போன்ற இடங்களில் கள், சாராயக் கடைகள் அமைந்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அவற்றை அகற்ற நடவடிக்கை மேற்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதுபோன்ற இடங்களில் கடைகள் இருக்கக் கூடாது என்பதுதான் சட்டம். மாறாக இதுபோன்ற இடங்களில் அமைந்திருக்கிறது என்றால் அதுபற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் அரசாங்கம் பாரபட்சம் இல்லாத முறையில் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. சோனையா :** கள்ளுக்கடை, சாராயக் கடைகளை நாம் ஒவ்வொரு ஆண்டும் ஏலம் விடுகிறோம். இந்த ஆண்டு புதியதாக ஒருவர் ஏலம் எடுத்தால் போன ஆண்டு கடை நடந்த இடத்தை போன ஆண்டு ஏலம் எடுத்தவர் தர மறுக்கிற காரணத்தினால் வேறு இடத்தில் இவர்கள் கடை வைக்க வேண்டியிருக்கிறது. அதுபோல இல்லாமல் ஏலம் விடும்போதே நிரந்தரமாக ஒரு இடத்தில் அவை நடைபெறத்தக்க வகையில் இடத்தை நிர்ணயம் செய்து விடுவார்களா ?

1973 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைத்தான் நான் முன்பே சொன்னேன். வரும் ஆண்டில் அதுபோல விடுவதற்குத்தான் உத்தேசித்திருக்கிறேம்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: கள், சாராயக்கடை ஏலம் எடுத்தவர்களுக்கு நட்டம் வருகிறது என்று சொல்கிறுர்களே, மது அருந்துகிறவர்களுடைய தொகை குறைந்து வருகிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. கோ. இளங்கோவன்: இந்த ஆண்டு கள், சாராயக்கடை ஏலம் எடுத்தவர்கள் சப்-சென்டர்கள் திறப்பதைத் தடுக்க முடியாது என்று சொன்னர்கள். அடுத்த ஆண்டாவது இதுபோல சப்-சென்டர்கள் திறக்கக் கூடாது என்று சொல்வார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே பதில் சொல்லி விட்டார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மேற்குத் தாம்பரம் பள்ளிவாசலுக்கு அருகில் கள்ளுக்கடை இருக்கிறது. ஒரு சட்ட மன்ற உறுப்பினரே அதில் சம்பந்தப்பட்டிருப்பதால் அதனை அந்த இடத்தைவிட்டு மாற்ற முடியாது என்கிறுர்களே, இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முன்பே சொன்னேன். இதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று பார்க்காது, பாரபட்சமின்றி இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: சப்-சென்டர்கள் திறக்க அனுமதித்திருப்பதால் ஒருவர் மற்றெருவருடைய ஏரியாவில் கடை திறக்கிற காரணத்தினுல் பல சச்சரவுகள் அவர்களுக்குள்ளேயே ஏற்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுபோன்ற சச்சரவு குறித்து அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: : Do these restrictions apply to wholesale shops located very near schools?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மொத்த வியாபாரமாக இருந்தாலும் சில்லறை வியாபாரமாக இருந்தாலும் எல்லாவற்றுக்கும் சட்டம் ஒன்றுதான்.

**திரு. கே. என். குமாரசாமி :** கள்ளுக்கடை, சாராயக் கடைகளை ஏலம் விடும்போது இன்ன இடத்தில்தான் வைக்கவேண்டும் என்று சொன்னாலும் அதை அவர்கள் மீறி கடைகள் வைக்கிறபோது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** குறிப்பிட்ட இடம் என்று வைத்து ஏலம் விடுவதில்லை. குறிப்பிட்ட ஏரியாவுக்காக ஏலம் விடுகிறோம். விதிகளை மீறினால் சட்டப்படி அவர்கள் உரிமத்தை ரத்து செய்ய முடியும்.

* 211 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(*a*) whether it is a fact that the Collector of Madurai has ordered an enquiry into the location of wine shops at the place where Gandhiji stayed at Madurai City; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) 1921 செப்டம்பரில் காந்தியடிகள் தான் அதுவரை வழக்கமாக அணிந்து வந்த முழு ஆடைகளை விடுத்து அரை உடை அணியத் தொடங்கிய கட்டிடத்தில் மதுக்கடை திறப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற புகார் வரப்பெற்றதன் மேல், அதுபற்றி விசாரணை செய்யும்படி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டார். மதுக்கடை அமைப்பதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ள இடம், மதுரை, மேற்கு மாசிவீதி 251 ஆம் எண் கட்டிடமாகும். இந்த இடத்தில் காந்தியடிகள் தங்கவில்லை என்றும் மதுரை, மேற்கு மாசிவீதி 251 A ஆம் எண்ணுள்ள கட்டிடத்தில்தான் அவர் தங்கினார் என்றும் அந்த இடத்தை கதர் விற்பனை நிலையம் அமைப்பதற்காக தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தினால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது என்றும் விசாரணையிலிருந்து தெரியவந்தது.

THIRU N. DENNIS: Will the Government ban opening of liquor shops in all places which people venerate?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏற்கனவே பதில் சொல்லும்போது விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

1973 மார்ச் 2]

திரு. நா. வீராசாமி: இந்த அரசாங்கத்தின்மீது தவறு சொல்ல வேண்டுமென்று இதுபோன்ற பொய்யான தகவல்களைக் கூறுகின்றார்கள். கலெக்டர் இதனை விசாரித்து இந்தத் தகவல் சரியல்ல என்றவுடன், இதுபோன்ற பொய்யான தகவல் கொடுத்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முயற்சிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படிப்பட்ட தகவல் பத்திரிகையில் தான் வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகைகளைப்பற்றி மக்கள் புரிந்துகொண்டால் அதுவே சரியாகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: காந்திஜி தங்கிய வீட்டின் அருகாமையில் இந்தக் கடை அமைந்திருப்பதாக இப்போது தகவல் சொல்கிறார்கள். அந்தப் பகுதியிலேயே இல்லாமல் வேறு பகுதிக்கு மாற்ற ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் முன்பே சொன்னேன். அந்த வீட்டிற்கும், இந்த வீட்டிற்கும் சம்பந்தம் இல்லை. தனித்தனி வாசல், தனித்தனி கதவு. நிச்சயமாக காந்திஜி தங்கிய இடத்தில் கள்ளுக்கடை வைக்க இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது, அனுமதிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### புலியூர்-மணப்பாறை சாலை

*212 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் மு.ப 9-30
பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புலியூர்-மணப்பாறை சாலையில் லிங்கத்தூர் அருகில் வடிகால் வாய்க்கால் செல்லுவதால் மழை காலங்களில் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருந்து வருவது உண்மையா?

(இ) இந்த இடத்தில் பாலம் கட்டவேண்டும் என கோரிக்கை எப்போது வந்தது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் முன் வந்தது.

## பேட்டவாய்த்தலையிலுள்ள பயணியர் விடுதி

*213 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி வட்டம், பேட்டவாய்த்தலையிலுள்ள பயணியர் விடுதியைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) திருச்சி மாவட்டம் பேட்டவாய்த்தலை ஆய்வு மாளிகையை சிறப்புப் பழுது பார்ப்பதற்காக ரூ. 8,400-க்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலை முடிவடைந்து விட்டது. மின் இணைப்பு வழங்குவதற்காக ரூ. 9,700 மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலை முடியும் தறுவாயில் உள்ளது.

## கதர் பட்டு

*214 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-71, 1971-72-ல் கதர் வாரியத்தால் வாங்கப்பட்ட கோரா பட்டின் மதிப்பு என்ன?

(இ) அப்படி வாங்கப்பட்ட கோராப்பட்டின் தரத்தை பரிசிலிப்பவர் யார்?

(உ) கதர்ப்பட்டின் தரம் குறைந்திருப்பதாக அரசுக்கு புகார்கள் ஏதாவது வந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம் 1970-71-ம் ஆண்டில் ரூ. 29,94,000 மதிப்புள்ள கோராப்பட்டும், 1971-72-ம் ஆண்டில் ரூ. 21,41,073 மதிப்புள்ள கோராப்பட்டும் வாங்கியது.

(இ) வாரியத்தால் நியமிக்கப்பட்ட ஒரு கொள்முதல் குழு கோராப் பட்டின் தரத்தை பரிசீலிக்கிறது.

(உ) கதர்ப்பட்டின் தரம் குறைந்திருப்பதாக எந்தவித புகாரும் வரவில்லை.

1973 மார்ச் 3]

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்த கதர்பட்டு வாங்குவதற்கான விற்பனைக் கழகத்திலே கதர்பட்டு நிபுணர்கள் யாராவது இருக்கிறார்களா? அவர்கள் அதை எந்த இடத்திலே வாங்கினார்கள்? அப்படி வாங்கியதிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, இதிலே கதர்பட்டு வாங்குவதற்கென்றே கதர்பட்டு சரிகை உற்பத்தி நிலைய கண்காணிப்பாளர் ஒருவர் இருக்கிறார். அவரும், சென்னை மண்டல துணை இயக்குநர் அவர்களும், தர்மபுரி மாவட்ட கதர் கிராமத் தொழில் அலுவலர் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து வாங்குகிறார்கள். கதர்பட்டு சரிகை பற்றி தெரிந்த அதிகாரியே அதில் இருக்கிறார்.

**திரு. கே. கந்தசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் நடைபெறும் பொருட்காட்சியில், 60 பேர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய மினியேச்சர் மில் என்று சொல்லக் கூடிய அம்பர் சர்க்கா ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏறக்குறைய ரூ. 1½ லட்சம் செலவு ஏற்படுவதாக அறிகிறேன். அந்தத் தொழிலை மற்றக் கிராமங்களுக்கும் பரப்புவதற்கு அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. அ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, கதர் துணிகள் பழையதாகி விட்டால் அவற்றைக் குறைந்த விலைக்கு விற்க முடிகிறது. அதனால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** குறைந்த விலையில் விற்கப்பட்டாலும், நீண்ட நாட்களாக விற்கப்படாமலிருந்த பொருட்களை எப்படியாவது விற்கவேண்டுமென்ற முறையில் எத்தனை ஆண்டுகள் என்று தரம் பிரித்து விற்கப்படுகிறது. ஆதலால், இப்படி வியாபாரம் செய்வதிலே கொஞ்சம் தேங்குவது இயற்கையாக இருக்கிற காரணத்தால், அவற்றை விற்பதிலே ஏற்படுகின்ற நஷ்டத்தை லாபத்திலே கழித்துக் கொள்வதுதான் பொருத்தம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கதர் பட்டுக்கு அதிகமாக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆதலால், அதன் விலையைச் சற்றுக் குறைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கனம் உறுப்பினர் அவர்கள் அண்மையில் கதர்பட்டுப் புடவைகளையும், மற்றவைகளையும் வாங்கவில்லையென்று கருதுகிறேன். இப்பொழுது 6 கெஜம் பட்டுப் புடவை சாதாரணமாக

மார்க்கெட்டிலே விற்கும் விலையைவிட ரூ. 40, ரூ. 50-க்குக் குறைவாக கதரிலே வாங்கினால் கிடைக்கிறது. நல்ல ரகமாகவும் இருக்கிறது. தயவு செய்து மாலையில் இந்த எக்சிபிஷனில் இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** கதர்பட்டு தொழில் லாபத்தில் நடக்கிறதா அல்லது நட்டத்தில் நடக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கதர்பட்டு தொழிலால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 லட்சத்திற்கு மேல், 3 ஆண்டுகளாக லாபம் வந்து கொண்டிருக்கிறது. நாம் கதர்பட்டு கொள்முதல் செய்கின்ற இடம் மைசூர். மைசூருக்குச் சென்றுதான் பட்டு வாங்க வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டிலே, இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டாலே உற்பத்தி விலையைக் குறைத்து, இதைத் தயார் செய்ய முடியாத காரணத்தால், இன்னும் அதிகம் கிடைக்க வேண்டிய லாபம் கிடைக்காமல் இருக்கிறது. மைசூரிலே கொள்முதல் செய்தும்கூட, ஆண்டொன்றுக்கு ரூ. 10 லட்சத்திற்குக் குறையாமல் லாபம் கிடைக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, மைசூரில் கொள் முதல் செய்வதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்த சதவிகிதத்தில் நாம் வாங்குகிறோம்? நமது தமிழ் மாநிலத்திலே எந்த அளவு கொள்முதல் செய்கிறோம்? நமது தமிழ் மாநிலத்திலேயே தேவையான அளவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தமிழ் மாநிலத்திலே, ஓசூர், தாளவாடி என்ற இடத்திலே இந்தத் தொழிலுக்கு இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட் மெண்டிலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். போதிய அளவு அவர்களால் சப்ளை செய்ய முடியவில்லை. அவர்கள் சொல்லும் விலை அதிகமாக இருக்கிறது. குறைந்த அளவில் உற்பத்தி செய்வதால் விலை அதிகமாக இருக்கிறது. ஆனால் தரம் நன்றாக இருக்கிறது. குற்றாலத்திலேகூட இதற்காக ஒரு நிலையத்தைத் துவக்கினார்கள். அதுவும் சரியாக இல்லாத காரணத்தால், அதைக் கைத் தறிக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கிறார்கள். முசுக்கொட்டை அல்லது மல்பரி என்ற செடி எங்கு விளைகிறதோ அங்குதான் பட்டுப்பூச்சிகள் உற்பத்தி செய்ய முடியும். அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்க யோசனை செய்யப்படுகிறது. அதை விரைவில் செய்ய முயற்சி எடுப்போம்.

*1973 மார்ச் 2]*

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஆந்திராவிலே தரமான பட்டுகள் எல்லாம் மலிவான விலையிலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே மாதிரி நம்முடைய மாநிலத்திலே மலிவான விலையிலே அது கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை நம்முடைய இலாகா மூலமாக அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஆந்திராவில் எப்பொழுது இவ்வாறு செய்ய முயற்சித்தார்களோ அப்பொழுது நமது மாநிலத்திலே முயற்சிக்காமல் விட்டுவிட்டார்கள். ஆதலால், ஆந்திராவைப் போன்று குறைந்த விலையில் விற்கும் முயற்சியை இப்பொழுது நாம் எடுத்துக் கொண்டிருக் கிறோம்.

** 215 வினா—***திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ல் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள கதர் பட்டு உற்பத்தி செய்யப் பட்டது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** 1971-72-ம் ஆண்டில் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ரூபாய் 64,99,047 மதிப்புள்ள கதர் பட்டு உற்பத்தி செய்துள்ளது.

**திரு. கே. என். குமாரசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இங்கே நாமே உற்பத்தி செய்வதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோவை மாவட்டத்திலே ஏராளமான விவசாயிகள் பட்டுநூல் பூச்சி வளர்ப்புக்கு ஏற்பாடுகள் செய்து, முசுக் கொட்டை தழைகளை விவசாயம் செய்கிறார்கள். அதற்கு அரசாங்கம் ஊக்கம் அளித்து அங்கு நூல் வாங்குகிற எம்போரியம் கொண்டுவர அரசு முயலுமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** முன்னமேயே அதைத்தான் சொன்னேன். ஒரு இண்டஸ்ட்ரி கொண்டுவர வேண்டுமென்றால், அதற்குத் தேவையான பட்டுப் பூச்சிக்கு இடம் வேண்டியிருக்கிறது. இப்பொழுதிருக்கிற இரண்டொரு இடங்கள் போதவில்லையென்ற காரணத்தால், அதை அதிகமாக உற்பத்தி செய்ய, விரிவுபடுத்த முயற்சி செய்யப்படுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

[1973 மார்ச் 2

திரு. எம். தேவராசன்: கடலூர் தாலுகாவில், மசனகுடி சில்க் பார்ம் இருக்கிறது. அது நல்லமுறையில் செயல்படுகிறதா? அதில் எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, வங்காளத்தில் தயாரிக்கப்படுகிற கதர்ப்பட்டு புடவைகள் தரமாக உள்ளன என்று கூறப்படுகிறது. குறைந்த விலையில் கிடைப்பதாகவும் சொல்லப்படுகிறது. இங்கு நமக்கு நல்ல லாபம் வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, மற்ற மாநிலங்களோடு போட்டியிடுகின்ற முறையிலே குறைந்த விலையில், தரத்தை உயர்த்தி விற்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பட்டுப்புடவையில் தரம் என்று சொன்னால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் சிறந்த தரம் இருக்கிறது. அது கைத்தறியாக இருந்தாலும் சரி, கதராக இருந்தாலும் சரி. குறைந்த விலையிலே தயார் செய்கின்ற நிலையிலேதான் மற்ற மாநிலங்களிலே தயாரிக்கிறார்கள். இருந்தாலும் தரத்தை, விலையை வைத்து எடை பார்த்தால், நம்முடையதுதான் உயர்ந்த தரமுள்ளது, விலையும் குறைந்தது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சித்தலவாடி கிராம பின்தங்கிய வகுப்பு மக்களுக்கு வீட்டு மனைகள்

*216 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், சித்தலவாடி கிராமத்திலுள்ள வெட்டுக்கட்டிப் பகுதியில் வசிக்கும் பின்தங்கிய மக்களுக்கு வீட்டுமனை வழங்க நிலம் கையகப் படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

### Seats in Pallavan Transport Corporation buses

* 217 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Transport be pleased to state the total number of seats increased in the Pallavan Transport Corporation buses during 1971-72?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பல்லவன் போக்குவரத்துக் கழகம், 1972, ஜனவரி 1 ஆம் நாளில் அமைக்கப்பட்டது. 1—1—1972-லிருந்து 31—3—1972 வரை அக் கழகத்தின் பேருந்துகள் தொகுதியில் 14 பேருந்துகள் சேர்க்கப்பட்டன. இத்தக் கால அளவில், பேருந்து ஒன்றுக்கு 60 இருக்கைகள் விதம் பேருந்து ஒன்று ஒரு நாளில் 16 தடவைகள் பயணம் செய்கின்றன என்ற சராசரிக் கணக்கில் ஒரு நாளைக்கு 13,440 இருக்கைகள் பல்லவன் கழகத்தால் கூடுதலாக்கப்பட்டன.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, அரசுடைமையாக்கப்பட்ட பல்லவன், சோழன், பாண்டியன் கழகங்களின் பஸ்களில் எம்.எல்.ஏக்கள் ஏறிப் போவதற்காக வைத்திருக்கின்ற பாஸ் செல்லாது என்று என்னை வைத்தீஸ்வரன் கோவிலில் இறக்கிவிட்டார்கள். அதை அமைச்சரிடத்திலே நேரிலே சொன்னேன். அது மாதிரி இறக்கிவிடாமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன்பேரில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், பொது மக்களுக்கு நிரம்பத் தொண்டாற்றுகின்றவர்கள் அவர்கள். ஆதலால், அவர்கள் எல்லாப் பேருந்துகளையும் பயன்படுத்துவதற்கான ஆணையை அரசு ஏற்கனவே பிறப்பித்துவிட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த பல்லவன் போக்குவரத்துக் கழகத்து பஸ்களிலே நெரிசல் நேரத்திலே ஏறுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. நெரிசல் நேரங்களில் 14 பஸ்கள்தான் கூட்டத்திற்காக விடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நெரிசல் நேரத்திலே அதிக பஸ்களை விடுவதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முதல் மூன்று மாதத்திற்குத்தான் 14 பஸ்கள். அடுத்து 1—4—72-லிருந்து 31—12—72 வரையிலும் மேலும் 30 பஸ்கள் கூடுதலாக ஆக்கப்பட்டு இருக்கின்றன. ஆகையினாலே பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்று ஆரம்பித்ததற்குப் பிறகு 44 பஸ்கள் இதுவரையில் கூடுதலாக ஆக்கப்பட்டு இருக்கின்றன.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்பது தொண்டை மண்டலத்தை மட்டும் அடக்குவதாகப் பெயர் அமைந்திருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலே ரூரல் ரோட்ஸ் திட்டம், இன்னும் மற்ற மற்றத் திட்டங்களின் மூலமாக நல்ல இணைப்புச் சாலைகள் ஆங்காங்கே போடப்பட்டிருக்கின்றன. இவற்றில் புதிய பேருந்துகள் ஓட்டுவதற்கு வசதியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலே எல்லாச் சாலைகளையும் இணைக்கக்கூடிய வகையிலே அதிகமான பேருந்துகளை விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழகம் முழுவதும் சாலைகளைப் போட வேண்டுமென்பதும், சாலைகளிலே பஸ்களை விடவேண்டுமென்பதுதான் தமிழக அரசினுடைய கொள்கையாகும். செங்கற்பட்டு மாவட்டத்தில் வேறு வழித்தடங்களைத் திறப்பதற்கு இடம் இருக்குமானால் அவற்றை பல்லவன் போக்குவரத்துக் கழகம் கவனத்தில் கொண்டு ஏற்கனவே இருக்கின்ற பஸ் வசதிகளை நீட்டித்துக் கொடுக்கவோ அல்லது மாற்று வசதிகளைச் செய்து கொடுக்கவோ முன்வரலாம். ஆனால் எல்லா இடங்களிலும் புதிய பஸ்கள் விட வேண்டுமென்ற அவசியமில்லை. இப்பொழுது போதுமான புதிய பஸ்கள் கிடைப்பதும் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நெரிசலாக இருக்கும்பொழுது பஸ்களிலே நின்று பயணம் செய்வது கஷ்டமாக இருக்கிறது. எனவே நெரிசலைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை மாநகரத்திலே பஸ்களில் நெரிசலாக இருக்கின்ற நேரத்தில் நின்று பயணம் செய்வது கஷ்டமாகத்தான் இருக்கிறது. இதைப் போக்கக்கூடிய முறையில் எப்படி வழித்தடங்களை மாற்றியமைக்கலாம் என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து ஆலோசனை கூற பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரை அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த அறிக்கை போக்குவரத்து ஆய்வுக் குழுவிலே பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டு

*1973 மார்ச் 2]*

செயல்படத் துவங்கினால் மவுண்ட் ரோடு, பூந்தமல்லி ரோடு இந்த இரண்டு சாலைகளிலும் 3 நிமிடங்களுக்கு ஒரு பஸ் விதம் விடலாம் என்ற ஏற்பாடு இருக்கிறது. உடனடியாக இப்படிப்பட்ட சீர்திருத்தங்களைச் செய்வதற்குப் பதிலாக மே மாதத்திலிருந்து அத்தகைய சீர்திருத்தங்களை முறையாக ஒவ்வொன்றாக செய்வதற்கு அரசாங்கம் முன்வரும்.

**திரு. நா. காசிராமன்:** பஸ்களிலே நெரிசல் நேரங்களிலே இருக்கைகளிலே உட்கார்ந்து பயணம்செய்யும் பிரயாணிகளுக்கும் ஸ்டாண்டிங் பாசஞ்சர்களுக்கும் உள்ள விகிதாச்சாரம் மொத்தமாக எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. நெரிசலான நேரங்களிலே சாதாரணமாக இவ்விகிதம் கூடுதலாக இருக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சிட்டி பஸ்களிலே நெரிசல் நேரங்களிலே பயணிகள் கம்பியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு பயணம் செய்வதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த விபத்துக்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய முறையில் ஸ்டாண்டிங் பாசஞ்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பொதுவாக இப்படிப்பட்ட நெரிசல் நேரங்களில் ஓடுகின்ற பேருந்துகளில் தொங்கிக்கொண்டு பயணம் செய்வது ஆபத்தானது என்பதை அடிக்கடி சொல்லிவருகிறோம். அப்படிச் சொல்வதனால் கூட கண்டக்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் சண்டை ஏற்படுகிறது என்பதை நாம் அறிவோம். வழித் தடங்களை மாற்றுதல், கூடுதலாகப் பேருந்துகளை விடுதல் போன்ற திட்டங்களை அரசாங்கம் படிப்படியாகக் கொண்டுவருவதன் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகை காணலாம்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** பயணிகளின் வசதிக்காக மாடி பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா? மாடி பஸ்களை விட்டால் தொங்கிக்கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்காதல்லவா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாடி பஸ்களிலே நின்றுகொண்டு பயணம் செய்வதற்கு இடம் இல்லை. உட்கார்ந்துதான் செல்ல வேண்டும். ஆனால் சாதாரண பஸ்களில் எந்த அளவுக்கு பயணிகள் செல்லுகிறார்களோ அந்த அளவிற்கு மாடி பஸ்களிலே செல்லமுடியாது, குறைவாகத்தான் செல்லமுடியும். மேலும் மாடி பஸ்களுக்கு ஆன சேஸிஸ் வெளிநாட்டிலிருந்து பெறவேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம்.

[1973 மார்ச் 2

**திரு. செ. கந்தப்பன் :** அண்ணா போக்குவரத்துக் கழகம் என்ற நிறுவனம் துவக்கப்பட்டிருக்கிறதா? அதனுடைய விவரங்களை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கடந்த மாதம்தான் துவக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் துவக்கப்பட்டதிலிருந்து நல்ல முறையிலே வசூலாகிக்கொண்டு இருக்கிறது என்ற தகவல் மட்டும் வந்துகொண்டிருக்கிறது.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** பல்லவா போக்குவரத்துக் கழகத்தை பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்று மாற்றியமைத்ததற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** காரணம் தமிழ் இலக்கணம்தான்.

**திரு. எம். தேவராசன் :** ஸ்டாண்டிங் பாசஞ்சர்ஸ் 15 பேர்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று கண்டக்டர்கள் கோரிக்கை விட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அப்படியொன்றும் அவர்கள் கோரிக்கை விடவில்லை. ஓவர்லோட் கூடாது என்பதிலே அவர்கள் கவனமாக இருக்கிறார்கள். நமக்கும் அதிலே கருத்து வேறுபாடு இல்லை. அதைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டியதுதான். சென்னை மாநகரத்திலே தொழிலாளர்கள், அலுவலர்கள் யாவரும் ஒரே நேரத்திலே புறப்பட்டு சில குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று வர வேண்டிய சூழ்நிலை இருப்பதாலேதான் இப்படிப்பட்ட பிரச்னை வருகிறது. இதைச் சிறிது சிறிதாக நாம் சமாளித்தாக வேண்டியிருக்கிறது.

**திரு. த. சோணையா :** தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ்களிலே நெரிசல் இருக்கின்ற நேரங்களிலே மட்டுமல்ல, சாதாரணமாகக்கூட சில பேர்கள் ஓடுகின்ற பஸ்களிலே ஏறுவதும், இறங்குவதும் ஒரு பழக்கமாகக் கொண்டு இருப்பதால் அவர்கள் மீதாவது நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அது பொதுவாக வழிவழிவந்த பழக்கமாக இருக்கலாம். அந்தப் பழக்கம் கூடாது என்பதை அடிக்கடி வருகின்ற விபத்துக்களே எடுத்துக்காட்டுகின்றன.

1973 மார்ச் 2]

**திரு. எம். சுரேந்திரன் :** நகர பஸ்களிலே மட்டுமல்லாமல் மற்ற இடங்களிலே ஓடுகின்ற பஸ்களிலேயும்கூட எக்ஸ்பிரஸ் அல்லாத பஸ்களிலே ஓவர் லோட் ஏற்றுகிறார்கள். அதற்கு அரசு அனுமதித்து இருக்கிறதா? அதைப் பார்த்து தனியார் பஸ்களிலேயும் ஓவர்லோட் ஏற்றுகிறார்களே, இதையெல்லாம் கவனிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பயணிகளை ஏற்ற மறுக்கிறார்கள் என்ற குறையைவிட ஏராளமாக ஏற்றுகிறார்கள் என்ற குறையை நாம் பொறுத்துக் கொள்ளலாம்.

**திரு. ஏ. எம். இராஜா :** நெரிசலான நேரங்களில் கூட்டத்தைத் தவிர்ப்பதற்கு டிரெய்லர் பஸ்களை அதிகமாக விடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** டிரெய்லர் பஸ்கள் மக்களுக்குப் பயனளிக்காது. அதைத் தவிர இதர பஸ்கள் செல்வதற்கும் அவற்றினால் கஷ்டம் ஏற்படுகிறது. மேலும் அவை குறைந்த வேகத்தில்தான் செல்ல முடியும். Mass Rapid Transit அதாவது, அண்டர்கிரவுண்ட் சிஸ்டம் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்பட்டாலொழிய சென்னை மாநகரத்தில் நிரந்தரமான பரிகாரம் காணுவது கடினமாக இருக்கும்.

**திரு. எம். ஏ. லத்திப் :** புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகம் எந்த இடத்திலே வைக்கப்பட்டிருக்கிறது? எந்த எந்த மாவட்டங்களை உட்படுத்தி அது செயல்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அண்ணா போக்குவரத்துக் கழகம் சேலம், தர்மபுரி, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. சேலத்திலேதான் அதனுடைய தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. கடந்த பிப்ரவரி 15-ம் தேதியன்றுதான் அது துவங்கப்பட்டிருக்கிறது. அரசாங்க போக்குவரத்துத் துறையிலே ஏற்கனவே ஓடிக்கொண்டிருந்த 45 வழித்தடங்களை அவர்கள் நடத்தி வருகிறார்கள். அது நல்ல முறையிலே நடந்துவருகிறது.

### பிராட்வே-பெரியபாளையம் வழித்தடம்

*218. **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வழித்தடம் எண் 137 பேருந்தினை பெரியபாளையத்திலிருந்து மூக்கரம்பாக்கம் வரை நீட்டிக்கும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** 10—1—1973 முதல் வழித்தடம் எண் 137ஐ (பிராட்வே-பெரியபாளையம்) முக்காம்பாக்கம் வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** இந்தக் கோரிக்கையை ஏற்று உடனடியாக நீட்டித்தமைக்கு நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே அந்த வண்டி வழியிலேயே நின்றுவிடுகிறது. ஆகவே, புதிய வண்டிகளைப் போடுவதற்கு ஏற்பாடு செய்ய துறை முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கோரிக்கைகளுக்கு ஒரு எல்லை எப்பொழுதுமே இருக்காது என்பதைத்தான் இது காட்டுகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Periyapalayam is a pilgrim and tourist centre. By extending the bus route to Mukkarambakkam will not the people at Periapalayam lose their terminal facilities. Have the Government received any complaints from the pilgrims?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இதுவரையிலே எந்தப் புகாரும் வரவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதைப் புகாராக எழுப்ப வேண்டாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்த 137-ஆம் நம்பர் பஸ் பெரியபாளையத்திலிருந்து முக்காம்பாக்கம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்றாலும், பஸ் பாதி வழியில் நின்றுவிட்டால் பிரயோசனமில்லாமலிருக்கிறது. எனவே கோரிக்கைமேல் கோரிக்கை என்பதல்ல. குறையை அரசும் அமைச்சரும் முன்வந்து தீர்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பாதி வழியிலே நிற்பதைக் கட்டாயமாக சரிக்கட்ட போக்குவரத்துக் கழகமே நிச்சயமாக முன்வரும். அதில் ஆட்சேபணையில்லை. ஆனால் புதிய பஸ்ஸாக விட வேண்டுமென்று அங்கத்தினர்கள் கேட்டால், புதிய பஸ்களைப் போட்டுவிட்டு, பழைய பஸ்களைக் கொண்டுபோய் எங்கே நிறுத்துவது என்ற பிரச்னை எழும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன யோசனை, சிரமைப்புப் பணியைச் செவ்வனே முடிக்கப் பெரிதும் பயன்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*1973 மார்ச் 2]*

## பால் விற்பனை விலை

* **219 வினா—திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிற மாவட்டங்களில் பால் விலையை அரசு நிர்ணயித்திருப்பது போல தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலும் பால் விலையை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** திருச்சி, ஸ்ரீரங்கம், பால்வழங்கு மத்தியக் கூட்டுறவுச் சங்கம், தஞ்சாவூர் மாவட்டம் கூட்டுறவுப் பால் உற்பத்தி விற்பனைக் கூட்டமைப்பு ஆகியவைகளிடமிருந்து வாங்கும் பாலுக்கான விலையை ஏற்கெனவே பால் உற்பத்தி-பாற்பண்ணை வளர்ச்சித் துறை ஆணையாளர் 1969 டிசம்பரில் நிர்ணயித்துள்ளார். அதன்படி அச்சங்கங்களிடமிருந்து வாங்கும் பாலுக்குப் பணம் வழங்கப்படுகிறது. இவ்விலை விதங்கள் நியாயமானவை எனத் தெரிவதால் இந்த இரு மாவட்டங்களில் பால் விலையை மாற்றி அமைக்க வேண்டிய தேவையில்லை. ஏனைய மாவட்டங்களில் சேகரிக்கப்படும் பாலுக்கான கொள்முதல் விலையை மாற்றியமைப்பது குறித்து தமிழ் நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் ஆலோசனையுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தனியார் நடத்தும் பால் பண்ணைகளுக்கும், கூட்டுறவுத் துறையின் மூலம் நடைபெறும் பால் பண்ணைகளுக்கும் பால் விலையில் வித்தியாசம் உள்ள காரணத்தினால் பால் விலையை நிர்ணயிப்பதை அரசாங்கமே மேற்கொண்டு செய்யும் முயற்சியை விரைவில் அறிவிக்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, சென்னையிலே உள்ள பால் பண்ணைக்கும், மதுரையிலுள்ள பால் பண்ணைகளிலிருந்து வாங்கும் பாலுக்கும், கூட்டுறவுச் சங்கங்களாகயிருந்தாலும், தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்குவதாகயிருந்தாலும் நாம் பால் விலையை நிர்ணயம் செய்கிறோம். தரத்தின் அடிப்படையில் பால் விலை நிர்ணயிக்கப்படுகிறது. 1969-ஆம் வருஷம் இந்தப் பால் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்ற முறையை ஏற்று, 15—8—71-ஆம் தேதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட பால் விலை மற்ற மாவட்டங்களிலே விலையைச் சற்று உயர்த்தியிருக்கிறோம். ஆனால் தஞ்சை, திருச்சியிலே ஏற்கனவே வழங்கப்பட்ட விலை இந்த விலையோடு ஒத்து வருவதால் இந்த விலை உயர்த்தப்படவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

[1973 மார்ச் 2

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, 69-ஆம் வருஷத்து அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்பொழுது சென்னைத் திட்டத்திற்குப் பலயிடங்களிலிருந்து பால் வருகிறது. இப்பொழுது லிட்டர் 90 பைசாவிற்கு விற்கப்படுகிறது. ஆனால் சமீபத்தில் மாட்டுத் தீவனங்களான பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை முதலியவை 100 சதவிகிதம் விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே, பால் விலை கட்டுப்படியாகாமல், குறைந்துகொண்டு கொஞ்சம் கொஞ்சமாகப் பால் உற்பத்தி குறையக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, மற்றப் பொருள்களின் விலையை அனுசரித்து பால் விலையை உயர்த்துவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, விவசாயிகளுக்குக் கட்டுப்படியாக வேண்டும், பால் வழங்குபவர்களுக்குக் கட்டுப்படியாக வேண்டும் என்று உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அதை உயர்த்தும் நேரத்தில் பால் வாங்க முடியாத நிலையில் விலையை உயர்த்திவிட்டார்கள் என்ற பிரச்னை எழும். ஆகவே இவைகளை இணைத்துத்தான், இரண்டு வழிகளிலும் யோசனை செய்து விலையை நிர்ணயம் செய்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களிலேயிருக்கும் நிலையைவிட திருச்சி மாவட்டத்திலே பால் விநியோகம் குறைவாக இருக்கிறது. இதைப் பெருக்குவதற்காக நல்ல நாணயமுள்ளவர்களுக்கு மாடுகளை இலவசமாக வாங்கிக் கொடுத்து வட்டங்கள்தோறும் பால் சேகரிக்கும் ஸ்தாபனங்களை ஏற்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இலவசமாக வழங்குவது என்பது இயலாத காரியம். ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு எந்தெந்த வகையிலே அரசு அதிகமாக மானியம் கொடுத்து பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொள்ள வேண்டுமோ அதை மேற்கொண்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: In view of the recent increase in the price of milk and also increase in the price of fodder which is almost 70 per cent to 80 per cent, will the Government consider it necessary to control fodder price so that the milk price will not go up?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, பாலுக்கு விலை நிர்ணயம் செய்வதைப்பற்றித்தான் இப்பொழுது சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தீவன உற்பத்தியாக இருந்தாலும், மாடுகளைப் பராமரிக்கும் சாதனங்

களாகயிருந்தாலும் விலே உயர்த்தப்பட்டிருப்பதால் பால் உற்பத்தியாளர்கள் சிரமப்படுகிருர்கள் என்பதைப் பரிசிலித்த பிறகு கடந்த ஐந்து மாத காலத்திற்கு முன் பால் விலேயை உயர்த்தியிருக்கிரேம்.

DR. H. V. HANDE: Will the Government give plastic bottles. . . .

MR. DEPUTY SPEAKER: That is the next question.

திரு. கே. என். குமாரசாமி: தலேவரவர்களே, தமிழ்நாட்டிலே பால் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று அரசு அக்கறை கொண்டிருந்தாலும் மாட்டுத் தீவனம் என்று சொல்லப்படும் பருத்திக் கொட்டையை அதிக விலே கொடுத்து சோப்பு செய்யும் பேக்டரிகள் முழுவதுமாக வாங்கி விடுகிருர்கள். பருத்திக்கொட்டை மாடுகளுக்கு அத்தியாவசியமான தேவை. அதை வாங்க முடியாமல் இருப்பதைத் தடுக்க அரசாங்கம் பருத்திக் கொட்டை விலேயைக் குறைப்பதற்கோ அல்லது இம்மாதிரி பேக்டரிகள் வாங்குவதைத் தடுப்பதற்கோ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலேவரவர்களே, இதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லே.

திரு. என். கிட்டப்பா: தலேவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாயூரம் நகரில் தனியார் நடத்தும் பால்பண்ணேகளில் லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாயும், அதே நேரத்தில் கூட்டுறவுத் துறையில் நடத்தும் பால் பண்ணேகளில் லிட்டர் ஒன்றுக்கு 85 காசுக்கும் வழங்கப்படுகிறது. இதைச் சரிசெய்து கூட்டுறவுத் துறைக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் இதை மாற்றியமைத்திட, சரி செய்திட அரசு ஆலோசனே வழங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலேவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்ட பால் உற்பத்தி விற்பனேக் கூட்டமைப்பின் சார்பில் உற்பத்தியான பாலே நாம் வாங்குகிரேம். தனியார் வெளியில் விற்கும் நிலேமைகளே வைத்து கூட்டமைப்பின்மூலம் விலே நிர்ணயம் செய்ய முடியாது.

*Supply of milk in plastic containers*

*220 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:—

(a) whether there are proposals under the consideration of the Government to replace the bottles with plastic bags for milk distribution by the Tamil Nadu Dairy Development Corporation; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) தமிழ் நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் புட்டிகளில் பால் வழங்கு முறையை முழுவதுமாக மாற்றி விட்டு அதற்குப் பதிலாக பிளாஸ்டிக் சிப்பங்களில் பால் வழங்கத் திட்டமிட வில்லை. சோதனை அடிப்படையில் மட்டுமே இந்த முறையை மேற்கொள்ளக் கழகம் கருதியுள்ளது. இச்சோதனையில் வெற்றி கிட்டினால், அதிக அளவில் பாலை இத்தகைய கொள்கலன்களில் வழங்கக் கழகம் முயற்சி செய்யும்.

(இ) இந்த யந்திரங்கள் முழுவதும் தானே இயங்குபவையாகும். இவை இரு மடிப்புகளையுடைய பாலிதின் தாள்களைக் கொண்டு பைகளைத் தயாரித்து அவற்றினுள் பாலை நிரப்பி பையினுள் காற்றுப் புகா வண்ணம் அடைத்து அப்பைகளின் வாய்கள் பற்ற வைப்பு முறை மூலம் இறுக மூடப்படுகின்றன. இந்த யந்திரங்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன. இதற்கு ரூ. 3 லட்சம் வரை அந்நியச் செலாவணி தேவைப்படும்.

Dr. H. V. HANDE : The Hon. Minister was saying that he would not be able to give plastic bottles for all. Will it be possible for this Government to see to it that fresh milk is supplied at distribution points in time. Now there is a lot of time-lag between production and distribution time. Will the Hon. Minister streamline the thing and see that within three to four hours from milching the cow, it is bottled and reaches distribution points?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, இப்பொழுது சேகரிக்கப்படும் பால், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சென்னைக்குக் கொண்டு வருகிறோம். ஆனால் கொஞ்சம் தாமதப்பட்டு விநியோகிக்கப்பட்டாலும் அது கெடாத வகையிலே எந்தெந்த வகைகளிலே பாது காக்கப்பட வேண்டுமோ அப்படிப் பாதுகாத்து தூய்மையாக வழங்க நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். பிளாஸ்டிக் பைகளில் வழங்குவதைப் பொறுத்த வரையில் மேலும் தூய்மையாக செய்யத்தான் இந்த ஏற்பாடுகளை நாம் சோதனை முறையிலே மேற்கொள்ள இருக்கிறோம். அது வெற்றியைக் கொடுத்தால் தொடர்ந்து செய்யலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த பிளாஸ்டிக் பைகளிலே பால் கொடுப்பதால் பொதுச் சுகாதாரத்திற்குக் கெடுதல் இருக்கிறது என்ற கருத்தைச் சொல்கிறார்கள். அதைத் திரும்ப 'ஃப்யூமிகேட்' செய்ய வேண்டுமென்ற கருத்து கூறப்படுகிறது. எனவே அது சம்பந்தமாக ஆய்வு நடத்தப்படுமா? அதன் முடிவு என்ன என்று அறிவிப்பார்களா?

1973 மார்ச் 2]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அத்தகைய புகார்கள் எதுவும் இதுவரையில் வரவில்லை. உத்தரப் பிரதேசத்தில் இருக்கும் பந்த் நகரில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும், இமாலயப் பிரதேசத்தில் மாண்டி பால் பண்ணையிலும் பிளாஸ்டிக் பை முறை வெற்றிகரமாகச் செயல்படுத்துகிறது. பல வெளிநாடுகளிலும் இம்மாதிரி பின்பற்றப்பட்டு வெற்றிகரமாக இருப்பதால் நம்முடைய நகரத்திலும் செய்ய வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

DR. H. V. HANDE : Will it be possible for the Hon. Minister to take steps to see that milk brought in the vans are kept in cold-storage, because the milk gets spoiled when it is kept for more than 6 or 8 hours and it takes such a long time before it reaches the last distribution point?

மு.ப. 10-00

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பால் பக்குவம் செய்யப்பட்டவுடன் இரவு நேரத்தில் பால் அந்தந்த விற்பனை நிலையங்களுக்குக் கொண்டு போய் விநியோகிக்கப்படுகிறது. எல்லா வகையிலும் கெடாத அளவுக்கு பால் பக்குவப் படுத்தி அனுப்பப்படுகின்ற காரணத்தால் அவை கெட்டுப் போக வழி இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்போது புட்டியில் வருகின்ற பாலுக்கே கார்க் போட்டு மூடுவது கிடையாது. மூடி போட்டு அனுப்பும் போதே பல ஜந்துக்கள் அதிலே இருக்கிறபோது மூடி இல்லாமல் இருந்தால் நிலைமை என்னவாகும். இதனால் கலப்படம் செய்வதற்கு அதிக வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பால் பண்ணைக்கு மின்சாரம் வெட்டியதன் காரணமாகத்தான் அந்த மூடிகள் போடப்படுவதில்லை என்று சொல்லுகிறார்கள். இதைத் தவிர்க்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பால் பண்ணைகளுக்கு மின் வெட்டு கிடையாது. கவர் போடாமல் அனுப்புவதில்லை. அலுமினிய கவர் போட்டுத்தான் எல்லா விற்பனை நிலையங்களுக்கும் அனுப்புகிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்போது கவர் போடாமல் பாட்டில் சப்ளை செய்யப்படுகிறது. கேட்டால் மின்சார வெட்டு என்று சொல்லுகிறார்கள். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சர் அவர்கள் இது பற்றிக் கவனித்து ஆவன செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அப்படிப்பட்ட குறை இருக்குமானால் கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Are these plastic bags or bottles capable of being used for a second time? Can they be re-used?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அந்த பிளாஸ்டிக் பைகளை ஒருமுறை உபயோகித்த பிறகு இரண்டாவது முறையாக உபயோகப்படுத்த முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்.

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருக்கும் திருவாளர்கள் ஈ. எம். நடராசன், எம். ஆர். கண்ணன், துரைமுருகன், ந. கணபதி, முனு ஆதி, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோரின் பதவிக் காலம் 22—3—1973-ம் நாளுடன் முடிவடைய இருப்பதால், மேற்குறிப்பிட்ட ஆறு வெற்றிடங்களுக்கு, தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து அறுவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 6—3—1973 செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 7—3—1973 புதன்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 8—3—1973 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறு இடங்களுக்கு மேற்படின், 12—3—1973 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டப் பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் பழைய ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

### (ஆ) பேரவை உறுப்பினர் திரு. ஸி. வே. வேலப்பன் கைது செய்யப்பட்டிருப்பதான செய்தி குறித்து

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that I have received a telegraphic message on 1st March 1973 from the District Superintendent of Police, Salem Town that Thiru C. V. Velappan, M.L.A., Kabilamalai Constituency, Salem district was arrested for picketing before the Collector's Office on 1st March 1973 at 11-15 a.m. at Salem Town, under Sections 143, 341, I.P.C. and 7 (1) of the Criminal Law Amendment Act.

### (3) அவை உரிமைத் தீர்மானம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே பேரவைத் துணைத் தலைவரைப்பற்றியும், உறுப்பினர்களைப்பற்றியும் அவைக்கு வெளியே பேசிய பேச்சும் அது 'தென்னகம்' நாளிதழில் வெளியிடப்பட்டதும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் 184-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த கீழ்க்கண்ட பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும், திரு. கோதர் முகைதீன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

"'தென்னகம்' தமிழ் நாளிதழ் சென்னை 28—2—1973 வெளியீடு 1—3—1973 பதிப்பில் கீழ்க்கண்ட தகவல் இம்மாமன்றத்தின் உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியதாக வெளிவந்துள்ளது—

'கோவிலில் பூசாரியாகப் போக வேண்டியவர்கள் தவறி சட்டமன்றத்திற்கு மணி அடிக்க வந்து விட்டார்கள்'.

சட்டசபையில் வன்முறை.

'நேர்மையான பதிலை அளிக்க தைரியமில்லாத மானங்கெட்டவர்கள் வெளியே அனுப்புகிறார்கள். மானம் மரியாதை இருக்கக் கூடியவர்கள் சட்டமன்றத்தில் பேச முடியாது.

சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கிறது என்பதால் பலாத்காரத்தில் ஈடுபடுகிறார்கள். வன்முறையில் ஈடுபடுகிறார்கள்'.

இது இப்பேரவையை மட்டுமின்றி, பேரவைத் தலைவரையும் பேரவை உறுப்பினர்களையும் பாதிக்கக்கூடிய ஒன்றாகும். எனவே, இப்பேரவையின் உரிமையை மீறிய செயலாகும். இதுகுறித்து பேரவையில் விவாதித்து அவையுரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்"

என்று திரு. வீராசாமி அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கோதர் முகைதீன் அவர்கள்—

"சட்டமன்றத்தில் ஜனநாயகம் செத்துவிட்டது. கருணாநிதியின் கைக்கூலிகள் சட்டசபையில் ஆதிக்கம் பெற்று ஜனநாயகத்தைக் கொலை செய்து விட்டனர். சட்டசபை பொறுப்பேற்றிருப்பவர்கள் கருணாநிதியைக் கண்டு பயந்து, நடுங்கிக் கொண்டு செயல்படுகிறார்கள். நேர்மையான கேள்விகளுக்கு நியாயமான முறையில் தீர்ப்பளிக்கத் தைரியமில்லை. திராணியுமில்லை. கோவிலில் பூசாரியாகப் போக வேண்டியவர்கள், தவறி சட்டமன்றத்துக்கு மணியடிக்க வந்துவிட்டார்கள்.

இது இப்பேரவையை மட்டுமின்றி, பேரவைத் தலைவரையும் பேரவை உறுப்பினர்களையும் பாதிக்கக் கூடிய ஒன்றாகும். எனவே, இப்பேரவையின் உரிமையை மீறிய செயலாகும். இது குறித்து பேரவையில் விவாதித்து அவையுரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்"

என்று கொடுத்திருக்கிறார். இது எப்படி உரிமை மீறிய செயல் என்பதைப் பற்றி முதலில் திரு. வீராசாமி அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, சுதந்திராக் கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதை உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்திருக்கின்ற திரு. வீராசாமி அவர்களும், கோதர் முகைதீன் அவர்களும் எப்படி உரிமைப் பிரச்சினையின் கீழ் வருகிறது என்பதை விளக்குவதற்கு முன்னால் டாக்டர் ஹாண்டே அவர்கள் அப்படிப் பேசினாரா இல்லையா என்பதை விளக்கிவிட்டால் மேற்கொண்டு பேசுவதற்கு ஏதுவாக இருக்கும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் பேசியிருக்கலாம். என்ன பேசியிருக்கிறேன் என்று தெரியாது. It is quite likely; but unless I am given a copy. I cannot say definitely. சாதாரணமாக இம்மாதிரி உரிமைப்

*பிரச்சினை கொண்டு வரும்போது யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு ஒரு காப்பி கொடுத்திருந்தால் படித்துப் பார்த்துவிட்டுச் சொல்லியிருக்கலாம். நான் சட்டசபையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி விமர்சனம் செய்திருக்கலாம், அதற்குத் தண்டனை கொடுத்தால் ஏற்றுக் கொள்ளத் தயார். என்ன பேசியிருக்கிறேன் என்று முதலிலே சொன்னால் அதற்குப் பிறகு நான் பதில் சொல்லுகிறேன்.*

*திரு. நா. வீராசாமி:* தலைவர் அவர்களே, சென்னையை அடுத்த பல்லவபுரத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது இந்த மன்றத்திற்குத் தலைமை தாங்கக் கூடிய தங்களைப் பற்றியும், இந்த மன்றத்தின் உறுப்பினர்களாகிய எங்களைப் பற்றியும் பொதுவாக இந்த மன்றத்தைப் பற்றியும், குறை கூறியும், இழித்தும், பழித்தும், கேலியும், கிண்டலுமாகப் பேசியிருப்பதைத் 'தென்னகம்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. அது 28—2—73-ம் நாள் தென்னகம் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. இன்று வரை டாக்டர் ஹாண்டே அவர்கள் அதற்கு எந்தவித மறுப்பும் தெரிவிக்கவில்லை. அவர் குறிப்பிட்டிருக்கும் வார்த்தைகள் உள்ளபடியே எந்த அளவுக்கு இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களின் உள்ளத்தைப் புண்படுத்தக்கூடியதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

'சட்டமன்றத்தில் ஜனநாயகம் செத்து விட்டது. கருணாநிதியின் கைக் கூலிகள் சட்ட சபையில் ஆதிக்கம் பெற்று ஜனநாயகத்தைக் கொலை செய்து விட்டனர். சட்டசபை பொறுப்பேற்றிருப்பவர்கள் கருணாநிதியைக் கண்டு பயந்து நடுங்கிக் கொண்டு செயல்படுகிறார்கள். நேர்மையான கேள்விகளுக்கு நியாயமான முறையில் தீர்ப்பளிக்கத் தைரியமில்லை, திராணியுமில்லை' என்று சொன்னதோடு மாத்திரமல்லாமல் துணைத் தலைவராக இருக்கக்கூடிய தங்கள் மீது தெளிவாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். 'திராணியும் இல்லை' என்று சொன்னதற்கு மேலே ஒருபடி சென்று 'கோவிலில் பூசாரியாகப் போக வேண்டியவர்கள் தவறி சட்டமன்றத்துக்கு மணியடிக்க வந்து விட்டார்கள்' என்று பேசியிருக்கிறார்.

உள்ளபடியே இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய மணியை கோவில் மணியாக ஆக்கும் அளவுக்கு ஒரு மன்ற உறுப்பினர் பேசியிருப்பது அவையின் உரிமை மீறிய செயலாகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அவர் தொடர்ந்து பேசியிருக்கிறார்—'நேர்மையான பதிலை அளிக்கத் தைரியமில்லாத மானங்கெட்டவர்கள் வெளியே அனுப்புகிறார்கள்.'

டாக்டர் எச். வி. ஹாண்டே பேரவைத் துணைத் தலைவரைப் பற்றியும், உறுப்பினர்களைப் பற்றியும் அவதூறாக வெளியே பேசிய பேச்சும் அது "தென்னகம்" நாளிதழில் வெளியிடப்பட்டதும் குறித்து

[திரு. நா. வீராசாமி] [1973 மார்ச் 2

இந்த மன்றத்தில் ஒரு உறுப்பினரை வெளியே அனுப்பக்கூடிய அதிகாரம் தலைமை தாங்கக்கூடிய தங்களுக்குத்தான் இருக்கிறது. ஆக, தங்களைப் பார்த்து 'மானங்கெட்டவர்கள் வெளியே அனுப்புகிறார்கள்' என்று சொல்லுவது உண்மையிலேயே இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும். மேலும் சொல்லுகிறார்—

'மானம் மரியாதை இருக்கக்கூடியவர்கள் சட்டமன்றத்தில் பேச முடியாது'.

ஹாண்டே அவர்கள் உட்பட இங்கே பேசிக் கொண்டிருப்பதைப் பத்திரிகையில் பார்க்கிறோம். மானம் இருக்கக்கூடியவர்கள்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 'மானம் மரியாதை இல்லாதவர்கள் சட்ட மன்றத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்' என்ற முறையில் இந்த மன்ற உறுப்பினர்களைப் பார்த்து, எங்களைப் பார்த்து கூறியிருப்பது உள்ளபடியே வருந்தத் தக்கது.

'சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கிறது என்பதால் பலாத்காரத்தில் ஈடுபடுகிறார்கள், வன்முறையில் ஈடுபடுகிறார்கள்' என்று கூறியிருக்கிறார். இந்தச் சபையினுடைய பாரம்பரியத்தில் அத்தகைய வன்முறை நடைபெறுகிறதா? பல மன்றங்களிலே அப்படி நடைபெறுகிறது என்றாலும் உள்ளபடியே அப்படி இங்கே நடைபெறுகிறதா? இந்த மன்றத்தில் இருக்கக் கூடிய ஆளும் கட்சி உறுப்பினர்கள், வன்முறையில் ஈடுபடுகிறார்கள், பலாத்காரத்தில் ஈடுபடுகிறார்கள் என்ற முறையில் இவ்வாறெல்லாம் பேசியிருப்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே இந்த மன்றத்தில் இருக்கும் எங்களையும், தலைமை தாங்கக்கூடிய உங்களையும் கேவலமாகப் பேசியிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு இப்படிப்பட்ட விவகாரங்கள் பற்றியும், எந்தப் பாரம்பரியத்திலே நாம் இந்த மன்றத்தை நடத்துகிறோம் என்றால் 'மேஸ் பார்லிமென்டரி பிராக்டீஸ்'படி. அந்தப் புத்தகத்தின் 18 ஆவது எடிஷன், 141 ஆவது பக்கத்திலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

'To print or publish any books or libels reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House, and indignities offered to their House by words spoken or writings published reflecting on its character or proceedings have been constantly punished by both the Lords and the Commons upon the principle that such acts tend to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due to them.

Reflections upon Members, the particular individuals not being named or otherwise indicated, are equivalent to reflections on the House . . .'

ஆக, இந்த மன்றத்திலே இருக்கிற ஒருவரைப் பெயர் சொல்லிக் குறிப்பிடா விட்டாலும், பொதுவாகச் சொன்னாலும் இங்கே இருக்கக்கூடிய துணைத்தலைவரைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ, இந்த மன்றத்தைப் பற்றியோ இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களைப் பற்றியோ டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசி இருப்பது இந்த அவை உரிமையை மீறக் கூடிய பிரச்சினையாகும். ஆகவே, இந்தப் பிரச்சினையில் துணைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பைக் கொடுத்து இதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*** திரு. எஸ். முகமது கோதர் முகைதீன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தின் உறுப்பினராக இருக்கிற டாக்டர் ஹாண்டே அவர்கள் பல்லவபுரத்திலே நடந்த ஒரு பொதுக் கூட்டத்திலே இந்த அவையினுடைய உறுப்பினர் அனைவரையும் மிக மோசமான நிலைமையிலே தாக்கியும், இந்த அவையை நல்ல முறையிலே நடத்திச் செல்லுகின்ற தங்களையும் கோயிலிலே மணி அடிக்க வேண்டியவர்கள் இங்கே வந்து மணி அடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும், முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இங்கே இருக்கிற சபாநாயகர் நடுங்கிக் கொண்டிருக்கிறார் என்றும், இந்தச் சட்ட மன்றத்திலே ஜனநாயகம் செத்துவிட்டது என்றும், இந்தச் சட்ட மன்றத்திலே இருக்கிறவர்கள் கருணாநிதியினுடைய கைக்கூலியாக இருந்து செயல்படுகிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு கருணாநிதி யினுடைய கைக்கூலியாக இருந்து இந்தச் சட்ட மன்றத்திலே இருப்பவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று கூறும்பொழுது, இந்தச் சட்ட மன்றத்திலேயுள்ள எல்லா உறுப்பினர்களுடைய உரிமையையும் பாதிக்கின்ற வகையிலே அவருடைய பேச்சானது அமையப் பெற்றிருக்கிறது. மேலும், டாக்டர் ஹாண்டே அவர்களே கூட தான் அப்படித் தான் பேசியிருப்பேன் என்று இங்கே கூறுகின்றார்கள். ஆகவே, ஜனநாயக மரபிலே இந்தச் சட்ட மன்றமும், ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற விதத்திலே சட்ட மன்றத்தின் நடவடிக்கைகள் அமையப் பெற்றால் தான், நாட்டிலே ஜனநாயகம் தழைப்ப தற்கு எடுத்துக்காட்டாக இந்த மன்றம் இருக்க முடியும். இந்தச் சட்ட மன்றத்தினுடைய நடவடிக்கைகளைப் பற்றி இந்த மன்றத்தினுடைய உறுப்பினரே இவ்வளவு மோசமாகப் பேசுவார்களானால் நாட்டிலே ஒரு நல்ல

நிலை அமையாது. அவர்கள் பேசிய இந்த பேச்சானது அவையின் உரிமையைத் தகர்க்கின்ற பேச்சாக அமைந்திருப்பதால் இதிலே தாங்கள் தகுந்த தீர்ப் பளித்து உரிமைக் கமிட்டிக்கு விடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, I will be able to defend myself provided I am given a full opportunity to discuss the events that took place (Interruption from Thiru N. Veeraswamy) on the last day of the previous sitting of the House. I would be very grateful to the Hon. Deputy Speaker if I am given permission to refer to the circumstances under which I was sent out of the House (Interruption from Thiru V. Krishnamoorthy). Sir, if am allowed to refer to it and given an opportunity to go into the circumstances under which I was asked to withdraw from the House, it would be better.

First of all, I would like to say that it is quite possible that I would have strongly criticised the Hon. Deputy Speaker outside the House and any punishment I am prepared to accept. I am also prepared even if the whole matter is referred to the Committee of Privileges so that the whole thing can be discussed there . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும் பொழுது இதை உரிமைக் குழுவிற்குப் போகட்டும் என்று சொல்லிப் பேசியிருக்கிறார். அது இந்தப் பத்திரிக்கையிலே கூட வந்திருக்கிறது. அவர் சொல்லுகிறார், "இப்படி நான் பேசுவதால் என் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வருவார்கள். அப்படி வந்தால், நான் அங்கேயே சென்று வாதிப்பேன். அந்தச் சமயத்திலே கருணாநிதி கட்சியின் ஊழலை மேலும் அம்பலப்படுத்த எனக்கு வாய்ப்பிருக்கும்" என்கிறார். இந்த விஷயத் திலே ஆளும் கட்சிக்கு எப்படிப் பேச உரிமை இருக்கிறதோ, அதைப்போல் எதிர்க் கட்சியிலே இருப்பவர்களுக்கும் உரிமை இருக்கிறது. இந்த அவையிலே இருக்கும் எல்லா உறுப்பினர்களையும் சேர்த்துத் தான் மானம் மரியாதை இருப்பவர்கள் சட்ட மன்றத்தில் பேச முடியாது என்றும், மானம் கெட்ட கருணாநிதி, கேடுகெட்ட கருணாநிதி, மூன்றும் தர முசோலினி போன்ற வார்த் தைகளைத் தாராளமாக ஹாண்டே அவர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள். இதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அதே நோக்கிலே சபாநாயகரை கோயிலிலே மணி அடிக்கின்ற பூசாரிக்கு ஒப்பானவர் என்றும், இங்கிருக்கும் உறுப்பினர்களை மானம் கெட்டவர்கள், மரியாதை கெட்டவர்கள் என்றும் பேசுவது சரி இல்லை. எங்களுக்கு இதிலே இருக்கின்ற உணர்ச்சி எதிர்த்

தாப்பிலே இருப்பவர்களுக்கும் ஏற்படும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், என்ன காரணத்தினாலோ அவர்கள் எல்லாம் இது பற்றி ஒரு கருத்தும் சொல்லாமல் இருக்கிறார்கள். ஒருவேளை சொல்லக் கூடும். இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசி விடுவதால், ஒரு ஆளும் கட்சியோ ஒரு அமைச்சர் அவையோ இதற்காகத் தலைகுனிந்து அய்யோ இப்படிச் சொல்லிவிட்டார்களே என்று பயந்துவிடுவார்கள் என்று கருதக் கூடாது. எங்களைப் பார்த்து மானம் கெட்டவர்கள், முசோலினி, கேடுகெட்டவர்கள் என்று சொல்லிவிடுவதால் நாங்கள் ஆத்திரப்படவில்லை. காரணம், நாங்கள் காலம் சென்ற அறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே வந்தவர்கள். இதைவிட கேவலமான வசை மொழிகளையும், வார்த்தைகளையும் அவர் கேட்டு அன்று அவற்றைத் தாங்கி வந்திருக்கிறார். குழாய் அடியிலே சில பெண்கள் சண்டை போட்டுக் கொள்வார்கள். அதிலே ஒருத்தி நல்ல வாயாடியாக இருப்பாள் . . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே: பாயின்ட் ஆப் ஆர்டர் . . . (குறுக்கிடுகள்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் பேசுவதில் எது 'பாயின்ட் ஆப் ஆர்டர்' கீழ் வருகிறது என்று சொல்ல வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் கிளப்பக் கூடிய ஒழுங்குப் பிரச்சினை, நான் பேசுகிற நேரத்திலே நான் முழுமையாக எனது பேச்சை முடிக்க உரிமை தரப்படவேண்டும். அந்த வகையிலே மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் எனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. நான் இன்னும் பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன், அதற்கிடையிலே முதல்வர் அவர்கள் வழிமறித்துப் பேச ஆரம்பித்தார்கள். நான் கேட்பதெல்லாம், இந்த மன்றத்திலே அதுவும் உரிமைப் பிரச்சினை என் மீது எழுப்பப்பட்ட நேரத்திலே பேச முழு உரிமை எனக்குத் தரவில்லை என்றால்—நான் பாதியிலே நிறுத்திவிட்டு உடனடியாக முதலமைச்சர் பேசுவது என்றால், இது முறை தானா என்று கேட்கிறேன்? நான் பேசுவதற்கு முழு உரிமை கொடுக்க வேண்டாமா? நீங்கள் தான் அவர்களை அடக்க வேண்டும். அவர்களை அடக்குவதற்கு முன்பாக . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் தான் என்னைப் பேசவிட மாட்டேன் என்கிறீர்களே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உரிமைப் பிரச்சினைக்கு இதை விடலாம் என்று அவர் சொன்ன பிறகு, அதிலே பேசுவதற்கு எதுவுமில்லை என்று நான் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் பேரிலே உரிமைப் பிரச்சினை வந்திருக்கிறது. இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பலாமா கூடாதா என்பது தான் பிரச்சினை. அதை அனுப்பக் கூடாது என்பதற்கான காரணங் களை நீங்கள் சொல்ல வேண்டுமே தவிர, உரிமைக் கமிட்டியிலே நீங்கள் பேச வேண்டியதை இப்பொழுது இங்கே பேச நான் அனுமதிக்கமாட்டேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் பேசி முடிப்பதற்குள் அவர் பேச என்ன உரிமை இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒன்றை டாக்டர் ஹாண்டே அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். முதலமைச்சர் பேசக் கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்? நீங்கள் கூட பேசலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அவர் மாத்திரம் பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் பேசுவது வேறு. (குறுக் கீடுகள்).

THIRU R. PONNAPPA NADAR : May I seek the permission of the Chair to speak a few words? On this subject we are only concerned with rule 187. Rule 187 says :—

'The right to raise a question of privilege shall be subject to the following restrictions, viz.—

(i) The alleged breach of privilege must refer to a matter of recent occurrence;

(ii) A *prima facie* case of breach of privilege must be made out'.

Now it has been stated before the House that Dr. H. V. Hande is alleged to have made a speech wherein he is alleged to have made certain remarks. It is for us to decide whether a *prima facie* case of breach of privilege has been made out. If a *prima facie* case is made out, then it is a matter which has to go to the Privileges Committee. If no *prima facie* case is made out, it will have to be dropped out at this moment. That is the point which we have to consider. Whether a factual statement has been made out or not is a matter which will have to be investigated and gone into. I think it is better we do not generate heat. Let us discuss these matters in a dispassionate manner because if it is a question of privilege, this House is very much concerned with it. Whether

there is a *prima facie* case is the point we have to consider. So, far as this matter is concerned, there are things which are not happily worded. Whether such things have been stated or not is a matter which has to be gone into. I do not want to arrogate to myself the functions which are vested in the Privileges Committee. In the best interests of the House, in the interest of the sound principles, calmness, dignity and sobriety which have been so far upheld by the Tamil Nadu Legislature, it is better we shall not quarrel amongst ourselves on things purported to have been said outside the House.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது குழாயடியில் பெண்கள் சண்டை போட்டுக் கொள்வதுமாதிரி என்று சொன்னார்கள். இது, பெண்கள் வருத்தப்படக் கூடிய செய்தி. குழாயடியில் பெண்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் பேசும்போது அம்மையார் அவர்கள் பாதியில் எழுந்துவிட்ட காரணத்தினால் தவறான ஒரு தகவலைத் தருகிறார்கள். குழாயடியில் இரண்டு பெண்கள் சண்டை போட்டுக்கொள்கிற நேரத்தில் வாயாடியான ஒரு பெண் இதுபோன்ற வார்த்தைகளைச் சொல்வாள், ஆனால் சாதுவான மற்ற பெண் அதைத் திரும்பச் சொல்லமுடியாமல் நீ சொன்னது உனக்குத்தான் என்று சொல்லி விட்டுப் போய்விடுவாள். அதைத் தான் நான் சொன்னேன் ஹாண்டே அவர்களுக்கு.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதற்குப் பெண்களைச் சொல்வானேன். ஆண்களைச் சொல்வதுதானே? நாங்கள்தான் உங்களுக்குக் கிடைத்தோமா?

**மாண்புமிகு, டாக்டர் மு. கருணாநிதி:** இனிமேல் உங்கள் ராஜ்யத்தில் குழாயடிக்கு ஆண்கள் சென்றுவருவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** வாயாடியாக இருக்கக்கூடிய பெண் என்று சொன்னார்கள். வாயாடி என்று அவர் சொன்னதுமாதிரி இன்னொருவரும் சொல்லலாம், இது உங்களுக்குத்தான் பொருந்தும் என்று " What I said " என்பது பிரச்னை. என் பிரச்னையைக் குறித்து நான் அமைதியாகச் சொல்கிறேன். இன்றுள்ள பிரச்னை, அன்று நான் வெளியே அனுப்பப்பட்டேன். மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்களும் இந்த மன்றத்தில் அப்போது இருந்தார்கள். அதற்குப் பின் நான் இங்கு நுழையவில்லை. எல்லாவற்றையும் பற்றி பிரிவிலேஜ் கமிட்டியில் இவற்றைப் பற்றி யெல்லாம் சொல்ல எனக்கு

வாய்ப்பிருக்கும் என்று நினைக்கிறேன். அன்று எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்ட வார்த்தைகளைப் பற்றியும் பேச எனக்கு அங்கு வாய்ப்பிருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அன்று நான் வெளியே அனுப்பப்பட்டேன். அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதைப்பற்றி பொதுமேடையில் பேசியிருக்கிறேன். நல்ல வகையில், ஆணித்தரமாக, நான் வெளியே அனுப்பப்பட்டது, எத்தகைய காரணமும் இன்றி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கமிட்டிக்கு அனுப்பலாமா, கூடாதா ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் பேசியதைச் சொல்கிறேன். எத்தகைய காரணமும் இன்றி அனுவசியமாக நான் வெளியே அனுப்பப்பட்டேன். அது எனக்கு ஆத்திரமூட்டியது. ரூல்லை எடுத்துப் படித்தேன். அன்று திரு. சுப்பு அவர்கள் கூட இருந்தார்கள்.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நோ பாயின்ட் ஆப் ஆர்டர், உட்காருங்கள்.

DR. H. V. HANDE : Rule 71 states :

"The Speaker shall put the question to the vote of the House and shall decide it by voices. If the opinion of the Speaker as to the decision of the House is challenged . . .

நான் அன்று பேசியது இதுதான். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இதைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

If the opinion of the Speaker as to the decision of the House is challenged, he shall take the votes of the House by division.

சாலஞ்ச் நடக்காமல். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது தேவையில்லை, அதைக் கமிட்டியில் பேசுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் என்ன பேசினேன் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் கேட்கிற கேள்வி எல்லாம். . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் கேட்கிற கேள்வி எல்லாம். . .

**சில மாண்புமிகு உறுப்பினர்கள் :** நீங்கள் என்ன கேள்வி கேட்கிறது ?

*1973 மார்ச் 2]*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் எல்லாம் உட்காருங்கள். டாக்டர் ஹாண்டே, நான் உங்களைக் கேட்கிறேன். என்னை அலவ் பண்ணுங்கள். இப்போதுள்ள பிரச்னை, நீங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இப்படிப் பேசியதாக ஒரு பத்திரிகையில் வந்திருக்கிறது. திரு. வீராசாமி அவர்களும், திரு. முகைதீன் அவர்களும் எழுப்பியுள்ள பிரச்னையில் "ஹாண்டே அவர்கள் இப்படிப் பேசியிருக்கிறார்கள், சட்டசபையையும், பேரவைத் தலைவரையும், இங்குள்ள உறுப்பினர்களையும் பாதிக்கும் வகையில் பேசியிருக்கிறார்கள். இதை ஒரு குறிப்பிட்ட பத்திரிகை வெளியிட்டிருக்கிறது; இது சபை உரிமை மீறல் பிரச்னையாகும். ஆகையால் உரிமைக் குழுவிற்கு இதை அனுப்ப வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பேரவையின் சார்பில் நான் உங்களுக்கு அளிக்கிற வாய்ப்பு நீங்கள் இப்படிப் பேசினீர்களா இல்லையா என்று சொல்வதற்கே தவிர, பேசியதற்கான முன் காரணம் அல்லது பின் காரணங்கள் இவைகளை நான் கேட்க விரும்பவில்லை. அதற்குரிய இடம் ப்ரிவிலேஜ் கமிட்டி. அங்கு நீங்கள் தாராளமாக எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங்கள், எவ்வளவு ஆதாரங்கள் வேண்டுமானாலும் கொண்டு போய்ப் பேசலாம். இந்தப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கியுள்ளதைக் கூட அங்கு எடுத்துச் சொல்லலாம், அதை யாரும் தடுக்க முடியாது. இந்த இடத்தில் இப்போது நான் கேட்பது அப்படிப் பேசினீர்களா இல்லையா என்பதை மட்டும் தெரிவித்தால் போதும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் என்ன பேசியிருக்கிறேன் என்று சொல்ல எனக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** காரணங்களைச் சொல்லக் கூடாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ரூல் 71-ல், புத்தகங்களை வைத்துப் படித்துக் காட்டியிருக்கிறேன். ரூல் 71-ல்,—

If the opinion of the Speaker as to the decision of the House is challenged, he shall take the votes of the House by division.

அப்போதுதான் டிவிஷனுக்கு விடவேண்டும் என்று ஆரம்பித்தேன். ஆனால் அந்த நேரத்தில் அந்த மசோதாவிற்கு யாரும், நான் கூட டிவிஷன் கேட்கவில்லை, சாலஞ்ச் பண்ணவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது. நான் சொல்கிற பாயின்டை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. இந்தப் பத்திரிகையில் வந்துள்ளமாதிரி நீங்கள் பேசினீர்களா இல்லையா?

இல்லாவிட்டால் பத்திரிகைமீது நடவடிக்கை எடுக்கலாம். நீங்கள் பேசாததைப் பத்திரிகையில் போட்டிருந்தால் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கலாம். நீங்கள் அப்படிப் பேசி பத்திரிகையில் போட்டிருந்தால் இரண்டு பேரும் நடவடிக்கைக்கு உரியவர்கள். காரணங்கள் பற்றி கமிட்டியில் தாராளமாகச் சொல்லிக் கொள்ளலாம். நீங்கள் கமிட்டியில் தாராளமாகப் பேச உரிமை இருக்கிறது.

திரு. வீராசாமி அவர்களும், திரு. முகைதீன் அவர்களும் எழுப்பியுள்ளது மிக முக்கியமானதொரு பிரச்சினையாகும். அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள வாசகங்கள் இப் பேரவையின் கண்ணியத்தையும், மரியாதையையும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன என்பதில் எந்த விதமான ஐயமுமில்லை. இந்தப் பேரவையின் எந்த ஒரு உறுப்பினரையும் தனித்துப் பெயரிட்டோ அல்லது மறைமுகமாகவோ குறிப்பிடாமல் பொதுப்படையாக இழிவுபடுத்திப் பேசுவதுகூட அவையுரிமை மீறிய செயலாகும் என்பது சர். எர்ஸ்கின் மே அவர்களின் பாராளுமன்ற நடைமுறை விதிகள் பற்றிய புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் இதுவரை கடைப்பிடித்து வந்த ஒரு கொள்கை இருக்கிறது. பேரவைபற்றி பொதுவாகவோ, பேரவையின் தலைமையைப்பற்றியோ, அல்லது பேரவையின் ஒரு உறுப்பினரைப்பற்றியோ அவதூறாகப் பேசுவது அவையுரிமை மீறல் என்று கருதப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு குறிப்பிடப்பட்ட வாசகங்கள் பேரவைத் தலைமையையும், பேரவையின் உறுப்பினர்களையும், இழித்துக் கூறப்பட்டவை என்பதில் ஐயமில்லை. இப்பேரவையின் உறுப்பினரான டாக்டர் ஹாண்டே அவர்கள் இவ்வாசகங்களைக் கூறியதாகப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. அவர்கள் அதை மறுக்கவில்லை. ஆகவே, இதிலே உரிமை மீறிய செயல் இருப்பதாக அறிகிறேன். எனவே அதுபற்றி ஆய்ந்தறிய இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைக்கலாம் என்று கருதுகிறேன். இப்போது திரு. நா. வீராசாமி அவர்கள் தம்முடைய தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

மு.ப. 10–30

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே,

"டாக்டர் ஹாண்டே அவர்கள் மீதும், 'தென்னகம்' பத்திரிகையின் ஆசிரியர், வெளியிடுவோர், உரிமையாளர் ஆகியோர் மீதும் இங்கு எழுப்பப்பட்டுள்ள இந்த அவையுரிமை மீறல் பிரச்சினையை ஆய்ந்து அறிக்கை அளிக்க இதை அவையுரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

*1973 மார்ச் 2]*

திரு. முகமது கோதர் முகைதீன்: நான் இதை வழிமொழிகிறேன்.

(Dr. Hande stood up in his seat.)

MR. DEPUTY SP]EAKER: Do you want to speak? You can not speak now.

MR DEPUTY SPEAKER: Do you want to speak? You can- when a Motion is before the House, is it for discussion or not? We can talk on any motion . . .

MR. DEPUTY SPEAKER: You can and you have got the right, but with one condition.

இதை அவை உரிமைக் குழுவிற்கு விடலாமா, விடக்கூடாதா என்பதுபற்றிப் பேசலாம். அதற்கான காரணங்களுக்குப் போகக் கூடாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இரண்டும் பேசலாம், அதை எதிர்த்தும் பேசலாம், ஆதரித்தும் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆனால் அந்தப் பாயின்டை விட்டு வெளியே போகக் கூடாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு.)

THIRU M. A. LATHEEF: On a point of order, Sir. . . . .

DR. H. V. HANDE: Afterwards you can speak and everyone can speak. Let me finish first. . . .

MR. DEPUTY SPEAKER: Mr. Latheef, please sit down. I have asked him to speak. . . .

THIRU M. A. LATHEEF: Does he raise a debate on this Motion? If so, I have to raise a point of order. . . .

MR. DEPUTY SPEAKER: On any motion, members can speak.

THIRU M. A. LATHEEF: No doubt, members of this House are entitled for that as the Hon. Chair has rightly pointed out to have a discussion on any motion, if they so desire. But the Motion that has been now moved by the hon. Member, Thiru

Veerasami, is not the motion in which the same right and privillage can be claimed, because the motion itself is in respect of a privilege issue that has been raised in this House and discussed in this House itself and it has been decided that it should be referred to the Privileges Committee on the finding of a *prima facie* case and whether a *prima facie* case exists or not, it is for the Chair to decide and the Chair in this case has already decided and he has allowed the hon. Member Thiru Veerasami to move the Motion, and he has moved. Now with regard to the merits and demerits of the case that is involved in this should be discussed only in the Privileges Committee and the hon. Member should adduce his reasons in the Committee. No matter that should be discussed in the Committee could be brought for discussion in this House at this juncture. The hon. Member can refer to only those points to substantiate that the matter should not be sent to the Privileges Committee. But in so far as the Hon. Chair has already given a ruling that it should be referred to the Committee of Privileges, there cannot be any discussion. That is my submission. Otherwise, the proceedings of the Privileges Committee will be jeopardised, prejudiced and we will be usurping the rights of the members of the Privileges Committee by the House itself, though, of course, the House is competent to do so. But when the Chair has already given a ruling that the hon. Member may move the motion. . . .

MR. DEPUTY SPEAKER : I have not given a ruling. . .

THIRU M. A. LATHEEF : You have allowed the hon. Member to move the motion and therefore, the hon. Member (Dr. Hande) cannot go into the merits and demerits of the case now. That is my position, Sir.

MR. DEPUTY SPEAKER : Let me explain. The Chair has not given a ruling or the Chair has not referred the matter to the Committee of Privileges. I have. . . .

(Thirumathi T. N. Anandanayaki rose in her seat.)

MR. DEPUTY SPEAKER : Why do you raise a quarrel among yourselves? I have only asked the hon. Member Thiru Veerasami to move the motion to refer the matter to the Committee of Privileges. I have not yet referred the matter to the Committee.

*1973 மார்ச் 2]*

THIRU M. A. LATHEEF : What I submit is the Chair allowed the hon. Member, Veerasami, to move the motion and that itself is a ruling and so far as that point is concerned, you have given ruling.

MR. DEPUTY SPEAKER : No, no. The hon. Members have the right to discuss any motion before the House.

THIRU M. A. LATHEEF : I have been misunderstood, Sir. I have taken one line and the Chair is taking a different line. My position is this. There is your ruling that he can move the motion.

MR. DEPUTY SPEAKER : I have not given my ruling.

THIRU M. A. LATHEEF : The hon. Member has been given an opportunity to move the motion. Now the merits of the case cannot be discussed and that is my submission. The only point on which there can be a discussion is that the matter cannot be referred to the Privileges Committee. That alone can be discussed without going into the contents of the case, the merits of the case, because that has been decided and therefore the motion cannot be discussed in this House. That is my point.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் என் பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இப்போது மாண்புமிகு அங்கத்தினர் வீராசாமி அவர்கள் ஒரு தீர்மானத்தை இந்த அவை முன் வைத்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானமானது மாண்புமிகு அங்கத்தினர் ஹாண்டே அவர்கள் மீது பிரிவிலேஜ் வந்திருப்பது சம்பந்தமாக இருக்கிறது. அது சம்பந்தமாக விரிவான விவாதம் அவசியம் இல்லை என்று சொன்னாலும் கூட யார் மீது அந்த தீர்மானம் வந்திருக்கிறதோ, அவருக்கு அது சம்பந்தமாக சுருக்கமாகப் பேசுவதற்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது? இப்போது அவை முன்னவர் அவர்கள் பேசுவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் மீதும், அவர் பேச்சை வெளியிட்ட பத்திரிக்கை ஆசிரியர் மீதும் உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் உரிமைப் பிரச்சினை இருக்கிறதா இல்லையா என்று காரணங்கள் எடுத்துச் சொல்லப்பட்டு இரு சாராரும் கருத்துக்கள் எடுத்துச் சொன்ன பிறகு, உரிமைப் பிரச்சினை இருக்கிறது என்று கருதி அதை ஒரு தீர்மானமாக கொண்டு

வரச் சொன்னீர்கள். உரிமைக் குழுவிற்கு இந்தத் தீர்மானத்தை விடலாமா, வேண்டாமா என்ற அளவுக்கு வேண்டுமானால் இந்தத் தீர்மானத்தின் மீது கருத்துக்களைச் சொல்லலாம். அதிலே உரிமைப் பிரச்சினை இருக்கிறதா இல்லையா என்பது பற்றிய பிரச்சினையில் உள்ளே போய்விடுவதற்கு இடம் இல்லை. உரிமைப் பிரச்சினைக் குழுவிற்கு விடவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் தீர்மானம் முன்மொழிந்திருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் வேண்டுமானால் உரிமைப் பிரச்சினைக் குழுவிற்கு இதைவிடலாமா, கூடாதா என்று சொல்லலாம். அதற்குள்ளே போய் உரிமைப் பிரச்சினைக் குழு எதையெதை ஆராயுமோ, அதை ஆராய்வதற்குரிய கருத்துக்களின் உள்ளே சென்று விவாதிப்பதற்கு இடமில்லை. தீர்மானத்தை மறுக்கவோ, ஆதரிக்கவோதான் இப்போது இடம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I am raising a point of order, Sir. First of all I would like to state that inasmuch as the Deputy Speaker asked the member to move the motion and according to Rules 69 and 69-A of the Assembly Rules, every motion must be seconded and since there was no seconder to the motion moved, it must be dropped forthwith. . . .

MR. DEPUTY SPEAKER: It has been seconded.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Who seconded it ?. No one seconded it and therefore it should be dropped forthwith.

MR. DEPUTY SPEAKER: No, no. It was seconded by the hon. Member, Thiru Mohideen. I saw it.

(Dr. Hande stood up.)

திருமதி அனந்தநாயகி அவர்கள் இங்கே இவ்வளவு சீரியசாக இதை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இதிலே போய் ஜோக் அடித்தால் எப்படி? ஜோக் அடிப்பதில் தவறு இல்லை. உங்கள் நகைச் சுவையை நான் பாராட்டு கிறேன். அவர் செகண்ட் செய்ததை நான் பார்த்தேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கமிட்டிக்கு விடலாமா கூடாதா என்பதைப் பற்றி மட்டும் பேசவேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்கள் இதை உரிமைக் குழுவுக்கு விடலாமா, விடவேண்டாமா என்பதைப்பற்றி மட்டும் சொல்ல வேண்டும் என்று என்னைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையிலும் இந்த உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு விடுவதன் மூலம், இது எந்தக் காரணத்தை ஒட்டி உரிமைக் குழுவிற்கு விடப்பட்டதோ, அவைகளை யெல்லாம் பற்றி உரிமைக் குழுவில் எனக்குப் பேசுவதற்கு முழு வாய்ப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இங்கே சில வார்த்தைகளை யெல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறார்கள். அவைகளை நான் ஆதாரமாக அங்கே கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உரிமைப் பிரச்சினையை இந்தக் குழுவின் ஆய்வுக்கு விடுவதன் மூலம் இந்த அவையிலே நடந்திருக்கக்கூடிய முழு உண்மை உலகத்திற்குத் தெரியவரட்டும். ஆகவே, மதிப்பிற்குரிய திரு. வீராசாமி அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை நானும் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். திரு. வீராசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது. பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"டாக்டர் ஹாண்டே அவர்கள் மீதும், தென்னகம் பத்திரிகையின் ஆசிரியர், வெளியிடுவோர், அச்சிடுவோர் ஆகியோர் மீதும் இங்கு எழுப்பப்பட்டுள்ள இந்த அவையுரிமை மீறல் பிரச்சினையை ஆய்ந்து அறிக்கை அளிக்க இதை அவையுரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது இந்தப் பிரச்சினை இந்த அவையின் உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது.

### (4) 1973-74-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கட்சிகளின் அடிப்படையிலே, அந்தக் அந்தக் கட்சியில் இருக்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே நேரத்தை கணக்கிட்டுப் பார்த்தோம். ஆளும் கட்சியில் 176 பேர்கள் இருந்தாலும் கூட, 50 சதவிகித நேரத்தை ஆளும் கட்சிக்கும், 50 சதவிகித நேரத்தை எதிர்க்கட்சிகளுக்கும் என்று நேரத்தை ஒதுக்கி முதலில் கணக்குப் போட்டுப் பார்த்தோம். ஒவ்வொரு நாளும் ஆளும் கட்சிக்கு 90 நிமிடங்களும், ஸ்தாபன காங்கிரசுக்கு 13 நிமிடங்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 16 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்டுக் கட்சிக்கு 13 நிமிடங்களும், பார்வேர்ட் பிளாக்குக்கு 12 நிமிடங்களும், முஸ்லீம் லீக்குக்கு 10 நிமிடங்களும், சுதந்திராக் கட்சிக்கு 10 நிமிடங்களும்

காங்கிரசுக்கு 10 நிமிடங்களும் என்று கணக்கு வந்தது. இது மிகவும் குறைவாக இருக்கிறது என்று கருதி, ஆளும் கட்சியினுடைய நேரத்தை 75 நிமிடங்களாகக் குறைத்து, ஸ்தாபன காங்கிரசுக்கு 20 நிமிடங்களும், அண்ணா தி.மு.க. விற்கு 18 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 16 நிமிடங்களும், பார்வேர்ட் பிளாக்குக்கு 15 நிமிடங்களும், முஸ்லீம் லீக்குக்கு 12 நிமிடங்களும், சுதந்திராவுக்கு 12 நிமிடங்களும், காங்கிரசுக்கு 12 நிமிடங்களும் என்ற ஒரு முறையைப் பின்பற்றினால் மிகவும் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இன்னும் தமிழரசுக் கழகத்தினுடைய உறுப்பினர் இருக்கிறார்கள். சுயேச்சை உறுப்பினர்கள் இரண்டு பேர் தான் இருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : Sir, according to the allotment of time, the Chair has given only 12 minutes to the Congress Party for speaking on the Budget involving about Rs. 465 crores. . . 12 நிமிடங்கள் கொடுத்தால் போதாது. அப்படி அவசியமிருந்தால் மத்தியானம் உட்காரலாம். Let us discharge our duties properly. தயவு செய்து அதிக நேரம் கொடுக்கவேண்டும். வரவுசெலவுத் திட்டத்தின் மீது பேசுவதற்கு 12 நிமிடங்கள் எப்படி போதும்? ரூ. 465 கோடி வரவு-செலவுத் திட்டத்தின் மீது எப்படி 12 நிமிடங்களில் எதிர்க்கட்சியினர் பேசமுடியும். அதற்கு நாங்கள் பேசவே வேண்டாம். ஆளும் கட்சியினரே வோட்டுப் போட்டு பட்ஜெட்டை பாஸ் செய்து கொள்ளலாம். 12 நிமிடங்கள் போதவே போதாது. சில பேர்களுக்கு 12 நிமிடங்களுக்குமேல் தேவைப்படும். தேவைப்படுகிறவர்களுக்கு அதிக நேரம் ஒதுக்கிக்கொடுக்கவேண்டும். இல்லையென்றால் மத்தியானம் உட்காரலாம். நாங்கள் வருவதற்குத் தயாராக இருக்கிறோம். கவுன்சிலை வேண்டுமானால் ஒத்திப்போடலாம். பட்ஜெட்டை விவாதிப்பதற்குப் போதுமான அவகாசம் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி விரக்தியாகப் பேசினால் எப்படி?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நேரம் ஒதுக்குகின்ற வகையில் நாள்தோறும் ஒரு கட்சிக்கு இவ்வளவு நேரம் என்று சொன்னால், அது நடைமுறைக்கு ஒத்துவருகிற ஏற்பாடாக இருக்காது. இன்று முதல் 7-ம் தேதி வரையில் இருக்கிற நேரத்தை ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு மணி நேரம் என்று பிரித்து ஒதுக்கி விடலாம். சில நாட்களில் சில கட்சிகளில் ஒன்றிரண்டு பேர்கள் பேச முன்வருவார்கள். நேற்று பிசினஸ் அட்வைசரி

கமிட்டியில்கூட இந்த அடிப்படையில் தான் முடிவு எடுத்தோம். ஆகவே, 7-ம் தேதி வரையிலும் ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் என்று பிரித்து ஒதுக்கிவிட்டால், ஒரு கட்சியில் ஒன்று அல்லது இரண்டு பேர் அல்லது ஒருவரே முழு நேரத்தையும் எடுத்துக் கொண்டு பேசலாம். அல்லது 2, 3 பேர்கள் பிரித்துக் கொண்டு பேசலாம். 7-ம் தேதி வரையில் பிரித்துக் கொள்வதற்கு நேரம் தந்துவிட்டால், அதற்கேற்றபடி நேரத்தைப் பங்கிட்டுப் பேசிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது ஒரு பெரிய பிரச்சினை. நானே யிலிருந்து செய்யலாம்.

*** டாக்டர் ச. மு. பழனியப்பன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்களினால் இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை சமுதாயத்தில் வாழ்க்கை வசதிகளை இழந்தவர்களை மீண்டும் ஓரளவுக்கேனும் கைதூக்கி விடுகின்ற தன்மையிலே, சமுதாய சமதர்மத்தை இன்னும் ஒரு படி மேலே உயர்த்துகின்ற அளவில், பல்வேறு நல்ல அம்சங்களை யும் திட்டங்களையும் கொண்டதாக அமைந்திருக்கிறது என்று முதலிலே குறிப் பிட ஆசைப்படுகிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

1973-74-ம் ஆண்டுக்கு 465 கோடி ரூபாய் அளவுக்கு வரவும், கிட்டத்தட்ட அதே அளவுக்கு செலவும் சேர்த்து, ரூ. 49 லட்சம் உபரியாக இருக்கும் நிலை யிலே இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். கடந்த 6 ஆண்டு காலத்தில் தி.மு.க. அரசு பொறுப்பேற்ற காலத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை விட, இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை இன்னும் கூடுதலான வேகத்தோடு இன்னும் மேலே ஒரு படி சமதர்ம திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பணிகளை செய்யக்கூடிய நிலையில் அமைந்திருக்கிறது. டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கை இந்த ஆண்டு பல்வேறு நல்ல திட்டங்களை உள்ளடக்கி இருக்கிறது.

இங்கே பேசிய எதிர்க்கட்சியினர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்த நிதி நிலை அறிக்கை மத்திய அரசாங்கத்தைக் குறைகூறுகின்ற அளவிலும், எதற் கெடுத்தாலும் மத்திய அரசாங்கம் பொறுப்பு ஏற்கவேண்டும் என்ற முறையிலே

யும் அமைந்து இருக்கிறது என்பதாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இங்கே சாட்டப்படுகிற குற்றச்சாட்டுகளையெல்லாம் முறியடிக்கின்ற வகையில் முழு ஆதாரத்தோடு எந்த இடத்திலே மத்திய அரசு மாநில அரசுக்கு உதவி செய்யத் தவறிவிட்டது என்ற புள்ளிவிவரங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் முதல்வர் அவர்கள் திட்டவட்டமாக குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு எந்தெந்த இடங்களில் மாநில அரசுக்கு நிதி உதவ தவறியது, எந்தெந்த இடத்தில் மாநில அரசுக்கு தகுந்த நோத்தில் திட்டங்களை நிறைவேற்று வதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்பதையெல்லாம் சொல்லி யிருக்கிறார்கள்.

டாக்டர் கலைஞர் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பே இந்த நாட்டு பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களை வைத்துக்கொண்டே சொல்லியிருக்கிறார்கள். 'மாநில அரசு உறவுக்கு கை கொடுக்கும், உரிமைக்கு குரல் கொடுக்கும்' என்று சொன்னார்கள். அதே ரீதியிலேதான் தமிழகத்தில் அண்மையிலே ஏற்பட்ட பெரு மழையினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப் பட்ட தமிழக மக்களுக்கு மத்திய அரசிலிருந்து வந்த குழுவினரின் பரிந்து ரையின் பேரில் மத்திய அரசு ரூ. 14¼ கோடி ஒதுக்கியதற்கு நன்றி தெரிவித் திருக்கிறார்கள். நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம், அவர்களுக்கு நன்றி செலுத்தியிருக்கிறோம். அதே நேரத்தில் பல இடங்களில் மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுக்கவேண்டிய சலுகைகளை, கொடுக்கவேண்டிய வாய்ப் புகளை எல்லாம் குறைத்திருக்கிறது. அதாவது மத்திய அரசு திட்ட நிதி உதவி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.8 சதவிகிதமாகத் தொடங்கி, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4.7 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் தமிழகத்தில் இருக்கிற மக்கள் தொகை, இந்த உபகண்டத் தின் மக்கள் தொகையில் 7.5 சதவிகிதம் என்ற அளவிலே இருக்கிறது. இப்படி மக்கள் தொகை கூடுதலாக இருக்கிற நம்முடைய மாநிலத்திற்கு உதவித் தொகை, மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உதவித் தொகை மட்டும் குறைந்துகொண்டே வருகிறது. அதைத்தான் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆண்டுக்காண்டு இப்படி மத்திய அரசு தமிழக அரசுக்கு ஓரவஞ்சனை செய்திருக்கிறார்கள். மத்திய அரசு தமிழகத்திற்குக் கொடுக்கின்ற பங்கு மிகக் குறைவாக இருக்கிறது என்பதை புள்ளிவிவரங் களுடன் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதே நொத்தில் நான்காவது ஐந் தாண்டுத் திட்டத்தில், 1972-73-ம் ஆண்டுக்கு மத்திய அரசு மாநிலங்களுக்குத் தொழில் முதலீடு செய்கின்ற தொகை ரூ. 685 கோடி அளவில் இருந்தாலும், தமிழகத்திற்கு 1972-73-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 200 கோடி தான்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இதெல்லாம் நிச்சயம் தமிழகத்திற்குச் செய்யப்படுகிற அநீதி என்பதை மிக நல்ல முறையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஏதோ மத்திய அரசைக் குறை சொல்லவேண்டும் என்பதற்காக இங்கே குறை சொல்லவில்லை. நம்முடைய உரிமைகளைத் தட்டிக் கேட்கின்ற வகையிலே தான் நிகழ்ச்சிகளெல்லாம் நிதி நிலையில் தரப்பட்டிருக்கிறது. தமிழக அரசு இந்த ஆண்டு பல்வேறு தரப்புகளிலே, அதாவது சமுதாயத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள், தொழில் துறையில் இருப்பவர்கள், வேலையில்லாமல் இருப்பவர்கள் ஆகியோர்களுக்கெல்லாம் சிறப்பான முறையில் நிதி ஒதுக்கி, அவர்களுக்கெல்லாம் வாழ்க்கை வசதி செய்துகொடுக்கிற சிறப்புத் திட்டங்களை தீட்டியிருக்கிறது.

வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால், இந்த ஆண்டு வேளாண்மைத் துறைலே 1972-73-ம் ஆண்டுக்கு விவசாய உற்பத்தி ஒரு புதிய குறி அளவில் 72-02 லட்சம் டன்னுக உயரும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது, இயற்கையின் ஒத்துழையாமைக்கிடையிலேயும், வேளாண்மைத் துறையில் நாம் பெற்றுள்ள இந்த வளர்ச்சி மகிழத்தக்கதாகும் என்று கலைஞர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இயற்கை ஒத்துழையாமை இருந்தும், இவ்வளவு நல்ல ஒரு குறியிட்டினை விவசாயத்தில் நாம் கண்டிருக்கிறோம். நேற்று பேசிய இந்திரா காங்கிரஸ் நண்பர் ஒருவர் இப்படிச் சொல்லியிருப்பதைக் குறித்து குறை பட்டுக்கொண்டார். நமது முதல் அமைச்சர் தமிழகத்தில் இருக்கிற சூழ்நிலையைக் குறிப்பிட்டு, அதற்கிடையிலேயும் வேளாண்மைத் துறையில் பெற்றுள்ள வளர்ச்சி மகிழத்தக்கதாகும் என்று தான் கூறியிருக்கிறார். நிச்சயமாக, அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலே இப்படி சொல்லியிருக்கிறார்கள் என்று பார்த்தால், இந்தச் சபையிலும் மக்கள் மத்தியிலும் முதல்வர் அவர்களுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இனிமேலாவது தவறான கருத்துக்களைச் சொல்லாமல், எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற பழக்கத்தை எதிர்க்கட்சி நண்பர்கள் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், இந்த ஆண்டு கல்விக்காக அதிகத் தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். கல்வித்துறையிலே வேகமாக பரவலான முன்னேற்றத்தைக் கொண்டுவரவேண்டுமென்று, வசதிகளைச் செய்யவேண்டுமென்று பல்வேறு நல்ல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். ஆரம்பப்பள்ளியிலிருந்தே மாணவர்கள் அறிவியல் துறையிலே சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக புதிய திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அதைப் போலவே அந்நிய நாட்டிலே இருந்து கிடைக்கின்ற மேதைகளின் உதவியும் இந்த நாட்டுக்குக் கிடைக்கவேண்டுமென்று பல திட்டங்களைத் தீட்டி, சென்ற

ஆண்டிலிருந்து இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. அந்தக் கருத்துக்கள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் சிறப்பான இடம்பெற்று இருக்கின்றன.

அதைப்போலவே, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பல சலுகைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த முறையில் அடுத்தாண்டு கல்வித் துறை இன்னும் சிறப்பான முறையில் வளர இருக்கிறது. இந்தக் கல்வித் துறைக்கு இந்தாண்டு மொத்த வருமானத்தில் 24 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த நல்ல நிலையை மாணவர் சமுதாயம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

அடுத்து, நலத்துறையிலே இந்தாண்டு கூடுதல் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். பல சிறப்புத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இந்த நலத் துறையிலே 1972-73, 1973-74 ஆகிய இரண்டாண்டுகளிலும் 61 ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசாங்கம் ஏற்கும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. பல்வேறு அரசாங்க மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகள் அதிகரிக்கப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல கோவை மாவட்டத்திலே இருக்கின்ற மருத்துவக் கல்லூரி, மருத்துவமனைக்கும் கூடுதல் வசதி செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அங்கே இருக்கின்ற சில வசதிக் குறைவுகளைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

அங்கே ஹவுஸ் சர்ஜன்களுக்குக் குவார்ட்டர்ஸ் கிடையாது. அவர்கள் ஐந்தாண்டுப் படிப்பை முடித்துவிட்டு, முதல் பாட்ச் வெளிவந்திருக்கிறார்கள். அவர்கள் ஹவுஸ் சர்ஜன்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்கள் வெளி இடங்களில் தங்கியிருந்து, பணியாற்ற வரவேண்டிய நிலையில் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் ஒரு தொகையை ஒதுக்கி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சுவர்களுக்குள்ளாகவே அவர்கள் தங்குவதற்கு விடுதி கட்டிக்கொடுக்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. அங்கே இருக்கிற 'போஸ்ட் மார்ட்டம் ரூம்' கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி இருந்ததோ அந்த அளவிலேயே மிகச் சிறியதாக இருக்கிறது. மருத்துவ கல்லூரி மருத்துவமனை என்று உயர்த்தப்பட்ட பின்பும் அந்த அறை பெரிதாக்கப்படவில்லை. போஸ்ட் மார்ட்டம் அறையில் தான் மாணவர்கள் மிக முக்கியமான விவரங்களை சிலவகை நோய்களைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால், அதைச் சற்று விரிவுபடுத்தி, வசதிகள் நிறைந்ததாகச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதை என் கடமையாகக் கருதுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே இன்னும் பல்வேறு நல்ல சிறப்புத் திட்டங்களை எல்லாம் அறிவித்திருக்கிறார்கள். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையில் அவர்களுக்காக ஒரு கடன் தொகை கொடுத்து, குத்தகைதாரர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் ஒரு புரட்சிகரமான திட்டத்தை அவர்களுக்கு வசதியான ஒரு திட்டத்தை செயல்படுத்த இருப்பது பாராட்டத் தக்கது.

தொழிலாளர் நலத்தைப் பேணிவருகின்ற இந்த அரசு தொழில் நிறுவனங்களை எல்லாம் தேசியமயமாக்கவேண்டுமென்ற முறையிலே, இன்றைக்கு மேட்டூரிலே இருக்கின்ற அலுமினியத் தொழிற்சாலையை தேசியமயமாக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பெருவெள்ளத்தாலும், புயலாலும் கோபி தாலுகாவில் 8,000 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு, வீட்டு வசதிக் கழகம் அமைத்து அதன்மூலம் இந்த ஆண்டு அரிசனங்களுக்கு 10,000 வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதில் எங்களுடைய கோபிச்செட்டிப்பாளையத்திற்கு 200, 300 வீடுகளையாவது கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே பாதிக்கப்பட்ட 8,000 வீடுகளில் 5,000 வீடுகள் அரிசனங்களுடையது. அவர்கள் கட்டியிருந்த கூரை வீடுகள் ஓலை வீடுகள் கீழே விழுந்துவிட்டதால் அவர்கள் தங்குவதற்கு இடமின்றி தவித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த 10,000 வீடுகள் கட்டும் திட்டத்தில் அந்தப் பகுதி மக்களுக்கும் அதிகமான வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு நல்ல அம்சங்கள் இருக்கின்றன. தனியார் மின் நிறுவனங்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்ளும் என்பதை நான் வரவேற்கிறேன். அந்த முறையில். . . (மணியடிக்கப்பட்டது).

**திரு. ஓ. என். சுந்தரம்:** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, இன்றைக்கு தமிழ்நாட்டில், மக்களின் வாழ்க்கை வசதிகள் குறைந்து, அவர்கள் தொல்லைகளை அனுபவிப்பதைத்தான் பார்க்கிறோம். வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு இந்தப் பிரச்சினைகளிலே

இந்த அரசு அக்கறை செலுத்தியிருப்பதாகத் தெரியவில்லை என்பதை என் குற்றச்சாட்டாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுடைய குறைகளைப் போக்குவதில் ஆளும் கட்சி முனைந்திருப்பதாகத் தெரியவில்லை. தொல்லைகள் நிறைந்த நிலையில், துயரங்களில் ஆழ்ந்திருக்கும் மக்களுக்கு உருப்பெறக் கூடிய திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. இன்றைய விலைவாசிப் பிரச்சினையில் மக்களின் அன்றாடத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அதனால் ஏழை எளிய மக்கள் நடுத்தர மக்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு அன்றாடத் தேவைப் பொருள்களான அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறிகள் உட்பட சகல பொருள்களும் ஏழை எளிய மக்களால், நடுத்தர மக்களால் வாங்க முடியாத அளவுக்கு விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதை நான் சென்ற கூட்டத்தின்போதும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நான் இங்கே பேசிவிட்டு, என்னுடைய ஊருக்குச் சென்றுபார்த்தால் நான் சொன்னதைவிட 20 சதவிகிதம் அதிகமாகி இருந்ததைத்தான் பார்த்தேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே அதற்கு எந்தவிதமான பரிகாரமும் சொல்லப் படவில்லை என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நடுத்தர மக்கள் நிலை இது என்றால், விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அதோடு அவர்கள் வாங்கக்கூடிய பொருட்களின் விலை பன்மடங்கு அதிகமாகி இருக்கிறது. மாடுகளுக்கு தீவனங்கள் வாங்குவது என்றால் அந்த மாடுகளையே விற்றால் கூட அதற்கு தீவனம் வாங்கமுடியாத நிலைக்கு விலைவாசி உயர்ந்திருக்கிறது. விவசாயிகள் தங்களுக்குத் தேவையானப் பொருட்களை வாங்கவேண்டுமானால் தங்கள் வீடுகளை விற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே, அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படியாக மாதம் 10 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதையும் பிராவிடன்ட் பண்டில் போடுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக இன்று இருக்கக்கூடிய வாழ்க்கைச் செலவு புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது இந்த 10 ரூபாய் அவர்களுக்குப் போதாது. அதை இன்னும் உயர்த்திக் கொடுக்க வேண்டும். கொடுப்பதை ரொக்கமாக அவர்கள் சம்பளத்தோடு சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, இன்று மாநிலம் முழுவதும் விலைவாசி உயர்வைப் பார்க்கின்ற போது ஏகப்பட்ட பிரச்சினைகள் உருவாகி இருக்கின்றன. இப்படிப் பட்டப் பிரச்சினைகளை எல்லாம் அரசு தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பட்ஜெட்டில் புதிய வரி எதுவும் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி சொன்னால், இந்த அரசு தொடர்ந்து மக்களிடம் எந்த அளவுக்கு உச்ச அளவு வரியை வசூலிக்க முடியுமோ, அந்த அளவுக்கு வசூலித்து இருக்கிறார்கள் என்பதை கவலையோடு பார்க்கிறோம். அதனால்தான் மேற்கொண்டு வரி போட எதுவும் இல்லை என்று கருதி விட்டிருக்கிறார்கள். ஆக, இந்த அரசு மக்களிடம் பாடி கறக்க வேண்டியவர்களை பாடிக் கறந்தும், ஆடிக்கறக்க வேண்டிய வரிகளை ஆடிக் கறந்தும் அவர்களை இன்று இந்த மோசமான நிலைமையில் வைத்துவிட்டார்கள் என்ற விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கிருக்கும் நெசவாளர்கள் பிரச்சினையை எடுத்துக் கொள்ளும்பொழுது, இந்தப் பிரச்சினையிலே சரியான ஒரு திட்டங்களோடு 11-0
பரிசிலிக்க அவைகளைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள மு.ப
வில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் அப்படி நெசவாளர்கள் பிரச்சினை இவ்வளவு இக்கட்டான நிலைக்கு வந்துவிட்டது என்று சொன்னால் அவர்களுக்குப் போதுமான நூல்கள் நியாய விலையில் கிடைப்பதில்லை. நூல் விலை ஒன்றுக்கு இரண்டாக உயர்ந்துபோய் இருக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். நூல் கிடைத்தாலும் வேலை கிடைப்பதில்லை. வேலை கிடைத்தாலும் சரியான கூலி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் அவர்கள் எல்லாம் பட்டினியும், பசியுமாக வீதிகளிலே அலைந்து கொண்டிருக்கும் அவல நிலையை இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமை சேலம் நகரத்திலே ஏற்பட்டு, இந்த பிரச்சினையானது ஒரு போராட்டமாக ஆரம்பித்து உண்ணாவிரதம், ஊர்வலம், மறியல் என்று பல பிரச்சினைகளும் நெருக்கடிகளும் அங்கே தலைதூக்கிக் கொண்டிருக்கும்பொழுது. இதைச் சர்க்கார் உடனடியாக கவனித்து எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறிவிட்டது என்று குற்றம் சாட்டுகிறேன்.

இப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்படவில்லை என்று சொன்னால், இந்த நெருக்கடிகள் எல்லாம் சேலம் மாவட்டம் மட்டுமில்லாமல் எங்களுடைய மதுரை மாவட்டத்திலே ஆத்தூர் சின்னாளப்பட்டி, திண்டுக்கல், நாவல்நகர், போன்ற இடங்களிலே ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை போன்ற பகுதிகளிலேயும் கூட பரவி, சர்க்கார் மோசமான ஒரு நிலைமையை பிறகு எதிர்

நோக்க வேண்டியிருக்கும் என்பதை எச்சரிக்கையாக இங்கே சொல்ல விரும்பு கிறேன். ஆகவே, நிதி நிலை அறிக்கையிலே சொல்லும் பொழுதுகூட நமது நிதியமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள், சேலை வேட்டி ஜமக்காளம் போன்றவைகளை எல்லாம் கைத்தறிக்கே மத்திய அரசு ஒதுக்கிவிட வேண்டு மென்று. ஏற்கெனவே, இராஜாஜி முதலமைச்சராக இருந்தபொழுது அப்படிப்பட்ட பிரச்சினையை சட்ட மன்றத்திலே வைத்து விவாதித்து அதைப் பற்றிய ஒரு தீர்மானத்தை டெல்லி சர்க்காருக்கு அனுப்பி பதிலுக்கு எதிர் பார்த்துக் கொண்டிருந்த நேரத்திலே, அன்றைக்கு எதிர்கட்சி வரிசையிலே இருந்த இன்றைய ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த டெல்லி சர்க்கார் தூங்குகிறது என்று பல சந்தர்ப்பத்திலே இந்த அவையிலே பேசி இருக்கிறார்கள். இன்றைக்கு அது குறித்து மீண்டும் நீங்கள் ஒரு தீர்மானத்தை 15, 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த சட்டமன்றத்திலே கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றால், என்ன அர்த்தம்? முதலிலே இருந்து தீர்மானத்தை டெல்லி அரசிடம் வலியுறுத்தி அதை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி அந்தச் சலுகைகளை நெசவாளர்களுக்கு வாங்கிக் கொடுக்கத் தவறிவிட்டீர்கள் என்றுதான் சொல்லுவேன்.

அன்றைக்கு காங்கிரஸ் ஆட்சியின் பொழுது அது கைத்தறி வளர்ச்சியாலு லும் சரி அல்லது கதர் வளர்ச்சியாலும் சரி, இரண்டு பேருக்கும் நூல் நியாய விலையிலே சப்ளை செய்து அவர்களுக்கு வசதிகளை செய்து கொடுத்திருந்தார் கள். ஆனால் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கும் 20 இலட்சத்திற்கும் அதிகமாகவுள்ள கைத்தறி நெசவாளர்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள் என்று தான் சொல்வேன். இப்படி இந்த பிரச்சினைகளை உடனடியாக அரசு தீர்க்க தவறுகிறது என்று சொன்னால், போராட்டத்தின் மூலமாக பல நெருக்கடிகளை கைத்தறி நெசவாளர்கள் உண்டாக்கி இந்த சர்க்காருக்கே ஒரு பெரும் நெருக்கடியை ஏற்படுத்திவிடுவார்கள் என்று சொல்லி, அதைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக, இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரைக்கும், சரியான வகை யிலே அவசரமான நடவடிக்கைகளை எடுத்து பிரச்சினைகளைத் தீர்க்க இந்த அரசு முன்வரவில்லை என்று தான் சொல்லுவேன். எனவே, வேலையில்லாத் திண்டாட் டம், விலைவாசி உயர்வு போன்ற முக்கியமான பிரச்சினைகளிலே அரசு உடனடி யாக போர்க்கால நடவடிக்கை காரியங்களை மேற்கொண்டு பணியாற்ற வேண்டும். இல்லை என்று சொன்னால், தமிழக அரசு பதவியிலிருந்து விலகி விடுவது நல்லது என்றுதான் சொல்லுவேன். ஆகவே, இந்தப் பிரச்சினைகளை எல்லாம் கவனித்து தீவிரமாக செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக, திருச்சி ஜில்லாவிலே புதுக்கோட்டை பகுதியானது புதுக்கோட்டை. மாவட்டமாக தனியாக அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தகுந்த ஒன்றாகும். அதே போல் மதுரை மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்கக் கூடிய நிலை ஒன்று இருந்தது என்பதை இந்தச் சபை அறியும். எனவே, திண்டுக்கல்லை தலைநகரமாகக் கொண்டு தனி மாவட்டம் ஒன்று பிரிக்க வேண்டும் என்று கேட்டு, அதற்கான காரியங்களை உடனடியாக இந்த அரசு செய்யவேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

திண்டுக்கல் நகரம் இப்பொழுது வளர்ந்து கொண்டிருக்கிறது. அங்கே மக்கள் தொகை ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு செஷன்ஸ் கோர்ட் ஏற்படுத்தப்படவேண்டும். மேலும் அங்கே இருக்கும் அரசினர் மருத்துவமனை இன்னும் நன்றாக விஸ்தரிக்கப்பட்டு, அது பல படுக்கைகளைக் கொண்டதாகவும் போதிய மருந்து வசதிகளை உள்ளடக்கிய தாகவும் ஆக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமில்லாமல் திண்டுக்கல் நகரத்திலே ஒரு பெண்கள் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி, எந்த வேலையும் தொடங்கப்படாமல் இருக்கிறது. ஒரு ஆண்டு ஆகியும் இன்னமும் ஒன்றும் செய்யப்படவில்லை. அந்தக் கல்லூரி மாணவிகள் மிகவும் நெருக்கடியான, சலசலப்புள்ள பஜார் பகுதியிலே படித் துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தக் கல்லூரிக் கட்டிடத்தைக் கட்டும் வேலையை விரைவுபடுத்தும் நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : (நெல்லிக்குப்பம்) மாண்புமிகு அவைத் தலைவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்த பட்ஜட்டினை ஆதரித்து இங்கே நான் பேச விழைகின்றேன்.

ஏற்கனவே ஏழை மக்கள் எல்லாம் பொருட்கள் கிடைக்காத காரணத் தினாலும், பணப் புழக்கம் அதிகமாக ஏற்பட்டிருப்பதன் காரணமாகவும், விலைவாசி ஏற்றத்தினாலும் கஷ்டப்படுகின்ற நிலைமையில் நம்முடைய மாண்பு மிகு நிதியமைச்சராகவும் முதலமைச்சராகவும் இருக்கக் கூடிய கலைஞர் அவர் கள் குறிப்பறிந்து மக்களுடைய நிலையறிந்து, மக்களால் வரி செலுத்த முடி யாத நிலையினை அறிந்து எந்தவிதமான வரியையும் போடாமல், எவ்வளவோ நெருக்கடிகள் அரசாங்கத்திற்கு இருந்தாலும், எவ்வளவோ வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தாலும், வரி போடாமல் 49 இலட்சம் உபரி பட்ஜெட்டை போட்டிருக்கிறார்கள்.

ஆனால், இரண்டு தினங்களுக்குள்ளாகவே மத்திய அரசாங்கமும் தன்னுடைய பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார்கள். மக்களுடைய பொருளாதார நிலை மோசமாகவும், ஏற்கனவே இருக்கும் விலைவாசி ஏற்றத்தினால் மக்கள் தவித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையிலே, அந்த மக்களின் பேரிலே மேலும் பல வரிகளைப்போட்டு ஏறக்குறைய 300 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். இப்படி ஏழை மக்கள் மீது வரி போட்டிருக்கிறார்களே இது நியாயமா என்பதைத்தான் எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய இந்திரா காங்கிரஸ் கட்சியினர்—பொன்னப்ப நாடார் கட்சியினர் இல்லை—காரணம் அவர்கள் எங்களை ஆதரிக்கக்கூடியவர்கள் இந்த விஷயத்திலே—உணரவேண்டும். ஆகையால், மத்தியிலே இருப்பவர்கள் இந்த மக்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டார்களே என்று தான் வேதனைப்படுகிறேன்.

ஆகையால், மத்திய அரசாங்கம் தாங்கள் வரி போடுகின்ற கொள்கையிலே சில திருப்பங்களைக் கையாளவேண்டும். மத்திய அரசாங்க நிதி அமைச்சர் அவர்கள் மாகாண முதலமைச்சர்களை நாங்கள் இவ்வளவு வரி போடலாம் என்று இருக்கிறோம், அதாவது 300, 400 கோடி ரூபாய்க்கு வரி போடலாம் என்று இருக்கிறோம் என்று ரகசியமாகக் கலந்து மக்களின் நன்மையை கருதி செயல்படுவார்களேயானால் அது நன்றாக இருக்கும்.

பாரதத்திலே காஷ்மீரிலே இருந்து கன்னியாகுமரி வரை இருக்கும் மக்கள் எல்லோருடைய நலனையும் கருத்தில் கொண்டு தான் இப்படி வரி போடுகிறோம் என்று அவர்கள் சொல்லுவார்களேயானால், ஏதோ நாம் 1500 மைலுக்கு அப்பால் இருக்கிறோம். ஆகவே நம்மை யார் வந்து கேட்கப் போகிறார்கள் என்ற நிலையிலேதான் இவ்வளவு அதிகமான அளவிலே வரிகளை ஏழை மக்கள் மீது போட்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பேச்சிலே கூடச் சொன்னார்கள்—அதாவது பைனான்ஸ் கமிஷனிலே இருக்கிற புள்ளிவிவரங்களைப் பார்த்துச் சொன்னார்கள், நம்முடைய மாநிலம் முற்போக்கு அடைந்த மாநிலமாக இருக்கிறது, ஆகவே நமக்கு வரக் கூடிய பணம் குறைந்துவிடுகிறது என்றார்கள். அது உண்மை. மாநிலத்தின் வளர்ச்சியிலும், மற்றுமுள்ள வளர்ச்சியிலும் இந்த மாநிலத்தில் உள்ள மக்கள் கடுமையாக உழைக்கிறார்கள், கஷ்டப்படுகிறார்கள் என்றால் இந்த மாநிலத்திற்கு நிதியைக் குறைப்பது தண்டனையாக இருக்கும். உழைப்புக்குத் தண்டனையா? யோசிக்கவேண்டும் உழைப்பவர்களுக்கு உதவி இல்லையென்றால் சோம்பேறிகளுக்கு உதவியா? பிற்பட்ட மாநிலத்திற்கு அதிக உதவி என்றால் அது சோம்பேறிகளுக்கு உதவி

செய்வதுபோலத்தான் இருக்குமே தவிர வேறு அல்ல. பிற்பட்ட பகுதிகள் என்றால் நமது மாநிலத்திலும் கள்ளக்குறிச்சி வட்டம், செஞ்சி வட்டம், மேற்கு இராமநாதபுரம், கிழக்கு இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய இடங்கள் பிற்பட்ட பகுதிகள் தான். இது நமது மாநிலத்தில் இருந்தாலும் சரி, மகாராஷ்டிரம், குஜராத், பெங்கால் என்பதாக எங்கே இருந்தாலும் சரி இதுபோன்ற பிற்பட்ட பகுதிகளை ஐடென்டிபை பண்ணிவிட வேண்டும். இவற்றுக்கு ஏற்றாற்போல நிதி உதவியும் அளிக்க முன்வந்தாக வேண்டும்.

அடுத்து, இன்றையதினம் மத்திய அரசாங்கம் விவசாயம், கல்வி, சுகாதாரம் ஆகியவற்றிலும் கூட மாநில அரசாங்கங்களுக்கு இருந்த முழு உரிமையில் தலையிட முன்வந்திருக்கிறார்கள். இவற்றையும் கன்கரன்ட் லிஸ்டில் சேர்க்க முயல்கிறார்கள். பண்டித நேரு அவர்கள் அப்ஜெக்டிவ் ரெசலூஷனில் முன்பு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், மத்திய அரசுக்குப் பாதுகாப்பு, நிதி, பாரின் அபார்ஸ் போன்றவற்றில் மட்டும் அதிகாரம் இருக்கக்கூடிய ஒரு நிலைமையைச் சொன்னார்கள். பாகிஸ்தான் படையெடுப்பால் நிலைமை அடியோடு மாறி பலம் பொருந்திய மத்திய அரசாங்கம் என்கிற நிலையில் திரும்பிவிட்டது. அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டுவந்துவிட்டார்கள். இன்றைக்கு மத்திய அரசாங்க அமைச்சர் ஒவ்வொருவரும் மாநில அதிகாரங்களில் வீணாகப் பிரவேசிக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இன்கம் டாக்சை எடுத்துக்கொள்ளுங்கள். தனிப்பட்டவர்களிடம் இருந்து வசூலிக்கக்கூடிய வருமான வரியில் மாநிலங்களுக்குப் பங்கு உண்டு. ஆனால் சில பேர்கள் சேர்ந்துகொண்டு கார்ப்பரேஷன் என்பதாக அமைத்துக்கொண்டுவிட்டால் அதில் கிடைக்கிற வருமானத்தில் நமக்குப் பங்கில்லை ஏன் என்று கேட்கிறேன். கார்ப்பரேஷன்களையும் கூட டிவிசபிள் பூலில் சேர்க்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் வருமான வரி என்றால் அதற்குப் பொறுப்பு சவான் தான் என்று இல்லை. இன்றைக்கு நமது மாநிலத்திலே மூன்று நான்கு நடிகர்கள் இருக்கிறார்கள். கட்சியைப் பற்றிச் சொல்லவில்லை. ஒரு கோடிக்குமேல் எப்போதும் கையில் பணம் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். நமது மாநில நிதி அமைச்சர் அவர்களும் இவர்களைக் கண்டுபிடித்து, இவர்களது கள்ளப் பணத்தைக் கண்டுபிடித்து இன்கம்டாக்ஸ் அவற்றுக்கும் கட்டும்படி செய்தால் நமக்குத்தான் அதிகப் பங்கு வரும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்,

அடுத்து, மின்சாரவெட்டைப்பற்றிப் பலரும் பேசினார்கள். மின்சார வெட்டு வந்ததற்குக் காரணம் கருணாநிதிதானா? மழைபெய்யவில்லை என்றால் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் இல்லை, மின்சார உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப் பட்டுவிட்டது. இதற்கெல்லாம் காரணம் மாநில அமைச்சர்கள் தானா? விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்க வேண்டும், கிராமங்களுக்கு எல்லாம் மின் விஸ்தரிப்புச் செய்யவேண்டும் என்பதாக இந்த அரசு எடுத்த முடிவு மின்சார வெட்டிற்கு எப்படிக் காரணமாகும்? இவை எல்லாம் செய்தது தப்பா? சர்வ கட்சியினர்களும் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மிகக் கடுமையாக உள்ள இந்த நேரத்தில் எல்லோரும் தான் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும். ஒத்துழைக்கவேண்டும் என்றால் ஆலோசனை கூறுங்கள் உங்கள் ஆலோசனைகளை ஏற்று செயல்பட இந்த அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் காலை 'இந்து' பேப்பரில் ஒரு மகிழ்ச்சியான செய்தியைப் பார்த்தேன். நெய்வேலியில் ஒரு நாளைக்கு 350 மெகாவாட் மின் உற்பத்தி செய்துதர ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது அதன்பொறுப்பை ஏற்றுள்ள நிர்வாகிகளின் கடமையுணர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இது போன்ற முயற்சியின் மூலம் மிக மோசமான நிலையில் இருந்த நெய்வேலியில் நாளைக்கு 600 மெகாவாட் என்கிற அளவில் உற்பத்தியைக் கொண்டுவந்து விட்டால் அவர்களுக்கு 'பாரத ரத்னா' பட்டமே கொடுக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் இந்த நேரத்தில் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி மிகமிகப் பாராட்டத்தக்கதாகும்.

மேலும் முன்னாள் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் கூட ஒரு யோசனை தெரிவித்திருக்கிறார்கள். நான்கைந்து பெரிய தொழிற்சாலைகளின் முதலாளிகள் ஒன்றுசேர்ந்து கோவாப்பரேடிவ் பவர் ஜெனரேடர் வைத்துக் கொள்ள முன்வரவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இது மிகமிக நல்ல யோசனையாகும். அப்படி யாராவது முன்வந்தார்கள் என்றாலும் அரசாங்கம் அவர்களுக்குத் தடையாக இருக்கக்கூடாது என்றார்கள். நானும் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசாங்கம் அதற்குத் தடையாக இராமல் அவர்களுக்கு அனுகூலமாக இருக்க வேண்டும். எப்படியோ நமது தொழிலாளர்களுக்கு உதவி செய்வதுதான் நமது முக்கியமான நோக்கமாகும். பின்னால் வேண்டு மானால் இவற்றை ரெகுலேட் செய்வதற்கு நமது அரசாங்கம் வரிபோடலாம். எதிர்க்கட்சிக்காரர்கள் என்னடா இது இப்படி நெய்வேலியில் நாளைக்கு 350 மெகாவாட் உற்பத்திசெய்ய முன்வந்துவிட்டார்களே என்று அழக் கூடாது.

1973 மார்ச் 2]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது உற்பத்தி செய்கிற மின்சக்திக்கு அதிகவிலை கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதா ?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : விலையைப்பற்றிக் கவலேயே இல்லை. 12 பைசாவாக இருந்தாலும் இன்றையதினம் மின்சாரத்தைப் பெற்று தொழிலாளர்கள் வேலை இழக்காமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

அடுத்து, மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையை தேசியமாக்க அரசு முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். நம்மிடம் 1½ பைசாவுக்கு மின்சாரம் வாங்கிக்கொண்டிருக்கிறார்களே என்பதைப்பற்றி போனமுறைகூடச் சொன்னேன். அதைத் தேசியமாக்குவதன் மூலம் லாபம் அரசாங்கத்திற்கு வரும். 50 மெகாவாட் மின்சாரம் அவர்களே உபயோகிக்கிறார்கள். என்னைக்கேட்டால் அதைச் சில மாதங்கள் மூடி வைத்தாகிலும் விவசாயிகளுக்கு மின்சாரத்தை வழங்கவேண்டும் என்று தெரிவிப்பேன். அந்த 50 மெகாவாட்டைக்கொண்டு பல்லாயிரக்கணக்கான விவசாய மோட்டார்களுக்கு நாம் மின்சக்தியை அளிக்கலாம்.

சர்க்கரையைப் பற்றி நேற்றைய முன்தினம் நிறையக் கேள்விகள் கேட்டோம். சர்க்கரை விலை, விநியோகம் பற்றியெல்லாம் நிறையக் கேள்விகள் கேட்டோம். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் நிறையச் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசாங்கத்திற்கு அந்த உரிமை கிடைத்தால் சர்க்கரை விலை குறைவாக இருக்கும், கரும்புக்கும் விலை கிடைக்கும் என்று சொன்னார்கள். மிகவும் போற்றத்தக்க விஷயம். ஆனால் இந்த விஷயத்திலே மத்திய அரசாங்கத்தை நம்ப வேண்டியதில்லை. காரணம், அதிகாரத்தை வைத்திருக்கிற யாரும் அதிகாரத்தைக் கொடுக்க சீக்கிரம் முன் வரமாட்டார்கள். நான் பாராளுமன்றத்திலே, இரண்டுமூன்று முறை கேட்டேன். 1949-க்கு முன்னாலே மாநிலங்களுக்குத்தான் அந்த உரிமை இருந்தது.

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபொழுது டன்னுக்கு ரூ. 35 என்று இருந்ததை ரூ. 56 என்று கொடுத்தார்கள். அப்பொழுது விவசாயிகள் எல்லாம் விவசாயம் செய்ய முன்வந்தார்கள். ஆதலால், மத்திய அரசாங்கம் அதை எடுத்தது தவறு என்று சொன்னேன். நாம் அந்த அதிகாரத்தை நம்மிடம் கொடுக்கவேண்டுமென்று சொல்வதை மத்திய அரசு கேட்கும், கேட்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதைவிட, மாநில அரசாங்கமே இங்கே இருக்கிற தனிப்பட்ட ஆலைகள் அத்தனையையும் தேசிய உடைமையாக்க வேண்டும். இதிலே தவறு ஒன்றும் கிடையாது. பஸ்களை தேசியமயமாக்கியிருக்கிறோம். இவையெல்லாம் பப்ளிக் கம்பெனிகள், எங்கோ இருக்கிறார்கள்

ஷேர் ஓல்டர்கள், யாரோ சில மானேஜிங் டைரக்டர்கள் நிர்வாகிக்கிறார்கள். ஆதலால், அவற்றை தேசியமயமாக்குவதன் காரணமாக, ரூ. 10 கோடிக்கு லாபம் வரும் என்றால், அதைச் செய்யவேண்டும். அதிலே தவறு ஒன்றும் இல்லை. இன்னும் ஒன்றையும் சொல்லி முடித்துக் கொள்கிறேன் . . . . (மணி யடிக்கப்பட்டது).

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

புதுக்கோட்டை தனி மாவட்டமாக்கப் பெற்றது வரவேற்க வேண்டிய ஒன்று. அது மக்களுடைய மகத்தான வெற்றி என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் அதனுடைய தலைநகரை அமைக்க அரசு ஏன் தயங்குகிறது என்பதை இந்த நேரத்தில் கேட்கவிரும்புகிறேன்.

மின் பற்றாக் குறைக்கு முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்பது என்னுடைய கருத்தாகும்.

சென்னை புறநகர் திட்டம் வரவேற்கக் கூடியதாக இருப்பினும், நகரத்தைச் சுற்றி நல்ல காற்றுக்கு காடுகள், தோட்டங்கள் வளர்க்கத் திட்டமிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மாவட்ட தலைநகரங்களுக்கு இது அமைக்க கவனம் செலுத்துவது நல்லது என்று கருதுகிறேன்.

எண்ணூரில் தண்ணீர் வருவது தடை அகற்ற தூர்வாரி இயந்திரம் வேலை செய்யவில்லை, என்று சொல்லப்படுகிறது.

குந்தா பகுதியில் நீர் பிடிப்பு நீக்கவிட்டல் மரங்கள் தண்ணீரை உறிந்து விடுவதாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றி ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர் அகவிலைப்படியை பிடித்தம் செய்யாமல், சேர்த்தே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவுதான் நாம் அதிகம் கொடுத் தாலும் அது பலன்தராது என்பது மற்றவர்களுக்குத் தெரியும். யானைப் பசிக்கு சோளப் பொறி போட்டதுபோல்தான் இருக்கும். சென்ற டிசம்பர் மாதம் ஒரு டின் கடலை எண்ணெய் ரூ. 68 ; இப்போது ரூ. 116. நல்லெண்ணெய் ரூ. 82; இப்பொழுது ரூ. 130. இப்படி ஒவ்வொரு சாமானுக்கு விலை ஏறிப்போ கின்ற நேரத்தில் விலைவாசிப்படியை, அகவிலைக்கு ஏற்றமாதிரி கொடுப்பதற் கான சரியான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கண்ணீர் வடிக்கும் கைத்தறியாளர்களைப் பாதுகாக்க வேண்டுமானால், பூரா நூலையும் விநியோகிக்கும் உரிமை அரசின் கையில் இருக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். நியாயவிலையில் நூல் விநியோகம் செய்தால்தான் அத்தொழில் அழியாமல் பாதுகாக்க முடியும். தமிழகத்திலே 5 லட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்களைப் பாதுகாத்தவர்கள் ஆவோம் என்பதையும் நான் இந்த சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வி விஷயத்திலே, 105 கல்லூரியிலிருந்து 176 கல்லூரிகளாக உயர்ந்திருப்பது என்பது உண்மை. ஆனால் படித்த மாணவர்களின் வேலையில்லா திண்டாட்டமும் அதிகரித்திருக்கிறது என்பதை மறக்க முடியாது. 43 கோடியிலிருந்து 97 கோடியாக மாறியிருக்கிறது என்று நிதி நிலை அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. பொருள் மதிப்பின் நிலையை வைத்துப் பார்த்தால் அது சரியாக இருக்கும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

இயற்கையின் கொடுமையும் ஏற்ற நடவடிக்கையும் என்ற தலைப்பிலே மத்திய அரசு 14.25 கோடி ரூபாய் தந்துதவியதற்காக நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், என் தொகுதி சீர்காழியில் அரசு குறிப்பிட்டிருக்கும் ரூ. 80 கொடுக்கவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு அமைச்சர் அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் அங்கு வந்தபொழுது நான் எழுதிக் கொடுத்தேன். இதுவரை கொடுக்கப்படவில்லை. அந்தப் பகுதியிலே ஒருவருக்கு 40 ரூபாய்க்கு மேல் கொடுக்கப்படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடியிருப்பு மனை சம்பந்தமாக, தஞ்சை மாவட்டத்தில் ஒரு லட்சத்து 57 ஆயிரம் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக்கூடிய அம்சம்தான். இருப்பினும்கூட, பட்டா கிடைப்பதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது பட்டா கொடுப்பதிலே, வாழ்ந்த மனை அவனுக்கும் அதுவரை வைத்திருக்கிற மரங்கள், மிராசுதார்களுக்கும் செல்லக்கூடிய நிலையில் அதிகாரிகள் செயல்படுகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உமையாள்பதி என்ற கிராமத்தில் ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில், வைத்த மரத்தை எங்களிடத்திலே கொடுக்கவில்லையென்று சொன்னால் மனை கூட வேண்டாமென்று சொல்லக்கூடிய நிலையில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அலுமினியம் தொழிற்சாலையை எடுத்துக்கொள்வதிலே தயக்கம் ஒன்றும் காட்டத் தேவையில்லை. ஆனால் அதே மாதிரி சர்க்கரை ஆலைகளையும் மற்ற ஆலைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு வீட்டு வசதிக் கழகம் அமைக்க இருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இது வரையில் வழங்கப்பட்ட மனைகளில் 80 ஆயிரம் பேர்களுக்கு இனிமேல் வீடு கட்டப்போவதாக இருக்கிறது. 10 ஆண்டுக்குத் திட்டம் போட்டால் கூட 80,000 வீடுகள் கட்ட முடியாது. ஆகவே, ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் வீடாவது கட்டினால்தான் 25 ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு, குடியிருப்பதற்கு வீடிருக்கிற நிலையை உருவாக்கமுடியும். ஏதோ 10,000 பேருக்கு என்று சொன்னால் கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் பிடிக்கும் என்று இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு சோஷலிச திட்டம், சமதர்மப் பாதைக்கு அடி வைக்கிறோம் என்று சொல்கின்ற நாளில், பெரிய மனிதர்கள் சென்னையிலே ஒரு வீடு, குற்றாலத்திலே ஒரு வீடு, ஊட்டியிலே ஒரு வீடு என்று வைத்திருக்கின்றதைப் பார்க்கிறோம். ஒண்டிக் குடிசையிலே வாழ்கிற குப்பனையும், சுப்பனையும் பார்க்கின்ற நேரத்தில், 20, 30 ஆண்டுகளாக விவசாயிகளாக இருப்பவர்களுக்குப் பட்டா என்பது என்னைப்போன்றவர்களால் வரவேற்கக்கூடியது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தேச விடுதலை இயக்கத்தின் மூல மந்திரம் உழுபவனுக்கே நிலம் சொந்தம் ஆக்கப்படவேண்டுமென்று அண்ணல் காந்தியடிகள் சங்கநாதம் முழங்கினார்கள். காங்கிரஸ் காலத்திலும் சரி, கலைஞர் காலத்திலும் சரி, நிலச்சட்டங்கள் புத்தகங்களை அலங்கரிக்கின்றனவே தவிர, அவனுடைய வாழ்க்கையை அலங்கரிக்கவில்லையென்பது என்னுடைய அபிப்பிராயம். யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டது போல் நிலச் சட்டங்கள் இருப்பதாக நான் கருதுகிறேன். அப்பொழுது அவர்கள் கொண்டுவந்த சட்டத்திலே ஒழுங்கான நிலைமைகள் இல்லை. முதலிலே, தெரியாமல், இவைகள் வரும் என்ற முறையிலேதான் நிலச் சட்டம் கொண்டு வரவேண்டும். 30 எக்கருக்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்று தண்டோரா போட்டோம். அவர்கள் அவற்றை மற்றவர்களுக்கு எழுதிக் கொடுத்துவிட்டார்கள். எந்தப் பண்ணையைப் பார்த்தாலும், பெருமாள் என்கிற பெயர் மாறி பெத்தபெருமாள் என்று தான் வந்திருக்கிறதே தவிர, நிலம் அவனிடம் தான் இருக்கிறது. பழைய கதை அப்படியேதான் இருக்கிறது. அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலே இருந்த காலத்திலே,

காங்கிரஸ் அரசு கொண்டுவந்த நில உச்ச வரம்புச் சட்டத்தை இது உச்ச வரம்பு அல்ல, மிச்ச வரம்பு என்று அழகாகக் கூறினார்கள். அது உண்மை என்பதை இன்றைக்கு நம்மால் பார்க்க முடியும். எத்தனை ஏக்கர் மிச்சம் இருக்கிறது என்று இன்றுவரையிலே தெரியாமல் இருக்கிறோம். சட்டமன்றத்திலே, அன்றைக்கு மதியழகன் இருந்த காலத்திலே, ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கர் இருக்கிறது என்று கூறினார்கள். இன்றைக்கு எத்தனை ஏக்கர் மிச்சம் இருக்கிறது என்று புரியவில்லை.

கோயில் நிலங்களுக்குச் சட்டமே கொண்டு வரவில்லை. நீங்கள் அன்று பேசிய பேச்சுக்கும், இப்பொழுது நடப்பதற்கும் எவ்வளவு வேறுபாடு? அப்பொழுது நீங்கள், காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி, உனக்கேண்டி கணக்கில்லா நகை என்று கேட்ட கலைஞர் அவர்களே, கஞ்சிக்கு வழியற்ற கண்ணம்மாளைப் பார், போட்டு துப்ப வெற்றிலை பாக்குக்கு வழியற்ற பொன்னம் பாளைப் பார் என்று நீங்கள் பட்டிதொட்டிகளில், கிராமங்களில் எல்லாம் சொன்னீர்கள். பாமர மக்கள் உங்களுடைய நவீனத்தை ரசித்தார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் நன்றாகச் செய்வீர்கள் என்று எதிர்பார்த்தார்கள். கோயில் நிலங்களைச் சொந்தமாக்க ஏன் தயங்குகிறீர்கள்? கம்யூனிஸ்டுகள் எதிர்ப்பார்களா? நீங்கள் அதைச் செய்வதற்கு தயக்கம் காட்டுவது ஏன் என்று என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் கட்சியின் சார்பாகக் கேரளாவில் அரசாங்கம் இருக்கிறது. அங்கு கோயில் நிலங்களை எடுத்திருக்கிறார்களா என்பதைக் கூறவேண்டும். மு.ப. 11-30

**திரு. எஸ். வடிவேல்:** எடுத்திருக்கிறார்கள். 1970-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதியிலிருந்து எந்த நிலப்பிரவுவிற்கும் எந்தக் சாகுபடிக்காரனும் நெல் அளக்கவேண்டியதில்லை, அரசுக்குக் கொடுத்தால் போதும் என்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. பொன்னப்பநாடார் அவர்கள் கேட்டது அங்கே கோயில் நிலங்களுக்கு உச்சவரம்பு கொண்டு வரப்பட்டு, நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதுதான். அதற்குத் தாங்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. எஸ். வடிவேல்:** எடுக்கப்பட்டிருக்கிறது சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சட்டத்தை இங்கே நீங்கள் ஏன் கொண்டு வரக் கூடாது. அப்படிச் செய்தால் ஏழை எளிய பாட்டாளி மக்கள் உங்கள்பக்கம்

நம்பி வருவார்கள். நான்கு லட்சம் ஏக்கர் நிலத்தை எடுத்து குடியானவர்களுக்குக் கொடுத்தால் நாங்கள் எதிர்ப்போமா ? எந்தக் கட்சியாவது, எதிர்க் கட்சியாவது எதிர்க்குமா ?

நான் விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கொஞ்சம் நேரம் கொடுக்கவேண்டும். ராஜாஜி காலத்திலே பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டு ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளிக்கு இவ்வளவு கூலி என்று என்ன நிர்ணயித்திருந்தார்களோ அதுதான் இன்றைக்கும் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1973-ஆம் ஆண்டு வரையிலே இருந்து வருகிறது. விலைவாசி ஏறியிருக்கிறது 3.5 ஏறியிருக்கிறது. 4.5 ஏறியிருக்கிறது. அவ்வளவு ஏறியிருக்கிறது. இவ்வளவு ஏறியிருக்கிறது என்றெல்லாம் வாழ்க்கைச் செலவு புள்ளி விவரங்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் அவர்களுக்கு அன்றைக்கு இருந்த கூலிதான் இன்றைக்கும் கிடைக்கிறது. இதுதான் சம தர்மமா ? பனை மரத்தில் ஏறும்பொழுது கீழே விழுந்துவிட்டால் நஷ்ட ஈடு கொடுக்கிறார்கள், மீனவர்கள் கடலில் போய்விட்டால் அவர்கள் குடும்பத்திற்கு நஷ்ட ஈடுகொடுக்கப்படுகிறது ஆனால் பூச்சி மருந்து தெளிக்கும்பொழுது ஒரு விவசாயத் தொழிலாளி இறந்துவிட்டால், வயலிலே விவசாயி பாம்பு, பூச்சி கடித்து இறந்துவிட்டால், அல்லது நடவிலே இறந்துவிட்டால் அவனுக்கு கருவமரம் தான், ஒன்றும் இல்லை. விவசாயிகள் வாழ்வதற்கு இந்த அரசு உதவி செய்தால் உண்மையிலேயே என்னைப் போன்றவர்கள் முழு மூச்சோடு ஆதரவுகொடுப்போம். ஒத்துழைப்போம். ஆனால் இந்த வரவுசெலவுத் திட்டத்திலே ......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் உறுப்பினர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சமதர்மம் சமதர்மம் என்று சொல்கிறார்கள். என்ன சமதர்மக் கொள்கை நாங்கள் செய்ய வேண்டும் என்று உருப்படியாக அவர்கள் சொல்லவேண்டும். தொழிலாளர்களுக்காக ஒரு கமிஷன் போட்டு யார் யாருக்கு எவ்வளவு கூலி கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அதற்காக இப்பொழுது ஒரு கமிஷன் போடப்பட்டு இருக்கிறது. அதனுடைய முடிவுகள் கிடைத்தபிறகு பரிசீலிக்கப்படும், நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

அவர்கள் கோயில் நிலத்தைப்பற்றிச் சொன்னார்கள். கோயில் நிலத்தைக் கேரளாவிலே சொந்தமாக எடுக்கவில்லை. இரண்டு கோயில் நிலங்களை, பத்மநாப சாமி கோயில் நிலத்தையும், குருவாயூர் கோயில் நிலத்தையும் எடுத்தது மகாராஜா இருந்த காலத்திலேதான், இவர்கள் ஆட்சிக்காலத்திலே எடுக்கவில்லை,

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் மிக உருக்கமாக ஒன்றைச் சொன்னார்கள். பனைமரத்திலிருந்து கீழே விழுந்துவிடுகின்ற தொழிலாளி இறந்துவிட்டால் ஆயிரம் ரூபாய் அவனுடைய குடும்பத்திற்கு இந்த அரசு வழங்குகிறது, அதைப் போலவே கட்டுமரத்தில் செல்கின்ற மீனவர் விபத்துக்கு ஆளாகிவிட்டால் அவருடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் இந்த அரசு வழங்குகிறது என்றும் சொன்னார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகு தான் அப்படிப்பட்ட அறிவிப்புகள் செய்யப்பட்டன. இதன்மூலம் 100, 150 குடும்பங்கள் அந்த உதவித் தொகையைப் பெற்றிருக்கிறார்கள். அதைப்போல பூச்சி மருந்து அடிக்கின்ற நேரத்திலே விவசாயி இறந்து விட்டால் அவர்கள் குடும்பத்திற்கும் இந்த அரசு உதவிசெய்ய முன்வந்தால் உங்களை ஆதரிக்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். அதை நான் இப்பொழுது ஒத்துக்கொள்கிறேன். பூச்சி மருந்து அடிக்கின்ற நேரத்திலே விவசாயி இறந்துவிட்டால் அந்தக் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்பதை அறிவிக்கிறேன் (ஆரவாரம்) இனிமேலாவது அவர்கள் எங்களை ஆதரிக்க வருவார்களா?

**திரு. எஸ். வடிவேல்:** நான் அதைப் பாராட்டுகிறேன். சட்டையில்லாத சங்கரன், வேட்டியில்லாத வேலன், புடவை யில்லாத பொம்மி, சோப் கிடைக்காத சொக்கி, செருப்பு வாங்க முடியாத சிங்காரம் இந்த நாட்டில் அதிகமாக இருக்கிறார்கள் என்று அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கோயில் நிலத்தை ஏழைகளுக்குக் கொடுத்தால் என்ன என்று அண்ணா அவர்கள் கேட்டார்கள். நல்லதைப் பாராட்டாமல் எப்படி இருக்கமுடியும்? நான் பாராட்டாவிட்டாலும் இந்த நாடே பாராட்டும். நீங்கள் சொல்வது சொல்லில் அலங்காரமாக இருக்கிறது, சட்டப்புத்தகத்தில் அலங்காரமாக இருக்கிறது. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பூச்சி மருந்து தெளிக்கும் நேரத்திலே இறந்துவிடுகின்ற விவசாயியின் குடும்பத்திற்கு அரசு உதவி செய்யும் என்று சொல்வது சொல் அலங்காரம்தானா?

**திரு. எஸ். வடிவேல்:** அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்னும் விவசாயப் பெருங்குடி மக்களுடைய தொழிலாளர்களுடைய வேதனைகளைப் போக்கக்கூடிய முறையிலே கோயில் நிலங்களை எல்லாம் எடுத்து அவர்களுக்கு வழங்கி அவர்களுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துத்தர இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலியை உயர்த்தவில்லை என்று அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள் ......

திரு. எஸ். வடிவேல் : பண்ணையாள்பற்றிச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அவர்கள் அநேகமாக இப்பொழுது கிடையாது. கூலி உயர்வுபற்றி தஞ்சை மாவட்டத்திலே முத்தரப்பு மாநாடு, மிராசுதார்கள், தொழிற் சங்கத் தலைவர்கள், அதிகாரிகள் இவர்களை வைத்துக்கொண்டு மூன்று திங்களுக்கு முன்வரையிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் சொன்ன அதே கூலியை நிர்ணயம் செய்திருக்கின்ற முறையிலே அறிக்கை கொடுத்திருக்கிறோம். ஆகவே ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்கிறார்கள், அது சரியல்ல.

திரு. எஸ். வடிவேல் : கூலி உயர்வுபற்றி இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால் நான் சொன்னது ராஜாஜி காலத்தில் கொண்டுவந்த பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்பற்றி. அன்றைக்கு இருந்த நிலைமைதான் இத்றைக்கும் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** முத்தரப்பு மாநாட்டில் அது பற்றிச் சொல்லப்படவில்லை. காரணம் பண்ணையாள் எல்லாம் வெளியேறி விட்டார்கள் என்று நினைத்ததுதான்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, 1973-74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நான் பொன்னென கண்ணென காமதேனுவென, கற்பக விருட்சமெனப் போற்றி வரவேற்கின்ற வகையிலே தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு அலுவலர்கள் ஆகிய எல்லா வர்க்கத்தினரும் பாராட்டு கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

எனக்கு முன்னாலே பேசிய திரு. வடிவேல் அவர்கள், யார் எதிர்த்தாலும், நானே எதிர்த்தாலும் இதற்கு மக்களுடைய ஆதரவு இருக்குமென்று சொன்னார்கள். இன்று நாடு அந்த நிலைமையில்தான் இருக்கிறது. அரசியல் கட்சிகள் எதிர்த்தாலும்கூட பாமர மக்கள், பாட்டாளி மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் இதை நான் ஏற்கனவே சொன்னமாதிரி பொன்னென, கண்ணென, காமதேனுவென, கற்பக விருட்சமென வரவேற்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. பல்வேறு துயரங்களுக்கிடையே ஒரு உபரி நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்திற்கு அளித்திருக்கிறார்கள். அதே நேரத்திலே புதிய வரிகள் போடப்படவில்லை. ஏற்கனவே இருக்கின்ற வரிகளும் உயர்த்தப்படவில்லை. ஆனால் மத்திய அரசு எறக்குறைய ஏழை எளிய மக்கள் பாட்டாளி மக்களைப் பாதிக்கக்கூடிய வகையிலே 292 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளைப் போட்டு அதோடு மட்டுமல்ல, ஏற்கனவே இருக்கின்ற வரிகளையும் உயர்த்தியிருப்பதைப் பார்க்கும் பொழுது நாம் நிச்சயமாக அதைக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

1973 மார்ச் 2] [திரு. மா. வெ. கரிவேங்கடம்]

இந்த நிதிநிலை அறிக்கையில் தொழிலாளர்களுக்காக தொழிற்சட்ட ஆலோசனைப் பிரிவுகள் ஏற்படுத்தி சென்னை, கோவை, மதுரை ஆகிய நகரங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு அப்படிப்பட்ட வசதி கிடைக்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மத்திய அரசு அலுவலர்களுக்குக் கொடுக்கப்படுகிற அகவிலைப்படிக்கும் மாநில அரசு அலுவலர்கள் பெறுகின்ற அகவிலைப்படிக்கும் வேறுபாடு இல்லாத வகையிலே இன்றைக்கு அகவிலைப்படியை நம்முடைய மாநில அரசு உயர்த்திக் கொடுத்திருக்கிற நிலையை அரசு அலுவலர்கள் எல்லாம் உளமார மனமாரப் பாராட்டுகிறார்கள், தங்கள் வாழ்த்துக்களை சுவரொட்டிகள் மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க வழிவகை செய்து இந்த ஆண்டே நிதியை ஒதுக்கியிருக்கின்ற இந்த அரசை தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் உளமார மனமாரப் பாராட்டுகிறார்கள், வாழ்த்துகிறார்கள். தங்களுடைய ஆதரவை இந்த அரசுக்கு நல்குவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை பகுதியைத் தனி மாவட்டமாக்கியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் எங்கள் மாவட்டத்திலே பாலக்கோடு துணை வட்டத்தை வட்ட அளவிற்கு உயர்த்த வழிவகை செய்திருக்கிறார்கள். அங்கு துணைக் கருவூலத்திற்கு ஒரு லட்சத்து 31,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதற்காக முதலமைச்சரவர்களை, அமைச்சரவையை நன்றியறிதலோடு பாராட்டி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தனியார் துறையிலே இயங்கிவந்த மின்சார நிறுவனங்களை நாங்கள் எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்தபொழுது அரசு ஏற்க வேண்டும், அரசு ஏற்க வேண்டும் என்று 62-இலிருந்து 67 வரையிலும் இதேமன்றத்தில் கோரிக்கையை வைத்தோம். அப்போது அது ஏற்கப்படவில்லை. ஆனால் நமது அரசு அவைகளை வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற நிறுவனங்களாக ஆக்கி ஆணை பிறப்பித்திருப்பதை மட்டிலா மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

அதேபோன்று மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையையும் நாட்டுடைமையாக்கியிருக்கிறோம். மத்திய அரசின் அனுமதி தேவை, இசைவு தேவை, சம்மதம் தேவை என்ற அடிப்படையிலே ஆக்கியிருக்கிறோம். மத்திய அரசும் சம்மதத்தை, இசைவைத் தரும் என்ற எண்ணம் இருந்தாலும்கூட நேற்று

மன்றத்தில் பேசிய ஒருசிலரின் கருத்துக்களைப் பார்க்கும்பொழுது இசைவு கிடைக்குமா, சம்மதம் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் இந்த மன்றத்திலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே ஒரு லட்சத்து 57,000 பேர்களுக்கு இலவசமாக சர்க்கார் செலவிலே வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றால் எத்தனை லட்சோப லட்சம் குத்தகைதாரர்கள் இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்பதை எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தச் சட்டம் என்ற முறையிலே குத்தகைதாரர்கள் குத்தகை செய்யும் நிலத்தை, விரும்பினால் அவர்களுக்கே வாங்கித்தருவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது, பெருமைக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தர்மபுரி மாவட்டம் 7 ஆண்டுகளுக்கு முன்னால் தனி மாவட்டமாக அமைந்தது. அப்படி அமைந்த நோக்கிலே மாவட்ட மருத்துவ மனை அமைப்பதற்காகக் கட்டிடம் கட்ட நில ஆர்ஜிதம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஆனால் நில உடைமையாளர்கள் வழக்குமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால் அது உடனடியாக முடியவில்லை. இப்பொழுது வழக்குகளெல்லாம் முடிந்துவிட்டது, தீர்ந்துவிட்டது. நில ஆர்ஜித நடவடிக்கையிலே அவர்களுக்கு நஷ்ட ஈடு தரும் இடத்திலே இருக்கிறோம். 56 ஏக்கர்கள் ஆர்ஜிதம் செய்யவேண்டும். அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். இந்த ஆண்டிலே 20 ஏக்கர்களுக்கு நஷ்ட ஈடாக 90,000 ரூபாய் கொடுக்க வேண்டும். அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து உடனடியாக நஷ்ட ஈட்டைக் கொடுத்து அந்த நிலத்தை நம்முடைய வசமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ஆண்டு 20 மாணவர்களுக்கு இலவச உணவு இல்லங்களை அமைப்பதாக அறிவிப்பிலே பார்க்கிறேன். அதைப் பாராட்டி வரவேற்கிறேன். தர்மபுரி மாவட்டம் மிகமிக பிற்பட்ட மாவட்டம். ஆகவே அந்த 20 இலவச உணவு இல்லங்களில் காரியமங்கலம், மாறன்பள்ளி போன்ற இடங்களில், இப்படிக் குறைந்தது 5 இல்லங்களை தர்மபுரி மாவட்டத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏறக்குறைய 79 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்து நமது அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். கடந்த ஐந்தாறு ஆண்டுகளிலே 10, 15 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அரசு வேலை செய்திருக்கிறது. ஒருசில திட்டங்கள் முடிந்து விட்டன. அவை களிலே ஒருசில முக்கியமான நீர்ப்பாசனத் திட்டங்களான கசாக்குடி திட்டம், சாக்கட மூட்லு நீர்த்தேக்கத் திட்டம் முதலியவற்றை உடனடியாக எடுத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு அப்பொழுது எதிர்க்கட்சியிலிருந்த எத்தனையோ உறுப்பினர்கள் வற்புறுத்தியும் அது வராது, பகல் கனவு என்று மக்கள் கருதும் அளவிற்கு இருந்த அந்தத் திட்டத்திற்கு 108 லட்சம் ரூபாய் அளவிற்கு அனுமதி வழங்கப்பட்டு திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அங்குள்ள விவசாய மக்கள் இந்த அரசை, முதல்வரை உளமாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக 40 லட்சம் ரூபாய் இந்த ஆண்டு நிதி ஒதுக்கம் செய்திருக்கிறோம். இதற்கும் உளங்கனிந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒரேயொரு கோரிக்கையை மட்டும் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்திற்கு மேம்பாலம் என்ற முறையில் யாதொரு நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. அருள்கூர்ந்து, கசாக்குடியிலிருந்து பாலக்கோடு செல்லும் வழியில் சின்னாறு, மாரன்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் ஆகியவற்றில் பாலத்தை அமைத்துத் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பல்வேறு பேருந்து வழித் தடங்கள் எடுக்கப்படுகின்றன. தர்மபுரி மாவட்டத் திலே 67 மைல் என்று வரையறை செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இதில் நான் சொல்வது 15 மைல்கள்தான் வரும். பாலக்கோட்டிலிருந்து மாரன்பள்ளிக்கு 7 மைல்கள். மாறன்பள்ளியிலிருந்து சின்னாற்றுத் திட்டத் திற்குச் செல்ல வேண்டும். இது 8 மைல்கள் இருக்கும். ஆகவே, இந்த 15 மைல்களை அருள்கூர்ந்து நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அறிக்கையை உளமார, மனதாரப் பாராட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. நா. காசிராமன்:** தலைவரவர்களே, 1973-74 ஆம் ஆண்டிற்காக அளிக் கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி சில அபிப்பிராயங்களைச் சொல்வதற்குமுன் திண்டுக்கல்லுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும். அதன் காரணமாக, புதிய வரிகள் போடுவதற்கான வாய்ப்புகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. பிற்காலத்தில் வராமல் இருக்கும் என்ற நிச்சயமும் இல்லை.

1966-67 ஆம் ஆண்டையும், இந்த ஆண்டையும் ஒப்பிட்டுப் பல இடங்களில் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். 52 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசிடமிருந்து பெற்று, 142 கோடி ரூபாயை வரிகளாகப் போட்டு, 194 கோடி ரூபாய் வருமானத்தை 1966-67-இல் அப்பொழுதிருந்த அரசாங்கம் பெற்றுவந்தது. ஆனால் இப்பொழுது மத்திய அரசிலிருந்து நமக்குக் கிடைக்கும் தொகை 149¾ கோடி ரூபாய். வரிகளின் மூலம் கிடைப்பது 315 கோடி ரூபாய். மொத்த வருமானம் சுமார் 465 கோடி ரூபாயாக இருக்கிறது. 1966-67 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்குக் கிடைத்தது, வரிகளின் மூலம் கிடைத்த தொகையில் மூன்றில் ஒரு பங்கு. ஆனால் இப்பொழுது மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்குக் கிடைப்பது, வரிகளின் மூலம் கிடைக்கும் தொகையில் சரி பாதி, 100-க்கு 50 என்ற அளவில் கிடைக்கிறது. இந்த அளவிற்கு மத்திய அரசிடமிருந்து நிதி கிடைக்கும்பொழுது, அவைகள் எந்த காரணங்களுக்காகக் கிடைக்கின்றன என்று பார்த்தால், முதலில் 'கிராண்ட்ஸ் இன் எய்ட்' என்ற கணக்கிலே நமக்குப் பணத்தைக் கொடுக்கிறார்கள். 1966-67-ல் 22 கோடி ரூபாய் என்று இருந்ததை 1973-74-ல் 54 கோடி ரூபாய் என்ற அளவில் கொடுக்கிறார்கள். கிட்டத்தட்ட 2½ பங்குக்கு மேல் கொடுக்கிறார்கள். இதை எதற்காகக் கொடுக்கிறார்கள் என்று பார்க்கும்பொழுது, வேலை வாய்ப்புத் திட்டங்களுக்காகவும், "ஸ்லம் கிளியரன்ஸ் அண்ட் இம்ப்ரூவ்மெண்ட் மெண்ட் இன் மெட்ரூஸ் சிட்டி", சென்னை நகரத்திலே குடிசைகளை மாற்றி நல்ல சீர்திருத்த நிலைமைகளை உண்டாக்கவும் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான கருத்தைச் சொல்கிறார்கள். குடிசைகளை மாற்றுகின்ற திட்டத்திற்கு மத்திய அரசு எந்தப் பணமும் தரவில்லை. "ஸலம் இம்ப்ரூவ்மெண்ட்" என்பதற்கும், "ஸ்லம் க்ளியரன்ஸ்" என்பதற்கும் வித்தியாசமிருக்கிறது. மாநில அரசு செய்வது ஸ்லம் க்ளியரன்ஸ். மத்திய அரசிலிருந்து ஸ்லம் இம்ப்ரூவ்மெண்டிற்குத்தான் பணம் கிடைக்கிறது.

திரு. நா. காசிராமன்: தலைவரவர்களே, குடிசைகளை மாற்ற என்று சொல்லவில்லை, குடிசைகளைச் சீர்திருத்தி அமைப்பதற்காகக் கொடுக்கிறார்கள் என்று சொன்னேன். மேலும் குடிநீர்த் திட்ட வசதிக்காகக் கொடுக்கிறார்கள்.

மேலும் நிலங்களிலே வேலை செய்கின்ற வீடில்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க மத்திய அரசிலிருந்து இந்த கிராண்ட்ஸ் இன் எய்ட் மூலம் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காகக் கொடுக்கிறார்கள். அந்த நிதியை நமது அரசு செலவிடுவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நல்லமுறையில் குடியிருப்புகளைச் சீர்திருத்துவதையும், வீடில்லாதவர்களுக்கு வீடு கட்ட ஏற்பாடு செய்துள்ளது. இதைப் பாராட்டுகிறேன்.

ஆனால் அப்படிச் செய்கிறபோது என் மத்திய அரசிலிருந்து இன்னின்ன இனத்திற்கு இவ்வளவு ரூபாய் வருகிறது என்ற விவரத்தைக் கூடவா இருட்டடிப்புச் செய்ய வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

நில வரியைக் குறைப்போம், நீக்குவோம் என்று சொன்னார்கள். நடந்திருப்பதைப் பார்த்தால் அது ஒரு மாயை—"மித்" என்ற அளவில்தான் இருக்கிறது. 1966-67-ல் நில வரி, பாசன வரி, செஸ் வரி, அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் எல்லாம் சேர்ந்து இந்த அரசுக்கு மொத்தமாக 847 லட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டும் அதே இனங்களின் மூலம் இந்த அரசுக்குக் கிடைக்கும் தொகை 847 லட்சம் ரூபாய்தான். ஆகவே, இதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. கணக்கில் வேண்டுமானால் மாற்றம் இருக்கலாமே தவிர, உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்ற நிலம் வைத்திருக்கின்றவன் அரசுக்குக் கொடுக்கின்ற தொகையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆகவே, நில வரியைக் குறைத்தோம், நீக்கினோம் என்று சொல்லுவது ஒரு மாயையான வாதம் என்று சொல்ல விரும்புகிறேன்.

சர்க்கார் வேலை செய்யும் சிப்பந்திகள், ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு பஞ்சப்படியைக் கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க அம்சம். ஆனால் ஒன்று கவனிக்க வேண்டும். ஸ்தல ஸ்தாபனத்தில் பணிபுரிபவர்களுக்கும் பஞ்சப்படியை கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று இங்கிருந்து உத்தரவிட்டு விடுகிறோம். மாநில சர்க்கார் இப்படிக் கூட்டிக்கொடுக்கும்போது வரியைப் போட்டுச் சரிக்கட்டுகிறார்கள். அதைப் போல் ஸ்தல ஸ்தாபனங்கள் வரியைப் போட்டு செலவை ஈடுகட்ட முடியாது. இந்த நிலையைப் போக்க ஒரு வழி இருக்கிறது. 1938-39-ம் ஆண்டில் மோட்டார் வாகன வரிகள் மூலம் மாநில அரசுக்கு வந்த தொகையில் இருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து வருகிறார்கள். அப்போது எந்தத் தொகையைக் கொடுத்தார்களோ அந்தத் தொகைதான் இன்றளவும் மார்க்கண்டேயன் போல் அரசு கொடுத்து வருகிறது. அப்போது அந்த வரியின் மூலம் வந்த தொகை ஆறு அல்லது ஏழு கோடி ரூபாய்தான். இன்றைக்கு 60 கோடி ரூபாய் வரை வருகிறது. ஆகவே, ஒரு கணிசமான

தொகையை அதிலிருந்து எடுத்து ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பிரித்துக் கொடுத்தால் அவர்கள் இந்தச் செலவை எல்லாம் ஈடுகட்டிக் கொள்ள முடியும்.

விற்பனை வரி, வணிக வரி மூலம் வந்த வருவாய் 48 கோடி ரூபாயாக இருந்தது இன்று 117 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இது எந்த அளவுக்கு எந்தெந்தப் பண்டங்களின்மீது போடப்பட்டு மக்கள் மீது போய்ச் சேருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். முன்பு இருந்ததைப் போல் 2½ மடங்கு அதிகமாக இப்போது அரசு மக்களிடமிருந்து வசூலிக்கிறது. அது மாத்திரமல்ல; கலால் வரி 5 கோடி ரூபாயாக இருந்தது இன்று 36 கோடி ரூபாயாக ஏழு மடங்கு உயர்ந்திருக்கிறது. இந்த விற்பனை வரியில் சலுகைகள் கொடுத்திருந்தால் உணவுப் பண்டங்களின் விலை, அத்தியாவசியமான பண்டங்களின் விலை குறைந்திருக்கும். அந்த வகையில் அரசு தன் கவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டும். அதிலே அரசு தவறிவிட்டது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு நல்ல அம்சத்தை 'லாண்ட் டு தி டில்லர்'—உழுபவனுக்கே நிலம் என்ற திட்டத்தைக் கூறியிருக்கிறார்கள். இது வெகு காலமாகச் சொல்லப்பட்டு வந்த விஷயம். இந்த நல்ல அம்சத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இதன் பேரில் மெம்பர்கள் பேசும்போது கோவில் நிலங்கள், மத ஸ்தாபன நிலங்களுக்கும் உச்ச வரம்பு வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இந்தச் சட்டம் கொண்டு வராமல் இருந்திருந்தால் அந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இருந்திருக்கலாம். இந்த நிலைமையை ஏற்படுத்திக் கொண்ட பிறகு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தியே மத ஸ்தாபனங்களிடம் உபரியாக இருக்கும் நிலங்களை எல்லாம் ஆங்காங்கு குத்தகை வைத்திருப்பவர்களுக்கே கொடுத்துவிட முடியும். ஆகவே, நடுவில் உச்ச வரம்புச் சட்டத்தை கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. எந்த மத ஸ்தாபனங்களாக இருந்தாலும் இதிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கான வழிவகைகள் இல்லாமல் 'லூப் ஹோல்ஸ்' சட்டத்தில் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பவர் கட் வந்திருக்கிறது. வருவாய்க்கு பவர் கட், உற்பத்திக்குப் பவர் கட், அதிக ஊதியம் பெற பவர் கட், வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட பவர் கட் என்று பவர் கட் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை எற்படாதிருக்க அரசு முன்பே யோசனை செய்து தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும்.

1967-68-ம் ஆண்டில் அன்று மின்சார இலாகா பொறுப்பை ஏற்றிருந்த இன்றைய கல்வியமைச்சர் அவர்கள் 'நெய்வேலி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். அந்த ஒப்பந்தத்தின்படி 1969-ம் ஆண்டு வரை தான் அவர்கள் மின்சாரம் கொடுக்க முடியும்—காரண்டி கொடுக்க முடியும் என்ற அளவிலே ஒப்பந்தம் இருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையில் படித்துக் காண்பித்தார்கள். அதற்குப் பிறகு நீடித்து அவர்களிடமிருந்து மின்சாரம் பெறுவதற்கான அக்ரிமென்ட் புதிதாகச் செய்யப்பட்டதா? இல்லை நெய்வேலி மின்சாரத்திற்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டுமென்றால் அதை விடுத்து 'சீப்'பாக மற்ற மாநிலங்களிலிருந்து வாங்குவதற்கு வழி செய்யப் பட்டதா? நெய்வேலி மின்சாரத்திற்கு அதிகப் பணம் ஆகிறது என்ற காரணத்தால் நாம் அவர்களிடம் இருந்து பெறுவது குறைந்ததால் அவர்கள் மின்சாரம் விலை போகவில்லை என்ற காரணத்தால் அவர்கள் உற்பத்தி செய்வதில் உற்சாகம் குறைந்ததா என்பதை எல்லாம் பார்க்க வேண்டும்.

இயற்கையின் காரணமாகவும், வேலை செய்பவர்களின் பிரச்சினை காரணமாகவும், பல சங்கடங்களினால் மின்சார உற்பத்தி குறைந்திருக்கிறது. நிச்சயமாக தமிழ்நாட்டு நலனில் அக்கறையுள்ள மத்திய அரசு இந்த நிலை பற்றிக் கூர்ந்து கவனித்து ஆவன செய்யும் என்ற நம்பிக்கையை இந்தச் சபையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெய்வேலியில் டிசம்பர் மாதத்தில் 50, 60 மெகா வாட் அளவுக்கு இருந்த மின்சார உற்பத்தியை, புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு அதிகாரி மூன்று மாதங்களில் 350 மெகா வாட் அளவுக்கு உயர்த்தியிருக்கிறார். அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரைப் பாராட்டும்போது அங்கிருக்கும் தொழிலாளர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் ஆகிறார்கள். அந்த உற்பத்தியை அதிகரிக்க மத்திய அமைச்சர் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் நல்ல முயற்சி செய்து உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நெய்வேலியிலுள்ள தொழிலாளர்களுக்கு இந்தச் சபையின் மூலமாக, தங்கள் மூலமாக வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். அவர்களது பிரச்சினைகள் எவ்வளவோ ஆயிரம் இருக்கலாம். தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் தலையாய பிரச்சினையைக் கூர்ந்து நோக்கி தங்கள் பிரச்சினையைத் தள்ளி வைத்து விட்டு மின் உற்பத்தியில் அதிகக் கவனம் காட்டி நாட்டின் நலனுக்கு, தமிழ் நாட்டின் நலனுக்காக அதிக மின் உற்பத்தியைச் செய்து கொடுத்து

விட்டு எங்களுக்கு இன்னின்ன சலுகைகளைச் செய்து தரவேண்டுமென்று அவர்கள் கேட்பார்களானால் நிச்சயமாகத் தமிழ்நாட்டு மக்கள் அவர்கள் பக்கம் நிற்பார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் என்னூரிலும், மேட்டூரிலும் காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களிலிருந்து 500 மெகா வாட் மின் சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன். ஆனால் புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு துரிதமான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை. அதிலே துரிதமான நடவடிக்கை எடுத்து நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்.

முக்கியமான விஷயம். மாடர்ன் ரைஸ் மில்ஸ் நிறைய வைத்திருக்கிறார்கள். அதிலிருந்து உமி 25 பர்சன்ட் கிடைக்கிறது. இதை எரிபொருளாகப் பயன் படுத்தி அதன் மூலம் பெறுகிற சக்தியைக் கொண்டு சிறு சிறு மின்சார ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்தால் அந்த ரைஸ் மில்கள் தாங்கள் உற்பத்தி செய்கிற மின்சக்தியையே பயன்படுத்திக் கொள்ள முடியும், அதன் மூலம் பொது மின்சார கிரிட்டிலிருந்து மின்சக்தி எடுத்துக் கொள்வது குறையும். இது பற்றியும் அரசு கவனிக்க வேண்டும்.

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முன் வந்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன். கிட்டத்தட்ட ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பாக என் தொகுதியில் ஐயாநல்லூரில் 60 பேர்களுக்கு வீடுகள் கட்ட கடன் கொடுத் தார்கள். எப்படிக் கொடுக்கப்பட்டது என்றால் அவர்கள் உழைப்பிலே, ஓய்வு நேரத்திலே வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கொடுத்தார்கள். கூலி வேலை செய்து பிழைக்கக்கூடியவர்களுக்கு ஓய்வு நேரம் என்பது மிகக் குறை வாகத்தான் இருக்கும். ஆகவே, அவர்கள் எல்லோரும் வீடு கட்ட முடியவில்லை. கட்டியவர்களின் வீடுகளும் வெள்ளத்தினால் அடித்துக் கொண்டு போகப்பட்டு விட்டன. அவர்களுக்குக் கொடுத்த கடனை வசூலிப்பதற்காக அதிகாரிகள் அவர்களுடைய மாடுகள், நெல் ஆகியவற்றை எல்லாம் ஜப்தி செய்ய முற்படு கிறார்கள். இதைப் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் கும்பகோணம் வந்தபோது சொல்லியிருக்கிறேன். அவர்கள் அதை மனதில் கொண்டு ஏழை ஹரிஜனங் களின் துயரைத் துடைப்பதற்கு ஏதுவாக இந்தக் கடன்களைத் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அளவிற்கு எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைக் கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** உறுப்பினர் அவர்கள் 1969-க்குப் பின்னால் நெய்வேலியோடு வாரியம் ஒப்பந்தம் செய்யவில்லை என்று சொன்னார்கள். பின்னும் பேசி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. விவரங்கள் வேண்டுமானால் தனியாகக் கேட்டால் தரத் தயாராயிருக்கிறேன்.

**திரு. வி. இராசகோபால்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கக்கூடிய 1973-74-ம் ஆண்டுக் கான நிதிநிலை அறிக்கையை நான் மனமாற வரவேற்று பாராட்டுகிறேன். நு.ப. 12-00

இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான புது வரியும் இல்லை. அதே சமயத்தில் இருக்கிற வரிகளைக் கூட ஏற்றாமல் மிகச் சாமர்த்தியமாக பல முற்போக்குத் திட்டங்களைத் தீட்டி பொதுமக்கள், சாதாரண மக்கள், ஏழை எளிய பாட்டாளி மக்கள் அத்தனை பேர்களும் பாராட்டக்கூடிய நிலையில் இந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். பத்திரிகைகள் கூட இந்த நிதிநிலை அறிக்கையை கண்டிக்க முடியாமல் விட்டிருப்பதை நாம் பார்க் கிறோம்.

எதிர்கட்சிக்காரர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் பாராட்டாமல் இருந்தாலும் அவர்கள் உள்ளத்தில் இதை அவர்கள் நிச்சயமாக பாராட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். புரட்சிகரமான சில திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் நாம் காண்கிறோம்.

குறிப்பாக, இன்றையதினம் படித்துவிட்டு வேலை இல்லாமல் பல பட்டதாரி இளைஞர்கள் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு ஏறக்குறைய 15 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த வேலையில்லாத் திண்டாட்டம் என்பது தமிழ்நாட்டில் மட்டும் ஏற்பட்டுள்ளதல்ல. இந்தியா முழுவதும் இருக்கிறது. இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த நிலையில் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஒரு சிறிய திட்டத்தினை கலைஞர் அவர்கள் உருவாக்கி அதற்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது உள்ளபடியே பெருமகிழ்ச்சியை அளிக்கிறது.

அடுத்தபடியாக, உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்று நடத்தும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைக் கண்டு உள்ளபடியே நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைகிறோம். தொழிலாளர்களுக்கு, அவர்களது பிரச்னைகள் குறித்து சட்ட ஆலோசனைகள்

கூற தொழில் சட்ட ஆலோசனைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது இந்த அரசு தொழிலாளர்களின் நலன்களான் எறத அளவிற்கு அக்கறை கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

அடுத்தபடியாக, உள்ள மிக முற்போக்கான திட்டம், தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு, வீட்டு வசதிக் கழகம் என்ற ஒன்றை ஏற்படுத்தி 80,000 வீட்டு மனைகளில் படிப்படியாக ஆண்டு ஒன்றுக்கு 10,000 வீடுகள் வரை கட்டி முடிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. 80,000 வீட்டு மனைகள் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டு அந்த மனைகளில் அவர்கள் வீடுகள் கட்டாமல் அந்த மனைகளை காலியாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றில் வீடுகள் கட்டிக் கொடுக்க இப்போது திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் நான் ஒன்றை பணிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ்காரர்கள் காலத்தில் கூட இப்படி வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். நெல் கொண்டு வருமுன்னே நில்லாதோ சுவர்கள் என்று நாம் சொல்லி வந்திருக்கிறோம் எதிர்கட்சியில் இருந்தபோது. அவ்வளவு வீடுகளும் இப்போது இடிந்துவிழுந்து மண்ணோடு மண்ணாகப் போய்விட்டிருக்கின்றன. ஆனால் நாம் கட்டும் வீடுகள் கலைஞர் அவர்களின் பெயரைச் சொல்லக் கூடிய அளவிற்கு என் தாத்தா காலத்தில் கலைஞர் அவர்கள் முதன் மந்திரியாக இருந்தபோது கட்டிக்கொடுத்த வீட்டில் நான் இருக்கிறேன் என்று சொல்லக்கூடிய அளவில், பெருமையாகப் பேசக்கூடிய அளவில், அந்த வீடுகளை கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் நிறைய ஹரிஜனக் காலனிகளுக்கு சுடுகாட்டுப் பாதை கிடையாது. அதுமட்டுமல்ல. ஒரு தீவில் வசிப்பதுபோல் நாலாபுறமும் தண்ணீர் சூழ்ந்து, வயல்வெளிகள் சூழ்ந்து, சேரும் சகதியுமாக இருக்கக்கூடிய இடங்களில்தான் ஹரிஜன மக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனை வழங்கும் விஷயத்தில் அரசு இன்னும் சற்று கனிவோடு கவனிக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட 80,000 வீட்டு மனைகளில் வீடுகள் கட்டிக் கொள்ளப்படவில்லை என்றிருந்தாலும் என்றாவது ஒரு நாள் அவர்கள் கண்டிப்பாக வீடு கட்டிக்கொள்ளத்தான் போகிறார்கள். வீடு இல்லாவிட்டாலும் வீடு கட்டிக் கொள்ள ஒரு மனையாவது இருக்கிறதே என்ற திருப்தி அவர்களுக்கு இருக்கிறது. இதை ஒருசாக்காக வைத்துக்கொண்டு மேலும் அவர்களுக்கு வீட்டுமனைகள் கொடுக்காமல் இருப்பதை நிறுத்திவிட்டு அதிகப்படியாக, எல்லோருக்கும் வீட்டு மனைகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக ஒரு யோசனையை

நான் கூற விரும்புகிறேன். ஒரு க்ராஷ் ப்ரோக்ராம் ஆரம்பித்து எல்லாக் காலனிகளுக்கும் சுடுகாட்டிற்கு பாதை அமைத்துக் கொடுத்து எல்லாக் காலனிகளும் சுகாதாரமான இடங்களில் அமைக்கப்பட வேண்டும். ஹரிஜனக் காலனிகளுக்கு சுடுகாட்டுப் பாதைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், எல்லாக் காலனிகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் குத்தகைக்கு உழுது பாடுபட்டுவரும் உழவர்களுக்கு அவர்கள் உழுதுவந்த நிலத்தை நில உடைமையாளர்களிடம் இருந்து விலைக்கு வாங்கி சொந்தமாக்கிக் கொள்ள உரிமை தரும் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு முடிவு செய்துள்ளது கண்டு உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக ஏழை விவசாயக் குத்தகைதாரர்களுக்கு தேவைப்படும் நிதி உதவி அளிக்க குத்தகைதாரர் நிதி உதவிக் கழகம் என்ற ஒரு கழகம் ஏற்படுத்தப்பட இருப்பது புரட்சிகரமான ஒரு திட்டமாகும். இந்தப் புரட்சிகரமான திட்டத்தின் பயனாக, பாடுபட்டு உழுது சாகுபடி செய்து கிடைப்பதில் 60 சதவிகிதத்தை முதலாளிக்குக் கொடுத்துவிட்டு 40 சதவிதத்தை வைத்து அனுபவித்து வந்த குத்தகைதாரர்களுக்கு இந்தச் சட்டத்தினால் அந்நிலம் அவர்களுக்கு சொந்தமாக்கப்பட்டு அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்படும் என்று நம்புகிறோம். அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறோம். இந்த ஆண்டும் தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும், பிற்படுத்தப்பட்டவர்களுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

1966—67-ல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 60 லட்சம், ஆனால் நம் அரசு ரூ. 6,56,00,000 ஒதுக்கியிருப்பது தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலும், பிற்படுத்தப்பட்ட மக்களிடத்திலும் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.

கடைசியாக என் தொகுதியில் உள்ள குறைகளைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். என் தொகுதியில் வந்தவாசியிலிருந்து சென்னைக்கு ஒரு நெடுஞ்சாலை செல்கிறது. அந்த நெடுஞ்சாலை, அச்சரப்பாக்கம் சாலை. அதில் கடைசிகுளம் என்ற ஊருக்கும் சாலவேடு என்ற ஊருக்கும் நடுவில் இரண்டு ஆறுகள் குறுக்கிடுகின்றன. அப்படி குறுக்கிடுவதன் காரணத்தால் அதிகமான வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலத்தில் ஒரு வார காலம் அல்லது அதற்கும் மேற்பட்ட நாட்களுக்கு போக்குவரத்து இல்லாமல் தடைபடுகிறது. படாளம் சர்க்கரை ஆலைக்கு லாரிகள் சாரி சாரியாக

அந்த வழிதான் செல்லவேண்டும். சென்னை-வந்தவாசி, வந்தவாசி-சென்னைக்கு பஸ்கள் நிறையச் செல்கின்றன. ஏற்கெனவே இந்தக் குறை எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆண்டு வந்த காலத்திலும் கூட எனக்கு முன்னால் இருந்த உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். நான் கூட முதன்முதலாக 1971-ம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னால் முதல் நிதிநிலை அறிக்கைமீது பேசும்போது இந்த கோரிக்கையை எழுப்பியிருக்கிறேன். இன்னும் கூட அமைச்சர் அவர்களோடு வாதாடிக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து அந்த இரு மேம்பாலங்களைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வந்தவாசிக்கு அருகாமையில் ஐந்து கண் வாராவதி என்ற மேம்பாலம் இருக்கிறது. அதன் வழி திண்டிவனம், போளூர் செல்லக்கூடிய நிலை இருக் கிறது. அந்த வாராவதி மிகவும் குறுகலாக இருப்பதால் ஒரு பஸ் செல்கிற நேரத்தில் அந்த வழியில் ஆள்கள் நடக்கவே முடியாது. அப்படிப்பட்ட ஒரு சிக்கலான இடமாக இருக்கிறது அது. எனவே அதை அகலப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வந்தவாசியில் ஒரு பெண்கள் கல்லூரி ஏற்படுத்தித் தர வேண்டும். செய்யாறில் ஆண்கள் கல்லூரி ஒன்று இருக்கிறது. செய்யாற்றில் எவ்வளவோ பல சௌகரியங்களைச் செய்துகொடுத்திருக்கிறார்கள். ஆனால் வந்தவாசிக்கு எந்தவிதமான சௌகரியமும் இல்லை. பல குறைபாடுகள் உள்ளன. வட ஆர்க்காடு மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதியாகும் வந்தவாசி. எனவே அங்கு ஒரு பெண்கள் கல்லூரி ஏற்படுத்தித் தரவேண்டும். இதற்குமுன்பு கூட ஒரு தடவை இதுபற்றி கேட்டிருக்கிறேன். அங்கு ஒரு தீ அணைப்பு நிலையத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டும். வந்தவாசியை ஒரு நகராட்சியாக மாற்றவேண்டும் என்ற கோரிக்கையையும் கோரி இந்த நிதிநிலை அறிக்கையை மனமார வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள தமிழக அரசின் 1973-74-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நாட்டிலே சோசலிசம் என்று பேசுவதுதான அரசியல் மாபு, அரசியல் நாகரீகம் என்பது முறையாக இருக்கிறது. ஒவ்வொரு அரசியல் வாதியும், ஒவ்வொரு அரசியல் கட்சியும் கையாண்டு வரும் பிரசாரமாகவும்

1973 மார்ச் 2]

இருக்கிறது. இப்படி எழுத்து மூலமாகவும் பிரசாரத்தின் மூலமாகவும் நாட்டிலே கொள்கைகளைப் பரப்பி வருகின்ற நேரத்தில், பேச்சிலே பேசிவருகின்ற நேரத்தில், நடைமுறையில் அதற்கு முரண்பாடான கொள்கைகளை, முரண்பாடான செயல்களைச் செய்வதுதான் அரசியலில் பெரும்பாலோர் கையாளும் சாகசம் என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். இன்று நமது கலைஞர் அவர்களின் தமிழக அரசு உண்மையான சோசலிசத்தின் உயிர் நாடிக் கொள்கைகள் என்னென்ன இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்து—பேச்சிலே பேசலாம்—செயலிலே, நடைமுறையிலே சட்டரீதியாக இன்றைக்கு ஒவ்வொன்றாக துணிந்து, அரசியல் எதிர்ப்புகளைத் துச்சமாக மதித்து, அரசியல் லாபத்திற்காக தங்களுடைய கொள்கைகளை, கோட்பாடுகளை காற்றிலே பறக்க விட்டுவிட்டு இன்றைக்கு அரசியல் வாதிகள் பேசிவருகின்ற நேரத்தில், இந்த அரசை சதிகளாலும், சூழ்ச்சிகளாலும் எப்படிக் கவிழ்க்கலாம் என்று சிந்தித்து வருகிற நேரத்தில், சட்ட அமைதி என்ற பெயரால் கொந்தளிப்புகளை உருவாக்கி அரசியல்வாதிகள் சதி செய்து கொண்டிருக்கிற நேரத்தில், நமது கலைஞர் அவர்கள் ஏழை எளியவர்களுக்காக நன்மை பயக்கின்ற வகையில் ஒரு உண்மையான சோசலிசச் சட்டத்தை, பல திட்டங்களின் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறார் என்பதை அறிகின்ற போது உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாங்க்ஸ் தேசியமயம் என்ற கொள்கையைப் பொறுத்தவரையில், நாட்டிலே திருமதி இந்திரா காந்தி அவர்களின் கட்சி பாங்குகளை தேசிய மயமாக்கியதற்காக உலகிலே உள்ள அத்தனைபேரும் பாராட்டினோம். அவர்கள் பல எதிர்ப்புகளைச் சந்திக்கவேண்டுமென்று இருந்தபோதிலும், எதிர்ப்பு சக்திகள் அத்தனையும் ஒன்று திரண்டு எதிர்த்தபோதிலும், தீவிரமாக, துணிச்சலாக அதைக் கொண்டு வந்தார்கள். அதற்காகப் பாராட்டினோம். ஆனால் அதே நேரத்தில், சோசலிசம் பேசும் அவர்கள், சோசலிசத்திற்காக நிற்கிறோம் என்று சொல்லக்கூடிய அவர்கள் கட்சிக்காரர்கள் கலைஞர் அவர்கள் பஸ் தேசியமயம் என்று அறிவித்தபோது, இந்திரா காந்தி அவர்களின் வலதுகரமாக இருக்கும், அவருடைய டிரஸ்டட் லெப்டினென்ட்டாக இருக்கும் கௌரவமிக்க அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், இன்று பஸ் முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு, முதலாளிகளின் சார்பாக மனு தயாரித்துக் கொண்டு, அதிலே கையெழுத்துப்போட்டு இந்திரா காந்தி அவர்களிடத்திலே கொண்டுபோய்க் கொடுத்து இருக்கிறார்கள், சோசலிசம் வாய் அளவில் பேசிவிட்டு, நடைமுறையில் சோசலிசத்திற்கு விரோதமான முதலாளித்துவ கொள்கையை முன்நின்று நடத்தவருகிறார்கள். இப்படிப்பட்ட

தலைமையைக்கொண்டு இந்திரா காங்கிரஸ் தமிழ்நாட்டில் இருப்பது வருந்தத் தக்கதாகும்.

திரு. எம். சுரேந்திரன் : உறுப்பினர் அவர்கள் கூறுகிறபோது, இந்திரா காங்கிரஸ்காரர்கள் பஸ் தேசியமயத்தை எதிர்த்தார்கள் என்று கூறினார்கள். யார் இந்திரா காந்தியிடத்தில் விண்ணப்பம் கொடுத்து இருக்கிறார்கள் என்று கூறவேண்டும். அது யார் என்ற விவரம் கொடுத்தால் நல்லது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): அவர் விவரமாகத் தான் சொன்னார். நீங்கள் திரும்பவும் அதை எதற்காகக் கேட்கிறீர்கள் ?

திரு. கே. கந்தசாமி: பத்திரிகையில் வந்திருக்கிறது. படித்துப் பார்த் தேன். தீர்த்தகிரி கவுண்டர் பெடிஷன் தயாரித்துக் கொடுத்திருக்கிறார். அவர் ஒரு கௌரவமிக்க உறுப்பினர். திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்காக தன்னுடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்து கொடுத்த வர். அவர் ஒரு முக்கியஸ்தர் அப்படிப்பட்டவர் இப்படிப்பட்ட கொள்கைக்கு முரண்பாடான, விரோதமான செயலில் ஈடுபட்டிருக்கிறார் என்று தான் சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தீர்த்தகிரி கவுண்டர் ஒரு பஸ் ஆபரேடர். பஸ் ஆபரேடர் என்ற முறையில் போய் இருப்பார். ஆகவே அதைப்பற்றிப் பேசுவது நல்லதல்ல.

திரு. ஏ. ஆர். பெருமாள்: திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களுக்காக தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்து கொடுத்தவர். அப்படிப்பட்ட முக்கியமானவர். இந்திரா காங்கிரஸ் கட்சியின் சோசலிசக் கொள்கையை நடைமுறைப்படுத்த ஒத்து ழைத்தவர். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர், சோசலிசக் கொள்கைக்கு முரணாகப் போய் இருக்கிறார்கள் என்பதைத்தான் திரு. கந்தசாமி அவர்கள் எடுத்துக்காட்டினார்கள்.

திரு. கே. கந்தசாமி: திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் ஒரு பஸ் ஆபரேடர் என்று சொன்னார்கள். பஸ் ஆப்ரேடராக இல்லாதவர்கள் தான் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சோசலிசம் பேசவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களா ? காந்தியார் அவர்கள் தான் ஏழைகளின் பிரதிநிதி என்பதைக் காட்டுவதற்காக வெள்ளைக்காரர்கள் அவரைப் பார்த்து 'ஹாப் நேகட் பகிர்' என்று சொல்லக்கூடிய வகையில்

தன்னை அரை ஆடை உடுத்திய மனிதனுக தன்னை மதுரையிலேதான் ஆக்கிக் கொண்டார்கள். அந்தக் கட்சியின் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும் இந்திரா காங்கிரஸ் இப்படி தங்கள் கொள்கைக்கும், நடைமுறைக்கும் மாறு பட்டு இருக்கலாமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இதை நான் குறிப்பிடு வதற்குக் காரணம் இப்படி கொள்கையிலே நம்பிக்கை இல்லாதவர்கள், சுய நலத்திற்காக அக்கரைக் கொண்டவர்கள் தான் இன்றைக்கு உண்மையிலேயே சோசலிசத்தைக் கொண்டுவரும் கலைஞர் அவர்களின் திட்டத்தை எதிர்க்கி ருர்கள். இந்த நாட்டிலே உள்ள பாட்டாளி மக்கள், ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் அத்தனைபேரும் மனதாரப் பாராட்டுகிருர்கள், பல்லாண்டு வாழ்த்தவேண்டுமென்று வாழ்த்துகிருர்கள்.

இங்கே இதை எதிர்த்தவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று பார்த்தால் இந்திரா காந்தி அவர்கள் பல முற்போக்குத் திட்டங்களை கொண்டுவர வேண்டு மென்று முனைந்தபோது அவர்களை அத்தனைபேரும் எதிர்த்தார்கள், பெருந்தலைவர்கள் கூட எதிர்த்தார்கள், அந்தக் கட்சியைச் சார்ந்த சிண்டிகேட் கட்சியினர் தான் இதையும் எதிர்க்கிருர்கள். அதைப் பற்றி நாம் கவலைப்பட வில்லை. காரணம் அவர்கள் சோசலிசம் பேசி வருகிறோம் என்ற போர்வையில் பேசிவருகிருர்கள், நடைமுறையில் வேறு கொள்கையை வைத்துக்கொண்டிருக் கிருர்கள். அவர்களை அதற்காகக் குறைகூறுவதற்கு இல்லை.

அடுத்தபடியாக, கலைஞர் அவர்கள் இந்த அறிக்கையில் 'லேண்ட் டு தி டில்லர்' என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள். சோசலிசம் பேசும் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் கூட தங்களுடைய கட்சி ஆண்டு கொண் டிருக்கின்ற மாநிலங்களில் கொண்டுவராமல் இருக்கிறபோது, மிகவும் உன்னத மான முறையில், மகோன்னதமான முறையில் இந்தத் திட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருப்பது உண்மையிலேயே பாராட்டுவதற்கு உரிய ஒன்ருகும். பொதுவுடைமையைப் பற்றிப் பேசுகிறவர்கள் தங்களுக்கு சோசலி சத்தில் நம்பிக்கை உண்டு என்று சொல்பவர்கள், ஹேவ்ஸ் அண்ட் ஹேவ் நாட்ஸ் இருக்கக்கூடாது என்று பேசுவார்கள், பொருளாதார சமத்துவ ஏற்றத் தாழ்வு மாற்றப்படவேண்டுமென்று கூறுகிறவர்கள் கூட இதை எதிர்க்கிருர்கள். ஏன் இப்படிச்செய்கிருர்கள் என்று நான் பல கோணங்களில் ஆராய்ந்து பார்த்தேன். காரணம் என்ன வென்று எனக்குப் புரியவில்லை. ஒரு காரணம் இருக்கலாம், நாம் தானே இதுவரையில் 'லேண்ட் டு தி டில்லர்' என்று சொல்லிக்கொண்டு வந்து, அந்த கோஷத்தை வைத்து நாட்டிலே பல விதமான சிக்கலை உண்டு பண்ணிக்கொண்டு வந்தோம், அதை வைத்து இனி நாம் ஒன்றும் செய்யமுடியாதே என்ற காரணத்தினுல், அந்த வயிற்று எரிச்சலின்

காரணமாகத்தான் அவர்கள் குறை கூறுகிறுர்கள் என்று நான் கருதுகிறேன். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையை, திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்களே என்பதற்காக நான் மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

சமுதாயத்தில் அடித்தட்டில் இருக்கும் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தைக் கொண்டு வந்ததற்கும் நான் மனப்பூர்வமாக என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயத்தைப் பொறுத்தவரையில் பசுமைப்புரட்சி, வெண்மைப்புரட்சி என்று கொண்டு வந்து நாட்டிலே பஞ்சத்தைப் போக்கி, உணவு உற்பத்தியை அதிகமாக்கியதற்காக பாராட்டுகிறேன். அதே நேரத்தில் விவசாயிகள் தாங்கள் வாங்கும் பொருள்களுக்கு அதிகமான விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறுர்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலை கொடுக்கவும், அவர்கள் வாங்குகிற பொருள்கள் நியாயவிலையில் கிடைப்பதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு அவர்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும் வகையில் வழிவகை செய்யவேண்டுமென்று கலைஞர் அரசை மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரையில், கைத்தறி நெசவாளர்களுக்காகப் பாடுபட்டுக்கொண்டு வரும் கலைஞர் அரசு கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் பொருள்களை மொத்தமாக வாங்கி அவர்களுக்கு வினியோகித்தால் அவர்கள் கஷ்டம் தீரும் என்று என்னுடைய கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத் தட்டு என்று போராட்டம், பல கோணங்களில் ஊழல், லஞ்சம், சட்டம் அமைதியின்மை என்பதற்கெல்லாம் போராட்டம் நடத்திக் கோஷங்கள் கிளப்புவது மார்க்கெட்டில் செல்லுபடியாகவில்லை என்ற நிலையைக் கண்டுகொண்டார்கள். இப்பொழுது மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டுவிட்டது இயற்கையின் காரணமாக. இது நமது மாநிலத்தில் மாத்திரம் அல்ல. ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலும், இந்தியாவிலேயே மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது என்ற விவாத்தை அதிகாரிகளும், மத்திய அரசின் அமைச்சர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். குறிப்பாக, டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் பேசுகிறபொழுது, கடந்த வாரத்தில் டெல்லியில் நடந்த ஒரு கூட்டத்தில் அவர் பேசுகிறபொழுது, இது மத்திய அரசின் குறைபாடுதான், 'பிளானிங் டிஃபெக்ட் இன் தி சென்டர்' என்று

சொல்லியிருக்கிறார்கள். முன்கூட்டியே முன்யோசனையோடு இந்த நாட்டிலே பற்றுக்குறை இந்தியா எங்கும் ஏற்படப் போகிறது, அதை எப்படித் தவிர்க்க வேண்டும், வேண்டிய அளவுக்கு இதை எப்படிப் பெருக்கவேண்டும் என்று நாஷனல் லெவலில் பிளானிங் செய்யவில்லை என்ற கருத்தை மத்திய அரசின் அமைச்சர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது இங்கு உள்ளவர்கள் பலர் அரசியல் காரணமாக மக்களிடத்திலே சென்று இங்கே இருக்கக்கூடிய கலைஞர் அரசு மக்களைக் கவனிக்கவில்லை, கம்பியைத் தான் நீட்டுகிறார்கள் என்று பேசியிருப்பது மிகவும் துர்பாக்கியமான பேச்சு. அரசியல் காரணமாக . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: கம்பி நீட்டுகிறார்கள் என்றால் கிராமங் களுக்கு மின்சாரம் கொண்டுபோவதற்குக் கம்பியை நீட்டித்தானே கொண்டு போகவேண்டும். அதிலே என்ன துர்ப்பாக்கியமான பேச்சு இருக்கிறது. மோடிவ் கற்பிப்பது சரியல்ல.

திரு. கே. கந்தசாமி: ஏதோ தெரியாமல் தவறு செய்தவர்கள் போவ தற்குத்தான் கம்பி நீட்டுவது என்று நடைமுறையில் அர்த்தம். அப்படிப்பட்ட ஒரு தீய கருத்தோடு சொல்லாமல் இருந்தால் நான் பாராட்டுகிறேன். அப்படி யில்லாமல் ஏதோ கம்பி நீட்டுகிறார்கள் என்று பிரசாரத்திற்காக யார் சொன்னாலும் சில கட்சித் தலைவர்கள் சொன்னாலும், அது ஜனநாயக மரபிற்கு முரண்பட்டதாக இருக்கும். அதனால் ஏற்படுகின்ற நன்மைகளை எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக இப்படிச் சொல்வது மிகவும் தவறு. இது தமிழக அரசின் தவறு அல்ல என்று டாக்டர் கே. எல். ராவ் அவர்களே மிகத் தெளி வாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசில் மிகப் பெரிய பொறுப்பில் இருப்பவர், இந்தியாவில் எதிர்காலத்தில் விஞ்ஞான அரசியல் ரீதியான திட்டங் களைத் தீட்டுவதற்கான பொறுப்பில் உள்ளவர். அவரே இதை ஒப்புக்கொண் டிருக்கிறார். அப்படியிருக்கும்பொழுது மாநில அரசின்மீது தவறு சொல்வது அரசியல் காழ்ப்பு உணர்ச்சியின் காரணமாகத்தான் என்ற விவரத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதன்மூலம் லட்சக்கணக்கான தொழிலாளர்களும், லட்சக்கணக்கான நடுத்தர வர்க்கத்தினரும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையாக இருந்தாலும்கூட, விவசாயத்தைப் பொறுத்த அளவுக்கு உணவு இருந்தால்தான் எதுவும் நடக்கும். ஆகவே, விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் 6 மணி நேரமாவது பகல் நேரத்தில் மின்சாரம் கொடுத்து உதவவேண்டும் என்ற கருத்தை விவசாயிகளின் சார்பாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம் நாட்டிலே எழுந்துள்ள ஆசிரியர்கள், என்.ஜி.ஓ.க்கள் போன்றவர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காகக் கலைஞர் அரசு கருணையோடு அவர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்திக்கொடுத்திருப்பதை நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சொல்கிறபொழுது விலைவாசி ஏற்றம் என்று சொல்கிறார்கள். விலைவாசி ஏற்றத்திற்குக் கலைஞர் அரசுதான் காரணம் என்று பல அரசியல்வாதிகள் பேசுகிறார்கள். அவர்களுக்கு முன்மாதிரியாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சமீபத்தில் தமிழகத்திற்கு வந்திருந்த மத்திய அரசின் அமைச்சர் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் பேசுகிறபொழுது நாட்டில் உள்ள வியாபாரிகள்தான் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, அவர் அதற்குக் காரணம் தமிழக அரசு அல்ல என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்.

பிற்பட்டவர்கள் சம்பந்தப்பட்டவரையில் கலைஞர் அரசு அவர்களுக்கென்று ஒரு தனி அமைச்சரை நியமித்து, அதற்காக ஒரு தனி இலாகாவை ஏற்படுத்திக் கோடிக்கணக்கான ரூபாய் செலவு பண்ணியிருக்கிறார்கள் என்று நான் பலமுறை இங்கே பாராட்டியிருக்கிறேன். அதே நிலையில் பிற்பட்டவர்கள் என்ற வகுப்புகளில் 200 இனத்தவர்கள் இருக்கிறார்கள்

'A very few minorities who are well organised are capable of exploitation of the majority community which is not organised at all'. என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே மைனாரிடியாக இருக்கக்கூடியவர்கள் தங்களுக்குள்ளே முன்னேற்றம் இல்லாத மெஜாரிடியாக உள்ள இனத்தவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பங்குகளையெல்லாம், பிற்பட்டவர்கள் என்ற பெயர் அளவில் இருந்துகொண்டு, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பங்குகளையெல்லாம் எடுத்துக்கொண்டுவிடுகிறார்கள். பலம் இழந்து, சக்தி இழந்து சமுதாயத்தில் மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளவர்கள், குறிப்பாக தேவர்மார்கள், முக்குலத்தோர் போன்றவர்கள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பங்கு கிடைக்கவில்லை. இருந்தாலும் கடந்த ஆட்சியில் இழைக்கப்பட்ட அநீதிகள் இன்று இல்லை. அவர்கள் இப்பொழுது கருணையோடு கவனிக்கப்பட்டு வருகிறார்கள் என்ற நிலையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் பாராட்ட மக்கள் தவறவில்லை. இருந்தாலும் டாக்டர், என்ஜினியர் போன்ற உத்தியோகத் துறைகளில் அவர்கள் 'அன்-ரெப்ரெசெண்டெட் அண்டு அண்டர்-ரெப்ரெசண்டேட்' என்ற நிலையில் இருக்கிறார்கள்

'There should be representation in the matter of appointments in proporation to the population'.

என்ற விவரத்தை பணிவோடு கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜனத்தொகை விகிதாசாரப்படி அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பங்குகள் உத்தியோகத் துறைகளில் கிடைக்கவில்லை, சலுகைகள் வழங்கப்படவில்லை. ஆகவே, அந்தச் சமுதாயத்தினருடைய இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கலைஞர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி மிகவும் பிற்பட்ட பகுதி.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): கடைசியில் தொகுதிக்கு வந்தால் எப்படி?

திரு. கே. கந்தசாமி: ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். என்னுடைய பகுதி ரோடு வசதிகள், ஆஸ்பத்திரி வசதிகள், தொழில் வசதிகள் இல்லாத பிற்பட்ட பகுதி என்பதைக் கலைஞர் அரசு நன்கு அறியும். அவர்கள் அந்தப் பகுதிக்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக பாப்பாப்பட்டி ஏரியாவில் 25 கிராமங்களில் மலைப் பிரதேசத்தில் ஆடுமாடுகளை மேய்ப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. எற்கனவே இதுபற்றி நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். 25 கிராமங்கள் 20,000 மக்கள் வாழக்கூடிய பகுதி. தொட்டப்பநாயக்கனூர் மலைப் பிரதேசத்தில் ஆடுமாடுகள் மேய்ப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நடைமுறையில் உண்மையில் சோஷலிஸத்தை உருவாக்கும் முறையில் அளிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை மனமார வரவேற்று, பாராட்டி, பேச அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம்.

திரு. சித. சிதம்பரம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கும் 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்புப் பெற்றமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றாடம் தேவைப்படுகின்ற பொருள்களின்மீதும், சாதாரண நடுத்தர மக்களின்மீதும் நிறைய மத்திய அரசினால் வரிகள் விதிக்கப்பட்டு, அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், சாதாரண மக்களை, பிற்பட்ட மக்களைக் கவனத்தில்கொண்டு, அவர்களுக்கு நல்ல முறையில் திட்டங்களை ஆக்கித்தர வேண்டும் என்று முயற்சிகளை எடுத்துக்கொண்டு, அதற்காகத் தாழ்த்தப்பட்ட

மக்களுக்கு வீட்டு வசதி, கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி கிடைக்கக் கூடிய அளவுக்குத் திட்டங்களை அமைத்து, இந்த வரவு செலவுத் திட்டத்தை அமைத்திருப்பதற்காக நான் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இந்தத் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு மிக அதிக கவனத்தை நமது அரசு செலுத்தியிருக்கிறது. கடந்த ஆண்டிலும் அதிகக் கவனம் செலுத்தி, மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது என்பதிலும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த அளவுக்கு நாம் இந்த ஆண்டில் அதிக மாக வேளாண்மைத் துறையில் கவனம் செலுத்தியதன் காரணமாக நிறைய உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். அந்த வகையில் நம்முடைய மக்கள் விவசாயத் துறையில் அதிக கவனம் செலுத்தியிருக்கிற காரணத்தினால், உரத்தட்டுப்பாடு ஏற்பட்டதை நாம் நன்றாக அறிவோம். அதை நம்முடைய கலைஞர் அவர்கள் கவனத்தில்கொண்டு, உரத்தட்டுப்பாட்டை நீக்கி மிக விரைவிலே கிடைப்பதற்கு ஆக்க வேலைகளை இந்த பட்ஜெட்டில் தெரிவித்திருக் கிறார்கள். மத்திய அரசின்மூலம் விரைவிலே உரத்தை அதிகமாகப் பெறுவோம் என்ற நம்பிக்கையையும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். குறிப் பாக, முகவை மாவட்டத்தில் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட உரத்திற்கும், இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட உரத்திற்கும் அதிகமான அளவுக்குக் கூடுதலாக உரத்தை நம்முடைய அரசு வழங்கியிருக்கிறது. ஆனால், தேவையின் அடிப் படையில் உரம் இன்னும் அதிகமாகத் தேவைப்படுவதால் இந்தத் திட்டங்களை நமது அரசு கவனத்தில்கொண்டு விவசாயப் பெருங்குடி மக்களின் உற்சாகத்தை வளர்க்கும் முறையிலே உரத்தட்டுப்பாட்டை நீக்கித் தர வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மக்கள் நல்வாழ்வுத் துறையிலே மருத்துவப் பணிகளிலே நம்முடைய அரசு இன்றையதினம் மிகப் பொறுப்பான காரியங்களைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது என்பதை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக 61 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை 1972-73, 1973-74 ஆகிய இரண்டு ஆண்டு களில் மாநில அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருப்பதாக அறிக்கை தந்திருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது. அந்த வகையில் என்னுடைய தொகுதியில் கல்லல் ஒன்றியத்தில் நாச்சியாபுரம், ஆத்தங்குடி, கல்லல் ஆகிய இடங்களில் மருந்தகங்கள் ஊராட்சி ஒன்றியத்தினால் நடத்தப் படுகின்றன. சாக்கோட்டை ஒன்றியத்தில் ஒ. சிறுவயல் என்ற இடத்தில் ஊராட்சி ஒன்றிய மருந்தகம் இருக்கிறது. 61 ஊராட்சி ஒன்றிய மருந்தகங் களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்பொழுது, இந்த மருந்தகங்களையும்

கவனத்தில் வைத்து, இவைகளையும் அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, சோமனுதபுரத்தில், டி. பி. சானடோரியம் ஒன்று இருக் 12-
கிறது. அங்கே காசநோய் உள்ளவர்கள் அதிகமாக வருகிருர்கள். அவர் பி
களுக்குச் சிகிச்சை பெறுவதற்குப் போதுமான வசதிகள் குறிப்பாக படுக்கை வசதிகள் இல்லை. நான் இதைப்பற்றி சென்ற ஆண்டே மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்மீது பேசும்போது தெரிவித்திருக்கிறேன். நம்முடைய அரசாங்கம் இந்த ஆண்டாவது அதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு, அங்கே படுக்கை வசதிகளை அதிகப்படுத்தி, படுக்கைகளின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொடுக்கவேண்டுமென்று மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்விக்காக நம்முடைய அரசாங்கம் அதிகமான நிதியை ஒதுக்கி இருப்பதோடு, கல்வியின் தரத்தையும் உயர்த்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருப்பதற்காக நான் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் நகராட்சிகளுக்குக் கல்விக்காகக் கொடுக்கப்படும் மானியம் உடனடியாகக் கொடுக்கப்படுவதில்லை என்ற என்னுடைய வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சரவர்களும் இணைந்து நின்று பரிசீலித்து, நகராட்சிகளுக்குக் கொடுக்கவேண்டிய மானியத்தை உடனடியாக வழங்குவதற்கான ஆக்கவேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், நகராட்சிகள் இந்தக் கல்வி மானியத்தை வைத்துத்தான் நலப்பணிகளை நிறைவேற்றும் பட்ஜெட்டைத் தயாரிக்கின்றன. கல்விமானியம் உரிய காலத்தில் கிடைக்காததால் அவை பற்ருக்குறை பட்ஜெட்டைத் தயாரிக்கும் நிலை ஏற்படுகின்றது. எனவே உரிய காலத்தில் கல்வி மானியத்தைக் கொடுத்து, பற்ருக்குறை பட்ஜெட்டைப் போக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகள் நடத்துகின்ற உயர்நிலைப் பள்ளிகளை நம்முடைய அரசு படிப்படியாக ஏற்று நடத்துவது என்ற அடிப்படையில் சென்ற ஆண்டு 10 பள்ளிகளையும், இந்த ஆண்டு 10 பள்ளிகளையும் ஆக 20 பள்ளிகளை எடுத்துக் கொள்வதற்கு ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் காரைக்குடி நகராட்சி உயர்நிலைப் பள்ளியையும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அந்த நகராட்சி நிதிப்பற்ருக்குறையில் இருந்துகொண்டிருக்கிறது. 1972-73, 1973-74 ஆகிய ஆண்டுகளில் நான்கு லட்சம் ரூபாய் பற்ருக்குறை இருக்கிறது. அதனால் பள்ளியை நிர்வகிப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. எனவே, அந்த நகராட்சிப் பள்ளியை அரசாங்கமே ஏற்று

நடத்தி, அதன் நிதிப்பற்றுக்குறை நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நகராட்சிகளுக்கு வழங்கப்படும் கல்வி மானியத்தை உரிய காலத்தில் அளிக்க வேண்டும்; நகராட்சி உயர்நிலைப் பள்ளியை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற என்னுடைய இந்த இரு கோரிக்கைகளையும் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பட்ஜெட்டில் கைத்தறி நெசவாளர்களையும் கவனத்தில் கொண்டு, அவர்கள் வாழ்வுக்காகப் பாடுபட வேண்டுமென்ற முறையிலே இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களுக்கு 'நூல் விலை நிர்ணயம் செய்தல், கார்டுகள் மூலமாக நூல் வழங்கல்' ஆகிய திட்டங்களை மேற்கொண்டிருப்பது குறித்து நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். எல்லா இடங்களுக்கும் இன்னும் அதிக அளவில் இந்தத் திட்டங்களை விரிவுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய அரசாங்கம் தொடக்கச் சங்கங்களிடம் கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து, அவர்களுக்கு நல்ல முறையில் உதவி செய்துகொண்டிருக்கிறது. அதைப்போல வசதி படைத்தவர்களிடம் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்யாவிட்டாலும், வசதியற்றவர்களிடத்திலே தேங்கிக் கிடக்கும் துணிகளையாவது ஜவுளி கார்ப்பரேஷன்' மூலம் எடுத்துக்கொள்ளும் திட்டத்தை இந்த அரசாங்கம் பரிசிலனை செய்ய வேண்டும். அதன்மூலம் சாதாரண நெசவாளர்களுக்கு நாம் நன்மைகள் செய்தவர்கள் ஆவோம். எனவே, அரசாங்கம் இந்தத் திட்டத்தைப் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற முன்னேற்றத்திற்கான அடிப்படையில் 1,500 பேர்கள் உள்ள கிராமத்திற்கு இணைப்புச் சாலைகள் போட்டு, சாலை வசதிகளை ஏற்படுத்தும் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது நம்முடைய அரசு. அதிலே என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரு ஊரை எடுத்து, வேலை செய்து வருகிற காட்சியைப் பார்த்து நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். சாலை வசதி செய்வதற்கு 1,500 பேர்கள் உள்ள கிராமத்தை எடுத்துக்கொள்வது என்ற முறை இருப்பதால், இந்தத் திட்டத்தினால் ஒருசில கிராமங்கள்தான் பயன்பெற முடியும். 1,500 என்பதை 1,000 அல்லது 1,200 என்ற அளவுக்குக் குறைத்தால் இன்னும் பல கிராமங்கள் பயன்பெற முடியும். அப்படிப்பட்ட பல கிராமங்கள் இன்றைக்கு சாலை வசதி இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கின்றன. அதைப் போக்குகின்ற வகையில் சிறப்புத் திட்டங்களை வகுத்து, பொதுப் பணித் துறை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் புதுவயலை ஒட்டிய 10-க்கு மேற்பட்ட ஊர்கள் சாலை வசதியே பெறுமல், போக்குவரத்திற்குப் பெரும் இடைஞ்சல் ஏற்பட்டு, அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்ற காட்சியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவைகளில் கல்லல், ஊத்தனூர், சேகரநாதபட்டனம், பிளார், அலைத்திடல், பொய்யனூர் போன்ற 7, 8 ஊர்கள் எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கின்றன. அவைகளைக் கவனத்தில் கொண்டு, இந்தக் கிராமப்புற சிறப்புத் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டு வீட்டுவசதிக் கழகம் உருவாக்கப்படுவதுபோல் பிற்படுத்தப் பட்டோருக்கும் அத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டும். முத்துராஜாக்கள் என்று சொல்லப்படும் வலையர்குடிப் பெருமக்களுக்கும் அத்திட்டத்தின் நன்மைகள் கிடைத்திட வேண்டும். கல்வி, மருத்துவ வசதி பெறுவதற்கு சிறப்புத் திட்டங்கள் இருப்பதுபோல வீட்டுவசதி பெறுவதற்கும் சிறப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும். பிற்பட்டோர் வீட்டுவசதிக் கழகம் ஏற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் புதிய மாவட்டமாக நம்முடைய அரசாங்கம் உருவாக்கியிருக்கிறது. அது என்னுடைய தொகுதிக்கு அருகாமையில் இருக்கின்ற மாவட்டம். அந்த மாவட்ட மக்களின் நீண்ட நெடுநாளைய கோரிக்கையை இப்போது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றி இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் புதுக்கோட்டை தனி மாவட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்று கோரினார்கள். ஆனால் அவர்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இன்றைக்குத் தமிழக அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறது. அதற்காக நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போன்று இராமநாதபுரம் மாவட்டத்தையும் சீரமைத்து, ஒரு சிறப்புத் திட்டத்தையாவது தீட்டி, அங்கேயே அதன் தலைநகரை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

காரைக்குடி நகராட்சிக்குச் சொந்தக் கட்டடம் இல்லை. எனவே, அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதி உதவி தரவேண்டுமென்று கேட்டு, நல்ல பல திட்டங்களைத் தீட்டி, ஏழை எளிய மக்கள் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்கின்ற வகையிலே வந்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, இதிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றிதெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். முகமது கோதர் முகைதீன்: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது இந்த நாட்டிலே இருக்கின்ற மக்கள் வளம் பெற, சமதர்ம சமுதாயத்தை நிர்வகிக்கின்ற ஒரு அடிப்படையான திட்டத்தைக் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளலாம். இந்த நாட்டிலே வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் நலன் கருதி, அந்த மக்களுடைய முன்னேற்றத்திற்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்ற இந்த அரசினுடைய நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்கின்ற நிலையிலே இந்த நிதிநிலை அறிக்கை யானது அமைந்திருக்கிறது. வரியே இல்லாத நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தக் கொள்கையை வலியுறுத்திச் சொல்லிவந்ததோ, அந்தக் கொள்கையை நிறைவேற்றி வருகிறது. ஏழை எளிய மக்கள், குடிசையில் வாழ்கின்ற மக்கள், பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிற மக்கள், நெசவாளர்கள், உழவர் பெருமக்கள் ஆகியோர் மேம்பாடு அடைய வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கிற இந்த அரசு அந்த மக்களின் முன்னேற்றத்திற்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறது. அப்படித் திட்டம்போட்டு செயல் பட்டுக் கொண்டிருக்கிற இந்த அரசினுடைய நிதி நிலை அறிக்கையைப் பார்க் கின்ற மத்திய அரசானது—தி.மு. கழக அரசானது இந்த நாட்டு மக்களுக்கு ஒரு பிடிப்புணர்ச்சியை ஏற்படுத்திவிடுமோ என்கின்ற பயத்தின் காரண மாகவோ என்னவோ—ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திற்கான திட்ட உதவி நிதியைக் குறைத்தே கொடுத்துவருகிறார்கள். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திட்ட உதவி நிதி 10.8 சத விகிதம் என்ற நிலையிலே, இந்த ஆண்டு தொழில் வளர்ச்சி ஏற்பட்டு ஏழை மக்களின் நிலையை உயர்த்தப் பல திட்டங்களைத் தீட்டி இருக்கின்ற நேரத் திலே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற திட்ட உதவி நிதியானது 4.7 சதவிகிதமாக இருக்கிறது. இப்படி இது குறைந்திருப்பதைப் பார்க்கும்பொழுது உள்ளபடியே தமிழக அரசின் பல திட்டங்கள் தடைபடவேண்டும் என்ற அடிப்படையிலேதான் திட்ட உதவி நிதி குறைக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்து வேதனைப்படுகிறோம். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் உணவுப் பற்றுக்குறை இருந்த நேரத்தில், இங்கே

அந்தப் பற்றுக்குறையைப் போக்கியதோடு மட்டுமல்லாமல் அண்டை மாநிலத்திலே இருப்பவர்களுக்கும் உணவுப் பொருட்களைக் கொடுக்கும் நிலைமையினை ஏற்படுத்தி இருக்கிறோம்.

இதற்கு என்ன காரணம் என்றால், இங்கே பசுமை புரட்சித் திட்டத்தை செயல்படுத்தி, பல புதிய விதைகளைக் கண்டுபிடித்து, புதிய முறைகளிலே சாகுபடித் திட்டங்களை ஏற்படுத்தி அதன்மூலம் நாட்டு மக்களுக்கு உணவை வழங்குகிற வகையிலே பல நல்ல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றியது தான் காரணம். ஆக இந்தத் திட்டங்களுக்கு அடிப்படையிலே வேளாண்மைக்கு மிக அவசியமாகத் தேவைப்படுவது ஒன்று தண்ணீர், இரண்டாவது உரம். இந்த உரத்தைக் கொடுக்கின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற மத்திய அரசானது சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நம்முடைய வேளாண்மைக்குத் தேவையான உரத்தை அதிகமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையிலே 1972-73-ம் ஆண்டிற்குத் தேவைப்படுகிற உரமானது 2.74 இலட்சம் டன் என்று கூறப்பட்டிருக்கின்ற நேரத்திலே நமக்கு அவர்கள் வழங்கி இருக்கின்ற உரமானது 1,30 இட்சம் டன்கள்தான் இந்த நிலையைப் பார்க்கும் பொழுது, தமிழகத்திலே வேளாண்மை பெருகி வரும் இந்த நேரத்திலே கொடுக்கப்படுகின்ற குறைவான இந்த உரம் நம்முடைய வேளாண்மையைப் பாதிக்கக்கூடிய வகையிலே இருக்கிறது. ஆகவே, நம்முடைய தேவையை வலியுறுத்தி, 2.74 இலட்சம் டன் உரத்தைப் பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், இன்றைய தினம் இங்கே பேசிய பல உறுப்பினர்கள் மின் பற்றுக்குறையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த மின்சார பற்றுக்குறை காரணமாக வேளாண்மையும், மற்றத் தொழில்துறைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன இதை எல்லாத் தரப்பினரும் ஒத்துக்கொள்வார்கள். மின்சாரத் தட்டுப்பாட்டால் இங்கே தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருப்பதைத் தமிழக அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லத் தவறவில்லை என்பதற்கான விளக்கங்களை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். எனக்கு முன்பாக பேசிய திரு. காசிராமன் அவர்கள்கூட பேசும் பொழுது, தமிழகத்திலே மின்சார பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதன் மீது இந்த அரசு என்ன நடவடிக்கைகளை மத்திய அரசை எடுக்கச் சொல்லியிருக்கிறது என்று கேட்டார்கள். ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையைத் தெளிவாகப் படித்துப் பார்ப்பார்களேயானால் அதிலே அவர்கள் மிகத் தெளிவாகவும், விளக்க

மாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதிலே சொல்கிறார்கள், தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, 1983-84-ல் தமிழ் நாட்டில் மின்சாரம் 3,000 மெகாவாட் அளவுக்குப் பற்றாக்குறை இருக்கக்கூடும் என்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆகவே, இந்த மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கின்ற வகையிலே நெய்வேலியிலே இரண்டாவது சுரங்க வெட்டு ஏற்படுத்தவேண்டும் என்றும், கல்பாக்கம் அணு மின் நிலையம் விரிவாக்கப்பட வேண்டுமென்றும், தூத்துக்குடியில் அணு மின் நிலையம் போன்றவை செயல்பட மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் காரியங்களை மத்திய அரசானது உடனடியாகச் செய்திருக்குமானால், இன்றைய தினம் தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்த மட்டில், மின்சார பற்றாக்குறைக்கு மத்திய அரசுதான் பொறுப் பேற்க வேண்டும். அதனுடைய கவனக் குறைவின் காரணமாகத்தான் இங்கே மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இங்கிருக்கும் மக்களின் நன்மையைக் கருதியாவது மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழகத்திலே கல்வியிலே அதிக முன்னேற்றம் செய்ய வேண்டுமென்பதற்காகக் கல்வித் திட்டத்திலே பல புதிய மாற்றங்களை ஏற்படுத்தியதோடு மட்டுமில்லாமல் 1972-73-ம் ஆண்டு 176 பள்ளிகளை ஏற்படுத்தி இருக்கின்ற நிலையைப் பார்க்கும்பொழுது உள்ளபடியே தமிழக அரசை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

மேலும், தனியார் பள்ளிகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கும் அரசாங்கப் பள்ளிகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களைப்போல் ஊதியங்களும், ஓய்வூதியங்களும் ஒரே அடிப்படையிலே கொடுக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு இன்றையதினம் வலியுறுத்தி வருவதை ஆசிரியர்களும் மற்றவர்களும் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மேலும், நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையிலே வேலையற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்திலே

15 கோடியிலே ஒரு திட்டம் திட்டப்பட்டிருக்கிறது. அதன்மூலம் வேலை யற்றோர்கள் வேலைபெறும் நல்ல வாய்ப்பு ஏற்படும். எனவே, அதை உடனடி யாகச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய மாவட்டமான நெல்லை மாவட்டத்திலே தூத்துக் குடியிலே ஒரு அணு மின் நிலையமும், அதனை அடுத்து ஒரு அனல் மின் நிலையமும், அதனை அடுத்து ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் ஏற்படுத்து வதற்காக இந்த நிதி நிலை அறிக்கையிலே வகைசெய்யப்பட்டிருக்கிறது. அதனை உள்ளபடியே நானும், நெல்லை மாவட்டத்திலே இருக்கிற மக்கள் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும், என்னுடைய தொகுதியான மேலப்பாளையம் பகுதியிலே இந்த ஆண்டுவரை எந்தவிதமான திட்டங்களும் நடைபெறவில்லை. அங்கிருக்கும் ஏழை நெசவாளர்கள் விவசாயிகளின் குறைகளைப் போக்க, பல திட்டங்களை இந்த மாமன்றத்திலே நான் எடுத்துக் கூறியும், அவை எல்லாம் நிறைவேற்றப் படாமல் இருப்பதைக்கண்டு நான் உள்ளபடியே வருத்தம் அடைகிறேன். என்னுடைய தொகுதியான மேலப்பாளையத்திலே நெசவாளர்கள் மிகுதியாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்காததால், அவர்கள் எல்லாம் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளார்கள். அந்த நிலையை மாற்றுவதற்கும், அவர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைப்பதற்கும் ஒரு வழி வகை இந்த அரசு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

மற்றும், என்னுடைய தொகுதியிலே இருக்கும் நாங்குநேரிக்கு அருகில் களக்காட்டு மலை என்ற ஒன்றிருக்கிறது. அதிலே பச்சை ஆற்றுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தின் அடிப்படையிலே ஒரு நீர்த் தேக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த மன்றத்திலே பல தடவை எடுத்துச் சொல்லி யிருக்கிறேன் இதற்கு முன்னால் நாங்குநேரி எம்.எல்.ஏ கணபதி அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஒரு முறை இதிலே எங்களுடைய கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு வேண்டிய அனுமதி கோரி தாக்கீது மத்திய அரசிற்குச் சென்றிருக்கிறது அது வெகு விரைவிலே வந்துவிடும் என்றார்கள். அதைக் கூறி இப்பொழுது ஒரு ஆண்டிற்கு மேல் ஆகிறது. அந்தத் திட்டத் திற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுகின்ற வகையிலே இந்த அரசு காரியங் களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தமட்டில், நெல்லை மாவட்டத்திலே இருக்கிற மக்கள் தொகையை அனுசரித்து, அங்கே 147 படுக்கைகள்கொண்ட ஒரு மருத்துவப் பிரிவை ஏற்படுத்தித் தந்தமைக்காக நான் இந்த அரசிற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நாங்குநேரியிலே தற்பொழுது இருக்கும் அரசினர் மருத்துவ மனையானது விரிவுபடுத்தப்படுவதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருக்கின்றன. இதற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மருத்துவமனையானது நாங்குனேரி பஞ்சாயத்துப் பகுதியிலே உருவாகும் நிலைமையினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், என்னுடைய தொகுதியான மேலப்பாளையத்திலே குடி நீர்ப் பிரச்சினை பெரிய தொரு பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அங்கிருக்கும் மக்கள் கஷ்டமான ஒரு நிலையிலே இருக்கிறார்கள்.

நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் எங்கள் மாவட்டத்தில் ஒரு கருத்தரங்கில் கலந்துகொண்டார்கள். அப்போது அவர்களிடத்தில் எங்கள் பகுதியின் சில குறைபாடுகளைச் சொன்னேன். குறிப்பாக மேலப் பாளையத்திற்கு வடிகால் வசதி ஏற்படுத்தித்தரவேண்டும் என்று சொன்னேன். பொதுவாக எங்கள் மாவட்டத்தில் எங்காவது தொத்துநோய் உண்டாகிறது என்றால் அது மேலப்பாளையமாகத்தான் இருக்கும். காரணம் அங்கே சாக்கடை நீர் எல்லாம் தெருவிலேதான் போய்க்கொண்டிருக்கிறது. குடிநீருக்கு முதலிடம் கொடுப்பதுபோலவே அங்கே உண்டாகிற தொத்து நோயைத் தடுப்பதற்கு வடிகால் வசதிகள் உடனடியாக செய்துதரப்பட வேண்டும் என்பதாக இந்த நேரத்திலும் நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். அவர்கள் ஏற்கனவே வேண்டிய முயற்சிகளைச் செய்வதாகக் கூறி யிருக்கிறார்கள். அதைக் கவனித்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்தாற்போல ஆறுகளில் இருந்து நகர் மன்றங்களுக்குக் குடிநீர் கொண்டு போகும்போது இடையில் உள்ள கிராமங்களை விட்டுவிடுகிறார்கள். குறிப்பாக என்னுடைய பகுதியில் நாங்குநேரிக்குத் தண்ணீர் கொண்டுசெல்கிறார்கள். இடையில் உள்ள மருகால் குறிச்சிக்குத் தண்ணீர் கொடுக்காது விட்டுவிட்டார் கள். அதுபோலவே பாளையங்கோட்டைக்குத் தண்ணீர் கொண்டுபோகும் போது கோட்டூருக்குத் தண்ணீர் கொடுக்காது விட்டுவிட்டார்கள். இது போன்ற கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்க ஆவன செய்வதாகக் குடிநீர் வாரியத் தலைவர் அங்கே குறிப்பிட்டார்கள். அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1973 மார்ச் 2] [திரு. எல். முகமது கோதர் முகைதீன்]

அடுத்தாற்போல நீண்டநாளாக நாங்கள் உருது பேசும் இஸ்லாமிய சமுதாயத்தினர்களையும் பிற்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோரிவருகிறோம். தமது நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றி முதல்வர் அவர்கள் குறிப்பிடாவிட்டாலும், விவாதத்திற்குப் பதிலளிக்கிறபோதாவது இந்த ஒரு நல்ல அறிவிப்பை முதல்வர் அவர்கள் வெளியிடுவார்கள் என்று நம்புகிறோம். மிகவும் பிற்பட்ட நிலைமையில் இருக்கும் இஸ்லாமிய மக்களை இதுபோல மொழி அடிப்படையில் பிரித்து வைத்திருப்பது சரியல்ல. ஒன்று பட்டிருக்கின்ற மக்களைப் பிரித்துக் காட்டுவதுபோல் ஆகிறது. ஆகவே உருது பேசும் இஸ்லாமிய மக்களையும் பிற்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கும் அறிவிப்பைத் தம் பதிலில் முதல்வர் அவர்கள் வெளியிடுவார்கள் என்று நம்பி, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. செ. கோ. விசுவநாதன்:** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் நடைபெறுகிற அரசானது மக்களுடைய நலம் பேணுகின்ற ஒரு வெல்பேர் அரசாக இயங்கிக்கொண்டிருப்பதை இந்த நிதிநிலை அறிக்கை நமக்குக் காட்டுகிறது. குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில் பலதரப்பட்ட மக்களுக்கும் பல்வேறு சலுகைகளை இந்த அரசு அளித்திருப்பது வரவேற்கக்கூடிய விஷயமாகும். முதன்முறையாக பேறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஆரம்பித்துவைத்த பசுமைப் புரட்சியை இந்த அரசு நல்ல முறையில் செயல் படுத்திவருகிறது. அதன்காரணமாக 1972-73-ம் ஆண்டில் உணவு உற்பத்தி 72 லட்சம் டன்னைப் பெருகியிருக்கிறது. எந்த அளவுக்கு விவசாயத்தை வளப்படுத்தி, உற்பத்தியைப்பெருக்க இந்த அரசு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது என்பதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். நமக்குப் பாசனத்தின்மூலம் வரக்கூடிய வருவாய் 3 கோடிதான். ஆனால் பொதுப் பணித்துறைமூலமாக கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு நாம் பாசன வசதிகளை அங்கங்கே பெருக்கிக்கொண்டு வந்திருக்கிறோம். அதுவும் வேளாண்மைக்காகப் பதினைந்து கோடியே சொச்சம், புதுபாசனத் திட்டங்களுக்காக 12 கோடியே சொச்சம் ஆக 55 கோடிவரைக்கும் நாம் பாசன வசதிக்காகச் செலவிட்டுவருகிறோம். இதேநேரத்தில் கூட்டுறவு வங்கி களின் மூலமாக நூறு கோடி ரூபாய்களை விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் என்பதாக விவசாயத்தைப் பெருக்க நாம் உதவி செய்து வருகிறோம். எதிர்க் கட்சியினர் இதற்காகவெல்லாம் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அதற்கு அடுத்து கல்வி வளர்ச்சியை எடுத்துக்கொண்டால் இந்த அரசு செய்துவருகிற பற்பல காரியங்களும் மக்களுடைய பாராட்டைப் பெறத்தக்க தாகும். பல அரசியல் போராட்டங்களின் காரணமாக பாதிக்கப்பட்டாலும் கிராம ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பள்ளிக்கூடங்களின் தரத்தை உயர்த்த வேலையில்லாத பட்டதாரி ஆசிரியர்களுக்கு உதவி அளிக்க என்பதாக இன்றைய தினம் செயல்படுகிற திட்டத்தின் மூலம் 4 கோடி ரூபாய் ஒன்றியங் கள் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. 1966-67-இல் 46 கோடி சொச்சம் கல்விக்காக செலவிட்டோம் என்றால் இன்றையதினம் 108.5 கோடிக்குமேல் செலவு செய்கிறோம். இது நம்முடைய வருவாயில் 24 சதவிகிதம் ஆகும்.

பி.ப. 1-00 இதுபோல கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதிலும் வெற்றி நடை போட்டோம். இணைப்புச்சாலைகள் அமைப்பதிலும் வெற்றிநடை போட்டு முன்னேறியிருக்கிறோம். இன்றைக்கு கிராமப்புறத்தில் உள்ள மக்களும் வேலை வாய்ப்புப் பெறுகிற திட்டத்தினைக் கொடுத்திருக்கிறோம். ரூரல் மேன் பவர் பயன்படுத்தப்படவேண்டும் என்பதற்காக நாம் ஒதுக்கியிருக்கிற 3 கோடி ரூபாய்—கிராமப்புற விவசாய மக்களுக்கு ஓரளவு விவசாயம் இல்லாத நாட் களில் வேலைவாய்ப்புப்பெற உதவியாக இருக்கும்.

வேறு ஒரு திட்டத்தையும் அரசு கொண்டு வந்திருக்கிறது. கிராமப்புற சாலை அமைப்பு திட்டம் என்று வேறு தலைப்பிலே ஏறக்குறைய ரூ. 3 கோடி ஒதுக்கி அதையும் அரசு செயல்படுத்துவதன் காரணமாக, விவசாயம் போக மீதி நேரங்களில் ரூரல் மேன் பவர் என்ற திட்டம் மூலமாகவும், சாலை அமைப்பு திட்டம் மூலமாகவும் இன்றையதினம் ஏறக்குறைய ரூ. 6 கோடி செலவு செய்வதன் காரணமாக, கிராமப் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது என்பதை நாம் அறிகிறோம்.

அடுத்து, படித்து பட்டம் பெற்றவர்கள் எல்லாம் வேலை இல்லாமல் இருக்கிற இக்காலத்தில் சிரணி திட்டம் இருந்தாலும், இளைஞரணி திட்டத்தின் அடிப் படையில் அங்கு வந்திருக்கிற மாணவர்களை நேரடியாக சந்திக்கிற நேரத்தில் அவர்கள், ஏறக்குறைய ரூ. 150 சம்பளம் பெற்றால்கூடத் திருப்தியாக இருக்கிறது என்று பொதுச் சேவை செய்கிறார்கள். கிராம மக்களுடன் அவர் களுடைய சூழ்நிலையில் இருந்து, அவர்களுடைய பிரச்சினைகளை ஊராட்சி களுக்கு எடுத்துச் சொல்லி, எந்த எந்த பிரச்சினைகளை நாங்கள் தீர்க்க வேண்டுமென்று கேட்டு, நேரடியாக கிராம மக்களுடன் தொடர்பு கொண்டு இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவைகள் மூலம் கிராமங்கள் முன்னேறிக் கொண்டிருப்பதை யாரும் மறுக்கமுடியாது.

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

நான் முன்னமேயே சொன்னது மாதிரி, கொடுத்த வாக்குறுதிகளான மின்சார வசதி, இணைப்பு சாலைகள், இவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிராமப் புற வேலை வாய்ப்பு, சாலை அமைப்பு திட்டம், இன்னும் இன்னொரு மூலமாக மேலும் ஒரு நல்ல திட்டம், இப்படி நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலேயிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

ஆயிரத்து ஐனூறுக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியிலே இணைப்பு சாலை போடுவதற்கு ரூ. 5 கோடிக்கு ஒரு திட்டத்தையும் இந்த ஆண்டு மேலும் ரூ. 3 கோடிக்கு ஒரு திட்டத்தையும் அமைத்திருக்கிறார்கள். கிராமப் பொருளாதாரம் வளர்ச்சி அடையவேண்டும், அங்கு விளைகின்ற உணவுப் பொருள்கள் எல்லாம் தங்குதடையின்றி நகர்ப்புறங்களுக்கு வரவேண்டுமென்று நீண்ட நெடு நாட்களாக இருந்த கோரிக்கையை இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு முன்னேற்றத் திட்டமாக எடுத்துச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்காக ரூ. 13 கோடியளவில் திட்டம் போட்டிருக்கிறார்கள். சாலைகளைப் போட்டாலும், சாலைகளைப் பராமரிக்க ஊராட்சிமன்றங்களிடத்திலே வசதியில்லை. போடுவதோடு நாம் திட்டமிட்ட வேலைகள் முடிந்து விடுகின்றன. ஆனால், அவர்களால் பராமரிக்க முடியவில்லை.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், நம்முடைய வளர்ச்சியின் காரணமாக அதிகமான உயர்நிலைப்பள்ளிகள், மருத்துவ மனைகள், கல்லூரிகள் இவைகளுடன் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் இவைகளையெல்லாம் பொதுப் பணித்துறை மூலம் ஏற்படுத்துகிறோம். அதற்குத் தேவையான பணம் திட்டங்கள் மூலமாக கிடைக்கிறது. பராமரிப்புக்கு எந்தவிதமான நிதியும் 10 ஆண்டுகளுக்கு ஒதுக்க முடியாத நிலை இருக்கிறது. ஏற்கனவே இருப்பவைகளுக்கான பராமரிப்பு தொகைதான் அவர்களிடத்திலே இருக்கிறதே தவிர, புதிய சாலைகளுக்கு பராமரிப்புத் தொகை அதிகம் இல்லாத காரணத்தாலே, ஊராட்சி ஒன்றியம் சாலைகளைப் பராமரிக்க முடியவில்லை. அதற்கும் அதிகமான பணத்தை பொதுப்பணித்துறையமைச்சர் அவர்கள் மானியத்திலே ஒதுக்குவார்கள் என்று நம்புகிறேன்.

இந்த நாட்டிலே இருக்கிற பிற்பட்டமக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்—இரண்டு தரப்பினருக்கும் இந்த சர்க்கார் செய்திருக்கிற சேவைகளையும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புவரை இருந்த சர்க்கார் செய்திருக்கிற சேவைகளையும் நாம் பார்க்கவேண்டும். மத்திய சர்க்கார் பிற்பட்ட மக்களுடைய நலனுக்காக தனியாக ஒதுக்கவில்லை. மிகவும் பிற்பட்ட மக்களுக்கென்று

தனியாக பிரித்து ஒதுக்காமல், மொத்தமாக ஒதுக்கினுர்கள். ஆனுல், நம்முடைய அரசு அதற்காக ஒரு இலாகாவை அமைத்து, அதற்காக ஒரு அமைச்சரைப்போட்டு, அதிலே கோடிக்கணக்கான ரூபாய்களை ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக்கிக்கொண்டிருக்கக் கூடிய நிலைமையை நாம் பார்க்கிரேம். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக 5.56 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிருர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 8.16 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிருர்கள். ஒவ்வொரு விதத்திலும் உயர்த்தியிருக்கிற அதே நோத்தில் வேலை கொடுப்ப திலேகூட அவர்களுக்குரிய வாய்ப்புகளை உயர்த்திக் கொடுத்துக் கொண்டிருக்கி ருர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும்—இரு சாராருக்கும் சமநிலை அளிக்கக்கூடிய நிலையை உருவாக்கி, வேலை வாய்ப்புகளை அளிக்கக் கூடிய செயல்களை அரசு படிப்படியாக செய்து வருவதை பாராட் டாமல் இருக்கமுடியாது. அந்த அளவோடு நின்றுவிடாமல், வீட்டு மனைகள் வழங்கிக் கொண்டிருக்கிரேம். அத்தோடு நின்றுவிடாமல், அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்ளக்கூடிய நிலைமையையும் உருவாக்கி இருக்கிரேம். ஏறக்குறைய ரூ. 4,000 கடன் கொடுக்கக் கூடிய நிலையை நம்முடைய மாநிலத்திலே அரசு செயல்படுத்தி வருகிறது. மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக, முன்பு ரூ. 8,000 கொடுக்கப்பட்டு வந்தது. ஆனுல், இன்றையதினம் ரூ. 20,000 கடன் கொடுக்கக்கூடிய திட்டமும், 20 ஆண்டு காலத்திற்குப் பின்னுலே அந்த பணத்தை திருப்பி வாங்கக்கூடிய திட்டமும் செயல்படுவதை எண்ணிப் பார்த்தால், அவர்கள் செய்யும் செயல்களை நிச்சயமாக நாம் புரிந்து கொள்ள முடியும். இந்த திட்டங்களை செயல்படுத்த ஆயுள் காப்பீட்டுறுதிக் கழகத்திட மிருந்தும் மற்ற வங்கிகளிடமிருந்தும் கடன் பெற்று செயல்படுத்த அக்கறை எடுத்துக் கொண்டதன் காரணமாக இன்றையதினம் வீடு கட்டுகின்ற திட்டம் வெற்றி பெறுகின்ற நிலைமையிலே இருக்கிறது.

கலைஞருடைய நிதிநிலை அறிக்கையில் நூற்றுக்கணக்கான சாதனைகள் இருக்கின்றன. மேலும் அந்த சாதனைகளைத் தொடர இருப்பதை பாராட்டி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது எனது ஓரிரு கருத்துக்களை நான் இங்கு சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, இன்று மத்திய அரசு 292 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக் கிறது. இந்த சந்தர்பத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் வரியில்லாத பட்ஜெட்டை நமக்கு அளித்திருக்கிருர்கள். அது மிகவும் பாராட்டத்தக்க

ஒரு காரியமாகும். அதை நான் மானமார வரவேற்கிறேன். அதே நேரத்தில் உபரி பட்ஜெட்டானது நமது பொருளாதார வளர்ச்சிக்கு மேம்பட்டதாக இருக்குமா என்ற என்னுடைய சந்தேகத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள முற்படுகிறேன்.

இன்று நிதிநிலை அறிக்கை வரியில்லாதது என்று அறிவித்து விட்டு, 1973-74-ம் ஆண்டு மத்தியில் புதிதாக வரிபோடாமல் இருக்க வேண்டுமென்றும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட ஏழை மக்களுக்கு 10,000 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான வகை செய்யப்பட்டிருக்கிறது. நமது தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய ஜனத்தொகையின் அடிப்படையில் பார்த்தால் இது மிகக் குறைந்த ஒரு எண்ணிக்கையாகும். ஆகையினால் இந்த எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கும் இதை அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்ட வாரியாக வீட்டுவசதி வாரியம் என்ற ஒரு தனி வாரியத்தினை அமைக்கவேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் இன்று மேட்டூரில் அமைந்திருக்கிற அலுமினிய பாக்டரியை தேசியமயமாக்குவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. இன்று நாட்டில் இப்படி புதிய புதிய நல்ல பாக்டரிகளை தேசியமயமாக்குவதால் நமது தமிழகத்தில் புதிய தொழில்கள் வளர்வது பாதிக்கும் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சரியாக நடக்காத தொழிற்சாலைகள் இருக்குமானால் அதை நாம் சட்டப்படி நல்லமுறையில் நடக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமேயல்லாது, எடுத்ததற்கெல்லாம் தேசியமயம் என்று ஆக்குவது தமிழ் நாட்டு வளர்ச்சியை பாதிக்கும். தமிழகத்தில் புதிதாக வெளி மாநிலங்களிலிருந்தும் நமது மாநிலத்திற்குள்ளேயும் புதிதாக எந்த தொழிலையும் ஆரம்பிக்க யாரும் பயப்படும் சூழ்நிலையை இது உருவாக்குமே தவிர, புதிதாக தொழிலை உண்டாக்காது என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொண்டு மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலையை தேசியமயமாக்கும் பிரச்சினையை முதல் அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றி சொல்லும்போது, மண்ணெண்ணெய், நெல், உணவு தானியங்கள், இவைகளுடைய விலைகள் விஷம்போல் ஏறிக் கொண்டிருக்கின்றன. மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2, ரூ. 2½-லே

விற்றுக் கொண்டிருக்கிறது. அரிசி விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. சம்சாரியிடமிருந்து வாங்கக்கூடிய நெல் குறைந்த விலையில் இருக்கும்போது, அரிசி பயங்கரமான விலையில் விற்றுக்கொண்டிருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. பருத்தியைக் குறைந்த விலையில் வாங்குகிறார்கள். ஆனால் நூல் விலையோ அதிகமாக ஏறிக்கொண்டிருக்கிறது. அதேபோல் உணவு தானியங்களின் விலை பயங்கரமாக ஏறிக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கான எந்தவித நடவடிக்கையும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லாதது வருந்தத்தக்கது. ஆதலால், விலைவாசி ஏற்றத்தை இன்றைக்கு தடுத்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்பைப்பற்றி குறிப்பிடும்பொழுது படித்த பட்டதாரிகள் வேலை தேடித் தரும் அலுவலகத்தில் கிட்டதட்ட 4 லட்சம் பேருக்கு மேல் பதிவு செய்திருப்பதாக ஒரு பத்திரிகையின் மூலமாக நான் அறிவேன், அவர்களுக்கெல்லாம் உடனடியாக வேலைவாய்ப்பு அளிக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வெட்டுப்பற்றிக் கூறும்பொழுது என் பகுதியிலே ரைஸ்மில்கள், விவசாயப் பம்புசெட்டுகள் இவையெல்லாம் சரியாக இயங்கமுடியவில்லை. மாலை 7 மணியிலிருந்து 10 மணி வரையில்தான் அங்கே மின்சாரம் கொடுக்கப் படுகிறது. ரைஸ்மில்லில் ஒரு மூட்டை நெல் அரைக்க 75 பைசா வாங்கிய நிலைமை போய் இன்றைக்கு ஒரு மூட்டை நெல் அரைக்க 5 ரூபாய் வாங்குகிறார்கள். அப்படி ஐந்து ரூபாய் கொடுத்தாலும்கூட அரைக்கமாட்டேன் என்று சொல்லக் கூடிய நிலைமைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையைப் போக்க ரைஸ்மில்களுக்கும், பம்புசெட்டுகளுக்கும் தேவையான மின்சாரம் வழங்க வேண்டும். எங்கள் பகுதி அதிகமாக பம்புசெட்டுகள் இருக்கக்கூடிய பகுதி. மின்சார வெட்டினால் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே பெண்கள் விவசாய வேலையை முடித்துக் கொண்டு பிறகு மாலை வேளையில் பீடி சுற்றுகின்ற வேலைக்குச் செல்வார்கள். ஆனால் இப்பொழுது மின்சார வெட்டுக் கொண்டுவந்திருப்பதன் காரணமாக அவர்கள் பகலிலே விவசாயப் பணியையும் செய்யமுடியவில்லை, அதே நேரத்திலே பீடி சுற்றுகிற வேலையையும் செய்யமுடியவில்லை. எனவே அவர்கள் எல்லாம் விவசாய வேலையைச் செய்யக்கூடிய முறையிலும் பீடி சுற்றுகின்ற வேலையைச் செய்கின்ற முறையிலும் மின்சாரம் இரவு 12, 1 மணிவரை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1973 மார்ச் 2] [திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

நெசவுத் தொழில், விவசாயம், பட்டுத் தொழில் போன்ற தொழில்களைக் கொண்டிருக்கின்ற தொகுதியாக என்னுடைய தொகுதி இருக்கிறது. நெசவுத் தொழில், பட்டுத் தொழில், பீடி சுற்றும் தொழில் இந்தத் தொழில்களில் பெரும்பான்மையானவர்கள் ஈடுபட்டிருக்கின்ற நிலையால் அங்கே அவர்களை சீக்கிரமாக காசநோய் பற்றிக்கொள்கிறது. அதற்கு வைத்தியம் செய்யவேண்டு மென்றால் அங்கேயுள்ள தொழிலாள மக்கள் நாகர்கோவிலுக்குச் செல்ல வேண்டிய நிலை—அதாவது எங்கள் தொகுதியிலிருந்து 60 மைல் தூரத்தி லுள்ள ஆசாரிப்பள்ளத்திற்குச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. அதற்காக 15 ரூபாய் செலவழித்துப் போகவேண்டியிருக்கிறது. அப்படியே அவர்கள் அங்கே சென்றாலும் கூட அவர்களுக்கு அட்மிஷன் கிடைப்பது இல்லை. பாப நாசம் அல்லது குற்றாலம் ஏதாவது ஒரு இடத்திலே காச நோய் மருத்துவ மனை அமைத்து அதன்மூலம் அந்தத் தொழிலாளர்களுக்கு சிகிச்சை வசதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மணிமுத்தாறு கால், கனடியன் கால் என்ற இரண்டு கால்கள் இருக்கின்றன. எங்கள் தொகுதி மட்டுமல்ல, நாங்குனேரி, சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம் போன்ற பல தொகுதிகள் அவற்றினால் பயன் அடைகின்றன. மணிமுத்தாறு காலில் தண்ணீர் இல்லாததால் அங்கே பயிர்கள் தீய்வு ஏற்பட்டு அறுக்கப்பட்ட நிலை ஏற்பட்டது. அதற்குக் காரணம் அந்த ஜில்லாவில் கிழக்குப் பகுதியில் உள்ள சில செல்வாக்கு உள்ள அரசியல் வாதிகள் அட்வான்ஸ் கால் என்ற பெயரிலே ஒன்றை அமைத்து தண்ணீர் அங்கிருந்து எடுத்துக்கொண்டு போய்விடுகின்ற நிலைமையினால் இந்த மணிமுத் தாறு கால், கனடியன் கால் இரண்டு பகுதிகளிலும் உள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மணிமுத்தாறு காலிலே 50 அடி தண்ணீர் ரிசர்வ் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டுமென்று ஜி.ஓ. போடப்பட்டிருந்தும் கூட அந்த உத்திரவு அங்கே மீறப்பட்டு இருக்கிறது. எனவே இந்த நிலையில் அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அந்த உத்திரவை கடைப்பிடிக்கச் செய்யக்கூடிய முறையில் கண்டிப்பாக உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக முக்கூடல், வீரமல்லூர் பாலம் சம்பந்தமாக நான் அடிக்கடி இங்கே எடுத்துக் கூறியிருக்கிறேன். தாமிரவருணி ஆற்றின் இரு கரைகளையும் இணைக்கக்கூடிய வகையில் ஒரு பாலம் ஏற்படுத்தவேண்டுமென்று ஏற்கனவே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. முக்கூடல் 15 ஆயிரம் மக்களைக் கொண்ட ஒரு மேஜர் பஞ்சாயத்து. அதேபோன்று 20 ஆயிரம் மக்களைக் கொண்ட மேஜர் பஞ்சாயத்தாக வீரமல்லூர் இருக்கிறது. இரண்டு ஊர்களுக் கும் இடையே இரண்டு மைல் தூரம் இருக்கிறது. சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் இப்

பொழுது விரமல்லூரிலே தான் இருக்கிறது. அதனால் முக்கூடலிலிருந்து அங்கே மக்கள் பதிவுசெய்வதற்கு செல்லவேண்டியிருக்கிறது. முக்கூடலில் பீடி சுற்றக்கூடிய மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். பெண்கள் அதிகமாக அங்கே அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். பெண்கள் அவர்கள் தொழிலைச் செய்வதற்கு ஆற்றைக் கடந்துதான் வரவேண்டிய நிலை இருக்கிறது. தென் கரையிலே உள்ள 70 சதவீத நிலத்திற்கு உரிமையாளர் களாக உள்ளவர்கள் வடக்குக் கரையிலே இருக்கிறார்கள். வைக்கோலோ, நெல்லோ, உரமோ மற்ற எந்தப் பொருளோ அங்கிருந்து இங்கே கொண்டு போகவோ இங்கிருந்து அங்கே கொண்டுவரவோ முடியவில்லை. முன்னாள் எங்கள் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரும் எனது தந்தையாரும் ஆன டி. எஸ். ஆதிமூலம் அவர்கள் இதைப்பற்றிப் பல முறைகள் இந்தச் சட்ட மன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதைப்பற்றி 1968-69 ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, அதை உடனடியாக சாங்ஷன் செய்யவேண்டுமென்று சிபாரிசு செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைபற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பிற்படுத்தப்பட்ட தொகுதி. அங்கே சேரன்மாதேவி யிலோ அல்லது கல்லிடைக்குறிச்சியிலோ ஒரு கல்லூரி ஏற்படுத்தித்தா வேண்டும். பாப்பான்குளத்திலோ அல்லது புதுபட்டியிலோ ஒரு அரசு உயர் நிலைப்பள்ளியையும் அமைத்துத் தரவேண்டும்.

முதியோர்கள் பென்ஷன் குறிப்பிட்ட அளவுக்குத்தான் இப்பொழுது கொடுக்கப்படுகிறது. யார் யார் தகுதியுள்ளவர்கள் ஆக இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் முதியோர் பென்ஷன் கொடுக்க அரசு ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன்.

* திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, 1973-74 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல் வதற்கு நான் முன்வந்திருக்கிறேன். தமிழ்நாட்டிலே மின்சார வெட்டு காரணமாக விவசாயிகள், ஏழைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இங்குப் பல உறுப்பினர்கள் எடுத்துக்கூறியிருந்தாலும் என்னுடைய தொகுதியிலுள்ள கடையம் பஞ்சாயத்து பகுதி மானாவாரிப் பகுதியாக இருப்ப தால், கிணற்றுப் பாசனத்தை நம்பி வாழ்கின்ற மக்கள் இருக்கின்றனர். இந்த நிலையில் மின்சார வெட்டின் காரணமாகப் பயிர்களுக்குப் போதிய தண்ணீர் சரியாகக் கிடைக்காமல் பயிர்கள் எல்லாம் அநேகம் கருகிப் போய்விட்டன.

1973 மார்ச் 2] [திரு. ச. சங்குமுத்து தேவர்]

கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்கப்பட்ட கடன்களையெல்லாம் அந்தப் பகுதியிலே உள்ள மக்களால் கட்டமுடியவில்லை. எனவே அந்தக் கடன்களை யெல்லாம் சற்றுக் காலம் தள்ளி வசூலிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அம்பாசமுத்திரம் பகுதியிலே நெசவுத் தொழிலாளர்கள் எல்லாம் மின்சார வெட்டின் காரணமாக சரியாக வேலை கிடைக்காத நிலையிலும் விலைவாசி ஏற்றத்தின் காரணத்தினாலும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய கூலியைக் கொண்டு அவர்கள் வாழ்க்கையை நடத்த முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. அவர்களுக்கு உணவுதானியங்கள் நியாயமான விலைக்குக் கிடைக்கக் கூடிய வகையிலே அரசு நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன். விக்கிரமசிங்கபுரம் ஆர்.வி. மில்லில் சுமார் 8,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஒரு நபருக்கு 5 நாட்களுக்கு ஒரு நாள் வேலைதான் கிடைக்கிறது. அதுவும் (லேஆப்) அரை சம்பளம்தான் கிடைக்கிறது என்று சொல்லும்போது அவர்கள் அந்த ஊதியத்தை வைத்துக் கொண்டு மின்வெட்டின் காரணமாக விலைவாசி ஏறியுள்ள இந்த நிலையில் வாழ்க்கை நடத்த முடியாமல் பெரும் அவதிப்படுகிறார்கள். ஆகையால் இதற் கெல்லாம் நிவாரணம் அளிப்பதற்கு அரசு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்தாக வேண்டும்.

அடுத்தபடியாக, நிலச்சீர்திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அம்பா சமுத்திரம் பகுதியில் அநேக கிராமங்கள் இனாம் கிராமங்களாக இருப்பதாலும் இனாம் ஒழிப்பு சட்டத்தை சரியாக அமுல் நடத்தாததினாலும் பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகள் எதுவும் அங்கு செய்ய முடியவில்லை என்பதை நான் இங்கே பலமுறை எடுத்துத் தெரிவித்திருக்கிறேன். இது வரையில் அது கவனிக்கப்படவில்லை என்று சொல்லி நான் அதை மீண்டும் வலியுறுத்த விரும்பு கிறேன். இனாம் கிராமங்களில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு அரசினரால் செய்யக் கூடிய உதவிகளை அவர்கள் அடைய முடியவில்லை. மேலும் அம்பா சமுத்திரம் பகுதியில் இனாம் கிராமங்களில் குடியிருப்பு மனைகளில் வசிப்பவர் கள் சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே குடியிருப்பு மனைகளைப் பட்டா செய்து கொடுத்திருப்பதைப் போன்று இவர்களுக்கும் பட்டா செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் நீர் தேக்கத்திலிருந்தும், மணிமுத்தார் நீர்த் தேக்கத்திலிருந்தும் கீழ்பாசனத்திற்கு அட்வான்ஸ்கார்க்கு தண்ணீர் விட்டதால் மேற்கத்திய பகுதி விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்த தடவையும் ஏப்ரல், மே,

மாதங்களில் தண்ணீர் விடுவதற்கு அரசின் அனுமதி கேட்டிருப்பதாகத் தெரிகிறது. சென்ற தடவை ஏற்பட்ட நிலைமைகளைப்போல் ஏற்பட்டுவிடாமல் மேற்கத்திய பாசனத்திற்கென்று தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனடியன் கால் பாசனத்தில் நியூ மாடல் ஸ்கீம் வேலை சரியாக நடக்காததால், கால்வாயில் தேவையான தண்ணீர் சரியாகக் கீழ் பாசனத்திற்குக் கிடைக்காததால் விவசாயிகள் பெரிதும் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். இந்த நியூ மாடல் ஸ்கீம் வேலை நல்ல முறையிலே கவனிக்கப்படவில்லை.

மேலும் தாம்பரவருணியில் ஆரம்பத்தில் உள்ள வடக்குக் கோடைமேல் அழகியன் கால்வாயில் அடிக்கடித் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. அந்தக் கால்வாயில் லையனிங் வேலை செய்ய வேண்டும் என்று பல முறை நான் சொல்லியிருக்கிறேன். அந்த வேலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

சிவந்திபுரம் கிராமத்தில் ஆர். வி. மில்லில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் அங்கு நிறைய பேர் வசிக்கிறார்கள். எனவே, அம்பாசமுத்திரம் பகுதிக்கும், சிவந்திபுரம் பகுதிக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடானநதி திட்டம், ராமாநதி திட்டம் பல வருஷங்களாக நடைபெற்றுக் கொண்டுவருகிறது. இன்னும் அவைகள் பூர்த்தியடையாமல் இருக்கின்றன. இதை விரைவில் நிறைவேற்றுவதோடு, கடானநதி, ராமாநதி அணை நீர்த் தேக்கத்திலிருந்து மேல் மட்டக் கால்வாய் அமைக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுவருகிறார்கள். அப்படி அந்த மேல்மட்டக் கால்வாயை அமைப்பதால் விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்தைச் சேர்ந்த ஐயனார்குளம், வடவ சமுத்திரம் போன்ற மானவாரி குளங்கள் பயனடையும் வகையில் உள்ளன. கடானநதி அணை நீர்த் தேக்கத்தில் போதுமான தண்ணீர் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அம்பாசமுத்திரத்தில் ஒரு கல்லூரி நடைபெற்று வருகிறது. இந்தக் கல்லூரி சரிவர இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் கல்லூரியை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, 1973-74 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, வரவேற்று சில வார்த்தைகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1973 மார்ச் 2]

இதற்குமுன் புதிய கட்சியாக உருவாகியிருக்கின்ற ஒரு கட்சியில் வேறொரு கட்சியிலிருந்து அங்கு சென்றிருக்கின்ற ஒரு பெரியவர் அவர்கள் நமது முதல் வரவர்கள் நிதியமைச்சராகயிருந்து நிதிநிலை அறிக்கையைப் படித்தத்தைப் பற்றி அது ஒரு திருக்குறள் காலட்சேபம்போல் இருந்ததாக இங்கே பேசும் பொழுது குறிப்பிட்டார்கள். நல்லவேளையாக அந்தப் பெரியவர், ஒரு குலத் திற்கு ஒரு நீதி வழங்க இராமாயணக் காலட்சேபம் என்று குறிப்பிடாமல், உலகப் பொதுமறையாகிய திருக்குறளைக் குறிப்பிட்டதற்கு அந்தப் பெரிய வருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மதிப்பிற்குரிய முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு. வகாப் அவர்கள் பேசும்பொழுது இந்த பட்ஜெட் இனிப்பு தரும் ஒரு பட்ஜெட் என்பதை எடுத்து விளக்குவதற்காக பலாச்சுளை போல் இனிக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பதில் அளிப்பதாக எண்ணிக்கொண்டு, அதே பெரியவர் அவர்கள் பலாச்சுளையைப் பற்றி விமர்சித்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றைமட்டும் பணிவோடு இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்படுகிறேன். பல் உள்ளவர் களுக்கு மட்டும்தான் பலாச்சுளையின் இனிமையைப் புரிந்துகொள்ள முடியும், உணர முடியும் என்பதைத் தாழ்மையோடு சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

நமது முதல்வரவர்கள் அளித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை விவசாயிகள், ஏழை எளியவர்கள், பாட்டாளிகள், என்.ஜி.ஒக்கள், தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகிய அனைவரும் எண்ணி மகிழத்தக்க பல நல்ல அம்சங்களை உள்ளடக்கியதாக, மறுமலர்ச்சியோடு சோஷலிச பட்ஜெட் டாக இன்றைக்குத் தமிழக மக்களால் வரவேற்கப்படுவதை இங்கேயுள்ள மாற்றுத் தாப்பினர்கூட, வெளியிலே பேசும்பொழுது வேறுவகையிலே பேசினாலும், நெஞ்சார மறுக்க முடியாது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே மிகக் குறிப்பாகச் சிலவற்றை நமது முதல் வரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது, 1,000 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கும் அரசாங்க சிப்பந்திகளுக்கு 10 ரூபாய் பஞ்சப்படி உயர்வு அளித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் எனது நன்றியை மாயூரம் என்.ஜி.ஒக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாயூரம் நகராட்சி முதல்நிலை நகராட்சியாக ஆனதற்குப் பிறகு கடந்த 1—1—1973 முதல் அங்கே நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி அதிக மாகக் கொடுக்கப்படுவதை அவர்கள் வரவேற்று, அமைச்சரவையைப்

பாராட்டி, முதல்வரைப் பாராட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிருர்கள், அவர்கள் சார்பாகவும், மாயூரம் பொதுமக்களின் சார்பாகவும் நமது அரசுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னென்றையும் இந்த நேரத்தில் குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு மருத்துவமனை பணியாளர்களின் எம்.எல்.ஏ.க்கள் என்பவர்கள் ஏறத்தாழ 3,000 பணியாளர்கள் இருப்பார்கள் என்று தெரிகிறது. அதே மருத்துவமனைகளில் கடைநிலை ஊழியர்களாகப் பணியாற்றுகின்றவர்களுக்குத் தருகின்ற ஊதியத்தைப்போலவே இவர்களுக்கும் தரப்படுவதாக அவர்கள் குறைபாடாக எடுத்துச் சொல்லி வருகிருர்கள். மிகச் சாதாரணமாக நமது முதல்வரவர்கள் அதைக் கவனித்துப் பார்த்து, மிக உன்னிப்பாக ஆராய்ந்துபார்த்து, அவர்களுக்கு ஓரளவிற்காவது கடைநிலை ஊழியர்களைவிட அதிகமான சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடும், பணிவன்போடும் கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

இங்கே பல உறுப்பினர்கள், மிகமிக முற்போக்குவாதிகள் என்று கருதப் படக் கூடியவர்களெல்லாம் இந்த பட்ஜெட்டைப் பற்றிப் பேசினுர்கள். அவர்களால் ஆதரிக்காமலும் இருக்க முடியவில்லை, எதிர்க்காமலும் இருக்க முடியவில்லை. குறிப்பாக நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் இந்த பட்ஜெட்டைப்பற்றி நினைக்கும்பொழுது தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், 47,000 பிற்பட்ட இனத்தவர்களுக்கும் குடியிருப்பு மனைகளை, அதுவும் அவர்களுடைய பணத்தில் கூட அல்ல, அரசாங்கப் பணத்திலேயே வாங்கிக்கொடுக்கும் நிலையை இந்த அரசிலேதான், முற்போக்குவாதிகள் என்று கூறிக்கொண்டிருக்கும் அவர்கள் காண முடிகிறது என்பதைப் பணிவன்போடு சொல்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். 20 ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில் நடக்காத காரியம், ஏழை எளியவர்களுக்கு, மிகவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு, பிற்பட்ட இனத்திலே உள்ளவர்களுக்கு, உழவர் பெருங்குடி மக்களுக்கு என்னென்ன நன்மைகள் இந்த ஆட்சியில் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று நெஞ்சிலே கை வைத்துப் பார்த்தால் நிச்சயமாக உணர முடியும். பன்னெடுங் காலமாக இந்த மன்றத்திலே பேசப்பட்டு வந்திருக்கிறது. மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சியினர், அவர்களுக்குள்ளே பிரிவு ஏற்படாத நேரத்திலும் கூட, குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே பெரிய போராட்டங்களை நடத்தியிருக்கிருர்கள், அதை நான் மறுக்கவில்லை. பல உயிர்களைப் பலிகொடுத்துக் கூட இருக்கிருர்கள். விவசாயப் போராட்டங்களை நடத்தியிருக்கிருர்கள். நான் அதை மறுக்கவில்லை, மறுக்கவும் முடியாது. அத்தகைய போராட்டங்களை

நடத்திய நேரத்திலும் கூட குத்தகை பாக்கியை விவசாயிகளுக்குத் தள்ளக் கூடிய சூழ்நிலையை அன்றைய அரசாங்கம் ஏற்படுத்தியதா என்றால் இல்லை யென்பதை இன்று நம்முடைய அரசு செய்து காட்டியதிலிருந்து உணர்ந்து பார்க்க வேண்டும். 81-வது பசலிக்குக் குத்தகை பாக்கியைக் கட்டிவிட்டால் போதும். அதற்கு முன்னால் எத்தனை ஆயிரம் ஏக்கருக்கு, எத்தனை கலம் நெல் கட்ட வேண்டுமென்று இருந்தாலும், எந்தக் கோர்ட்டில் வழக்கு இருந் தாலும் அவை எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதப்படும். அந்தந்த நேரத்தில் உழுது கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு 81-ம் பசலியில் அந்த நிலத்திற்கு மீண்டும் குத்தகை தொடர்ந்து நீடிக்கும் நிலைமையைத் தமிழக அரசு உருவாக்கி இருக்கிறது.

இன்றைக்கு இங்கு பேசிய மதிப்பிற்குரிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த, எங்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வடிவேல் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதே கருத்தை நேற்றைய தினம் என்று கருது கிறேன்—எங்கள் கட்சியைச் சேர்ந்த ஆடுதுறைத் தொகுதி உறுப்பினர் இராஜ மாணிக்கம் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். இந்த மிக முக்கியமான பிரச் சினையை நம்முடைய தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறதா, ஏற்றுக் கொள்ளவில்லையா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென்று பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'சொல்லாமல் செய்வர் பெரியோர்' என்ற அத்தகைய முறையில் பெரியோராக பல காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கும் முதல்வர் கலைஞர் அவர்களும், நமது அமைச்சரவையும் கோயில்களுக்கும், மடங்களுக்கும், குறிப்பாக தருமபுரி ஆதீனத்திற்கு இருக்கக் கூடிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், திருவாடுதுறை ஆதீனத்திற்கு, திருப்பனந்தாள் ஆதீனத்திற்கு இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான நிலங்கள்—கோயில்களுக்கு நிலம் வேண்டாமென்று சொல்லவில்லை; கோயில்களில் நடக்கும் அக்கிரமங்களைத்தான் கண்டிக்கிறோம் என்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றையதினமே சொல்லியிருக் கிறார்கள். அங்கு அக்கிரமம் நடக்கிறதா இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆறு கால பூஜை, எட்டு கால பூஜை நடைபெறுவதைக்கூட திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கவில்லை; ஒழுங்காக நடைபெற வேண்டுமென்றுதான் சொல்லி வருகிறது; அதே நேரத் தில் உபரியாக இருக்கும் பல்லாயிரக்கணக்கான நிலங்கள், நிலம் உழுப வனுக்குச் சொந்தமாக ஆக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் யார் யார் அந்த நிலத்தில் உழுது பயிரிட்டு வருகிறார்களோ அவர்களுக்கே உரிமை பாக்கும் சட்டத்தைக் கொண்டு வர இருக்கிற நமது சோஷலிச சர்க்கார், குறிப்பாக கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றிக் காட்ட

வேண்டுமென்று நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். கோயில்களுக்கு, மடங்களுக்குத் தேவையான நிலம் போக உபரியாக இருக்கும் நிலங்களை நிச்சயமாக அந்த நிலத்திலே நேரடியாக உழுது பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு உரிமையாக்கித்தரும் சட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறுதியாக என்னுடைய, தொகுதியைப் பற்றி சில வார்த்தைகளைப் பின்னால் சந்தர்ப்பம் கிடைக்கும் போது பேசினாலும் இப்போது ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைத் தனி மாவட்டமாக ஆக்குவதை அங்குள்ளவர்கள் மட்டுமல்ல, எல்லோரும் வரவேற்கிறார்கள். என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்—தஞ்சை மாவட்டமும் மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்கும் நிலை அதிகச் செலவினத்தைத் தரக் கூடியதாக இருக்கிறது என்றால் தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கி போன்ற பிற்பட்ட பகுதிகளை அமைக்கப்பட இருக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இணைக்க அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேருந்துகளைத் தேசியமயமாக்கி, இது ஒரு சோஷலிச சர்க்கார் என்று நிரூபித்துக் காட்டியது போல் லாரிகளையும் தேசியமயமாக்க வேண்டுமென்று தாழ்மையோடு வேண்டி, வாய்ப்பளித்த நமது மதிப்பிற்குரிய தலைவர் அவர்களுக்கும் மதிப்பிற்குரிய கொறடா அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

### (2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) பேரவை உறுப்பினர் திரு. சி. வே. வேலப்பன் சேலம் மத்திய சிறைச் சாலையில் காவலில் வைக்கப்பட்டிருப்பது குறித்து

MR. DEPUTY SPEAKER: I have to announce to the House that an intimation has been received from the Superintendent, Central Jail, Salem, that Thiru C. V. Velappan, M.L.A., arrested on 1st March 1973 was remanded for 15 days by the Additional First-Class Magistrate No. 1, Salem, from 1st March 1973 and admitted into the Central Jail, Salem, on the evening of the 1st March 1973.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

**பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

(5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

*A. Statutory Rules and Orders.*

52. Notification issued with G.O. Ms. No. 2582, Public (Services-A), dated the 25th October 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for exclusion of the posts of Joint Director of Rural Development in Tamil Nadu General Service from the Commissions' purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

53. Notification issued with G.O. Ms. No. 2583, Public (Services-A), dated the 25th October 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion of the post of Computors in Tamil Nadu State Transport Department within the Commissions' purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

54. Notification issued with G.O. Ms. No. 1850, Rural Development and Local Administration, dated the 6th September 1972, in regard to modification of the Rural Development and Local Administration Department Notification II-2 No. 299 of 1961, dated the 12th April 1961, relating to exclusion of certain areas from Kandiankuppam village of South Arcot district. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958.]

@ 55. Notification published in the Tamil Nadu Government Gazette, dated the 23rd January 1973, in regard to an amendment to Delimitation of Parliamentary and Assembly Constituencies Order. 1966. [Laid on the Table of the House under section 9 (2) of the Representation of the People Act, 1950 (Central Act 43 of 1950).]

*B. Reports, Notifications and Other papers.*

48. Notification issued with G.O. Ms. No. 3016, Agriculture, dated the 7th December 1972, in regard to an amendment to the Nilgiris Fishing Rules, 1966.

49. Notification issued with G. O. Ms. No. 1324, Labour and Employment, dated the 28th October 1972, in regard to an amendment to Tamil Nadu Plantation Labour Rules, 1955.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

@ Despatched to Members on 28th February 1973.

# HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the Sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M.) for Motion, (C.A.) for Calling Attention, (R.) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

**A list of abbreviations used in the Index is given below :—**

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... ... | Adjournment Motion. |
| Ann. ... ... ... | Announcement. |
| B.O.H. ... ... ... | Business of the House. |
| C.A. ... ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. ... ... ... | Calling Attention Statement. |

| | |
|---|---|
